வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
தெளிவான வானிலை

# உதயன்

சுடர் 30 கதிர் 175 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 07, வியாழக்கிழமை 21.05.2015

## செப்ரெம்பரில் புதிய நாடாளுமன்றம்

ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

விரிவு பக்கம் 25 இல்

21 MAY 2015

# முடங்கியது குடாநாடு



யாழ்ப்பாணம், மே 21

புங்குடுதீவு மாணவியின் படுகொலையுடன் தொடர்புடையவர்களுக்கு மிக விரைவில் - அதியுச்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று வடக்கில் பூரண ஹர்த்தால் - கடையடைப்பு நடத்தப்பட்டது. அதனால் இயல்புநிலை முற்றாகப் பாதிப்புக்குள்ளானது. யாழ்.குடாநாடு முழுமையாக வெறிச்சோடியது. போக்குவரத்தும் செயலிழந்தது. 10 ஆண்டுகளின் பின்னர் வடக்கில் கடைப்பிடிக்கப்பட்ட பூரண ஹர்த்தாலாக இது அமைந்தது.

ஹர்த்தால் நடவடிக்கைக்கு பொலிஸாரோ - புலனாய்வாளர்களோ இடையூறு விளைவிக்கவில்லை. பூரணமாக - அமைதியாகக் ஹர்த்தால் நடைபெற்றது. பிரதான வீதிகள், உப வீதிகள் என்று பரவலாக ரயர்கள் கொளுத்தி எரிக்கப்பட்டன. ஆயினும் எந்தவித அசம்பாவிதமும் நடைபெறவில்லை. சில முக்கியமான சந்திகளில் ஆயுதம் ஏந்திய பொலிஸார் நிறுத்தப்பட்டனர்.

மதியத்தின் பின்னர் சற்றுப் பதற்றமான சூழ்நிலை நிலவியதால், காலையில் வீதியில் பயணித்த பொதுமக்களும், மதியத்தின் பின்னர் வீடுகளுக்குள் முடங்கினர். யாழ்ப்பாணத்திலுள்ள சகல அரச அலுவலகங்களும் மதியத்துடன் செயலிழந்தன.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஹர்த்தாலுக்கு நேற்று அழைப்பு விடுத்திருந்தது. பக்.25

## வடக்கில் தொடர்கிறது பதற்றம்; ரணில்- த.தே.கூ. ஆலோசனை

கொழும்பு, மே 21

புங்குடுதீவு மாணவி படுகொலையையடுத்து யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அவசர பேச்சு நடத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்திலுள்ள பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த அவசரக் கலந்துரையாடலில் அமைச்சர் ரவூப் ஹக்கீம், பிரதியமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.

கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புங்குடுதீவில் பாடசாலை மாணவி கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து யாழில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை சம்பந்தமாகவும், நிலைமைகளைக் கட்டுப்படுத்தி யாழ். குடா நாட்டை இயல்பு நிலைக்குக் பக்.25

## பொலிஸாருடன் முரண்பாட்டை ஏற்படுத்த சில விசமிகள் முயற்சி

### அவர்களின் சாகசங்களுக்கு அடிபணிந்து விடாதீர்கள் என வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 21



"பொலிஸாருக்கும் எமக்கும் இடையில் மனஸ்தாபங்களை ஏற்படுத்தி நிலைமையைச் சீர்குலைக்க சில விஷமிகள் கங்கணங் கட்டிக் கொண்டு நிற்கின்றார்கள். அவர்களின் சாகசங்களுக்கு நாங்கள் அடிமையாகப் படாது. மனவருத்தத்தில் வாடும் மக்களின் முதுகில் ஏறிச் சவாரி செய்ய எத்தனிக்காதீர்கள். நீங்கள் அடையாளம் காணப்பட்டால் மிகவும் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க நேரிடும்." - இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன்.

"மக்கள் தமது கண்டனங்களை அமைதியுடன் இன்று (நேற்று) தெரியப்படுத்தி விட்டு நாளைய தினம் (இன்று) வழமைக்குத் திரும்ப உதவ வேண்டும். மக்கள் அமைதி காக்க வேண்டும். பொலிஸாரால் எம்மைக் கட்டுப்படுத்த முடியாது. இராணுவத்தினரால்தான் கட்டுப்படுத்த முடியும் என்று அரசியல் ரீதியாகப் பேசப்படும். பக்.25

## நீதிமன்ற கட்டட தொகுதி மீது நேற்று மோசமான தாக்குதல்

விசமத்தனமான செயல் என பொதுமக்கள் அதிருப்தி

- தாக்குதலால் பெரும் பதற்றம்:
- கண்ணீர் புகைக் குண்டுத் தாக்குதல்
- துப்பாக்கிச் சூடு
- 127 பேர் கைது

விரிவான தகவல், படங்கள் பக்கம் 6 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றத் தாக்குதலின் பின்னணியில் 2 அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள்

## சட்டத்தரணிகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 21
அப்பாவி இளைஞர்களுக்குச் சாராயம் வாங்கிக் கொடுத்து அரைகுறை மதுவெறியில் அவர்களை நீதிமன்ற எல்லைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நாம் அவதானிக்க முடிகிறது. இந்த அராஜகத் தாக்குதல் சம்பவத்துடன், சிறியளவிலான இரண்டு அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் இருவரும் உள்ளதை நாம் அவதானிக்க முடிந்தது என்று சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.
யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீதான தாக்குதல் சம்பவத்தையடுத்து ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நீதிமன்றக் கட்டடத்தொகுதியில் சட்டத்தரணிகள் அறையில் இடம்பெற்றது.
அதில் சட்டத்தரணிகள் பலர் கலந்து கொண்டனர். அவர்கள் சார்பாக சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது தாக்குதல் நடத்தி அராஜகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேற்று முன்தினமும் நீதிமன்றின் முன்பாக ஒன்றுகூடியவர்கள் நீதிமன்றங்கள் தொடர்பிலும், நீதிபதிகள், சட்டத் தரணிகள் தொடர்பிலும் ஆக்ரோசமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டிருந்தனர்.
நேற்றுச் சட்டத்தரணி ஒருவருக்குச் சிறிது காயம் ஏற்பட்டதோடு மற்றொரு சட்டத்தரணியின் கார் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.
பொலிஸாரால் பிடிக்கப்பட்டவர்களில் சிலர் தம்மிடமுள்ள கைத் தொலைபேசி ஊடாகச் சில சட்டத் தரணிகளுடன் தொடர்புகொண்டு முயற்சித்தபோதும் நாம் எவரும் உதவவில்லை.
தாக்குதல் சம்பவம் உள்நோக்கத்தைக் கொண்டது. தமிழ் மக்கள் மத்தியில் தற்போது நிலவும் சூழ் நிலையைப் பயன்படுத்தி யாழ்.மாவட்டத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்த நிலைமையை உருவாக்கி அதனூடாக இங்கு நெருக்கடி நிலையைத் தோற்றுவிப்பதற்கு தென்னிலங்கையின் சில சக்திகள் விரித்திருக்கும் சதி நிகழ்வுதானா இது என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ராணுவம், விஷேட அதிரடிப்படை இன்று வீதிக்கு வந்திருக்கக் காரணம் அந்தச் சிறிய அரசியல் குழுக்களே – என்றார். (த-4)

# சட்டத்தரணியுடைய கொடும்பாவி எரிப்பு



யாழ்ப்பாணம், மே 21
புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவியின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரை கொழும்புக்கு தப்பிச் செல்வதற்கு உடந்தையாக இருந்ததாகக் கூறப்படும் சட்டத்தரணி வி.ரி.தமிழ்மாறனுக்கு எதிராக வடக்கின் பல்வேறு பகுதிகளிலும் போராட்டம் நடத்தப்பட்டது. அத்துடன் அவரது கொடும்பாவி யும் எரிக்கப்பட்டது.
யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள், வி.ரி.தமிழ்மாறனின் ஒளிப் படத்தை தாங்கியவாறும், அவரைக் கண்டித்து எழுதிய வாசகங்களுடனும் பல்கலைக்கழக முன்றலிருந்து பேரணியாகப் புறப் பட்டுச் சென்றனர். யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக, காந்திசிலை அருகே கொடும்பாவியை போட்டு எரித்து தமது எதிர்ப்பை காண்பித்தனர்.
அதேவேளை, பளை பிரதேச விளையாட்டுக் கழகங்களை சேர்ந்த இளைஞர்கள் ஒன்று சேர்ந்து, பளை பொது விளையாட்டு மைதானத்திலிருந்து மத்திய பஸ் நிலையம் நோக்கி ஊர்வலமாக சட்டத்தரணி தமிழ்மாறனின் கொடும்பாவியை இழுத்துச் சென்று, எரித்து தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (ற-5)

# வன்முறையில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்வோம்

## மாவை. சேனாதிராசா எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 21
இளைஞர்களும், மாணவர்களும் அநீதிக்கு எதிராகப் பேரெழுச்சி கொண்டு அணி திரண்டது எழுச்சியைத் தந்தது. ஆனால் அதைப் பொறுக்காத உள்நோக்கம் கொண்ட சக்திகள் வன்முறையைத் தூண்டியும், வன்முறையில் ஈடுபட்டும் வருவது வேதனை தருகிறது.
அமைதி வழியில் நாம் போராடுவோம். நீதிமன்றைக் கூடத் தாக்கும் வன்முறை வேண்டாம். வன்முறையில் ஈடுபட வேண்டாம். மீண்டும் ஒரு பேரழிவுக்கு இட்டுச் செல்ல யாருக்கும் இடமளிக்க வேண்டாம். – இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சேனாதிராசா கேட்டுக் கொண்டுள்ளார்.
நீதிமன்றத்தின் மீதான தாக்குதல் தொடர்பில் அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
மாவட்டச் செயலகம் முன்பாக ஊர்வலங்கள் வந்து சேர்ந்த வேளையில், அந்தப் பெருந்திரளான கூட்டத்தின் முன்னால் பல பேர் மோட்டார் சைக்கிள்களில் தீவிர விசையுடன் சென்றதை அவதானித்து அச்சமடைந்தோம். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் மற்றும் யாழ். வர்த்தக சங்கத் தலைவரிடம் இதனால் ஏற்படக் கூடிய விபரீதம் பற்றிக் கலந்துரையாடினோம். இந்த நீதிக்கான போராட்டத்தை முதல் நாளிலும் வன்முறைக் களமாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தமையையும் ஆராய்ந்தோம்.
வன்முறை நிகழ்வுகள் இடம்பெறாமல் தடுக்கும் நோக்கிலும் கட்டுப்பாடற்ற நடவடிக்கைகளில் சில சக்திகள் நடந்து கொள்வதைக் கட்டுப் படுத்தும் வகையிலும், அமைதியான போராட்டம் நல்லெண்ணத்துடன் நடைபெற்ற பொழுதும் விரைவாக முடிவுக்குக் கொண்டு வரப் பட்டது. நீதி கோரி அரசிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோள் ஆவணங்கள் அவசரமாக கையளிக்கப்பட்டன.
பின்னர் சில சக்திகள் யாழ். நீதிமன்றக் கட்டடத்தையும் வழக்கறிஞர்களையும், வாகனங்களையும் தாக்கியும் கல்லெறிந்தும் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர். பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்து கலகச் சூழலைக் கட்டுப் படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டதாகவும் அறிந்த பொழுது வேதனையடைகின்றோம்.
கைது செய்யப்பட்டுள்ள ஈனச் செயல் புரிந்த கொலையாளிகளைத் தங்கள் கைகளில் தர வேண் டுமென்று வன்முறையில் ஈடுபடுவது, அந்த மாணவிக்கு நீதி கிடைக்காமற் போவதற்கே இந்தச் செயல்கள் இட்டுச் செல்ல முயற்சிக்கப்படுகிறதா? என்ற கேள்வி எழுகின்றது.
இந்த நிலையில் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் போதாதென்றும் இராணுவத்தை அழைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டதாகப் பொலிஸ்மா அதிபர் கருதுவதாக அறிந்து, எமது தலைவர் சம்பந்தன், இராணுவத்தை ஈடுபடுத்த வேண்டாம் எனக் கோரியுள்ளார்.
நன்றி உள்ள மக்களும், இளைஞர்களும், மாணவர்களும் அநீதிக்கு எதிராகப் பேரெழுச்சி கொண்டு அணி திரண்டது எழுச்சியைத் தந்தது. ஆனால் இதனைப் பொறுக்காத உள்நோக்கங் கொண்ட சக்திகள் வன்முறையைத் தூண்டியும், வன்முறையில் ஈடுபட்டும் வருவது வேதனை தருகிறது.
எனவே அமைதி வழியில் நாம் போராடுவோம். நீதிமன்றங்கள் நீதி வழங்கி அந்தக் கொலை காரர்களுக்கு உச்ச தண்டனை கிடைக்க வழிவகுப்போம். நீதிமன்றைக் கூடத் தாக்கும் வன்முறை வேண்டாம். வன்முறையில் ஈடுபட வேண்டாம். மீண்டும் ஒரு பேரழிவுக்கு இட்டுச் செல்ல யாருக்கும் இடமளிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டுள்ளார். (ற-5)

## தண்டனையை உறுதிப்படுத்த கையெழுத்து போராட்டம்

யாழ்ப்பாணம், மே 21
வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவியின் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களுக்கான தண்டனையை உறுதிப்படுத்துமாறு கோரி ஜனாதிபதி மற்றும் சட்டமா அதிபரிடம் கையளிக்கும் முகமாக மாபெரும் கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
நாடளாவீய ரீதியில் இடம்பெறவுள்ள இந்த கையெழுத்துப் போராட்டத்தில் அரசியல்வாதிகள், மதகுருமார்கள், கல்வியியலாளர்கள், ஊடகவியலாளர்கள், பல்கலை ஆசிரியர்கள், இளைஞர்கள், மகளிர் அமைப்புக்கள், பெற்றோர்கள், வர்த்தகர்கள் என அனைவரையும் கையெழுத்திட்டு ஒத்துழைக்குமாறு 'நாங்கள்' அமைப்பால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ற)

## அநாதரவான நிலையில் ஆண் குழந்தை மீட்பு

கிளிநொச்சியில் அநாதரவான நிலையில் விடப்பட ஆண் குழந்தை ஒன்று நேற்று இரவு பொதுமக்களால் கண்டுபிடிக்கபட்டு கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது.
பிறந்த இரண்டு நாள்களே ஆன ஆண் குழந்தை ஒன்றே அநாதரவாக கிளிநொச்சி நீதிமன்றத்துக்கு முன்பாக உள்ள கருணா நிலையத்துக்கு அருகாமையில் நேற்று இரவு போடப்பட்டிருந்தது. குழந்தை அழுகின்ற சத்தம் கேட்டு அருகில் சென்று பார்க்கும் போதே பொது மக்களால் கண்டுபிடிக்கபட்டது.
பின்னர் உடனடியாகவே அந்த ஆண் குழந்தை கிளிநொச்சி பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு கிளிநொச்சி பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டது. தற்போது இதுகுறித்துப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற-21)

# இளைஞர் சம்மேளனத்தின் ஏற்பாட்டிலும் போராட்டம்



யாழ்ப்பாணம், மே 21
புங்குடுதீவு மாணவியின் படுகொலைக்கு நீதி கோரி யாழ் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம் ஒழுங்கமைப்பில் நேற்றுக் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணியொன்று நடத்தப்பட்டது. யாழ் பொது நூலகத்துக்கு முன்பாக ஆரப்பிக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணி யாழ் பொலிஸ் நிலையத்தை அடைந்து அங்கிருந்து வைத்தியசாலை வீதி, கஸ்தூரியார் வீதி, மின்சார நிலையவீதியூடாக மீண்டும் வைத்தியசாலை வீதியை அடைந்து அங்கிருந்து மாவட்ட செயலகத்தை அடைந்தது.
அங்கு அரச அதிபர், ஆளுநர், யாழ் மாவட்ட பொலிஸ் உயர் அதிகாரி ஆகியோரிடம் மனுக்களை கையளித்தனர் ஆர்ப்பாட்டக்காரர்கள்.
இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் மகளிர் அமைப்புக்கள், பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்கள், இளைஞர் கழகங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளியிட்டனர். (த-10)

# யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும் ஆர்ப்பாட்டம்



யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் ஏற்பாட்டிலும் நேற்றைய தினம் கண்டன ஆர்பாட்டப் பேரணியொன்று நடத்தப்பட்டது.
யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் 300 க்கும் மேற்பட்ட மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணி கலட்டிச் சந்தி. இராமநாதன் வீதியூடாகப் பலாலி வீதியை அடைந்து அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதியை அடைந்து அங்கிருந்து முதலமைச்சர் அலுவலகத்தை அடைந்தது.
முதலமைச்சர் அலுவலகத்தில் முதலமைச்சரின் செயலாளரிடம் மனுவொன்றைக் கையளித்த தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் பின்னர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துடன் இணைந்துகொண்டனர். (த-10)

# நெல்லியடி பஸ் நிலையத்தின் புதிய கட்டடம் இன்று திறப்பு

வடமராட்சி, மே 21
நெல்லியடி நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய பஸ் நிலையக் கட்டடம் இன்று வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு, கரவெட்டிப்பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பஸ் நிலையத்தைத் திறந்து வைப்பார். சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் கலந்து கொள்வார்.
வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர், உறுப்பினர்கள் மற்றும் கரவெட்டிப் பிரதேச சபையின் நிதி உதவிகளுடன் பல மில்லியன் [illegible] ளது. (த-109-108-436)

## திறப்பு விழா

நேற்று திறப்பு விழா நடைபெறவிருந்த பஷன் வேல்ட் நிறுவனம் புங்குடுதீவு மகா வித்தியால மாணவி கொலைச் சம்பவம் தொடர்பில் நேற்றுமுன்னெடுக்கப்பட்ட ஹர்த்தாலால் குறிப்பிட்ட திறப்பு விழா நடைபெறவில்லை. இந்த நிகழ்வு எதிர்வரும் 25.05.2015 வெள்ளிக் கிழமை காலை 9.30 முதல் 10.30 மணி வரையுள்ள சுபவேளையில் இல.112, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் - 03

# ஸ்தம்பித்தது வடக்கு



யாழ்.நகர்





சாவகச்சேரி












சங்கானை





அச்சுவேலி



மன்னார்




மானிப்பாய்



மந்திகை






நீர்வேலி




பருத்தித்துறை





முல்லைத்தீவு



நெல்லியடி



பொன்னாலை



வல்வெட்டித்துறை



திருநெல்வேலி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநீதிக்கு எதிராக அணிதிரண்டது மாணவ சமூகம்

யாழ்ப்பாணம், மே 21

புங்குடுதீவு மகா வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவி கொடூரமாக – கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. முறை யான நீதி விரைவாகக் கிடைக்க வேண்டும் என்று வலியுறுத் தியும், குற்றவாளிகளுக்கு அதிகபட்ச 'தண்டனை வழங்க வேண்டும் என்று கோரியும் குடாநாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் மாணவர்கள் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களில் இறங்கியுள்ளனர். நேற்றும் பல பாடசாலைகளில் மாணவர்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் நேற்றும் கவனவீர்ப்பு சைக்கிள் பவனி மேற்கொண்டனர்.

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய மாணவர்களும், ஆசிரியர்களும் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

மட்டக்களப்பு வின்சன் மகளிர் கல்லூரி மாணவிகளும் நேற்று பாடசாலை முன்பாகக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரி மாணவிகளால் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அச்சுவேலி சந்தி வரை சென்று அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.ஒஸ்மானியா கல்லூரி, இஅல் ஹதீஜா பெண்கள் பாடசாலை, யாழ் முஸ்லீம் சமூகம் என்பன இணைந்து கவனவீர்ப்பு பேரணியை ஒழுங்கு செய்தி ருந்தன. ஒஸ்மானியா கல்லூரியில் இருந்து ஆரம்ப மான இந்தப் பேரணி யாழ்.நகரப்பகுதியை அடைந்து ஐந்து சந்தி, கே.கே.எஸ் ஊடாக மீண்டும் பாடசா லையை அடைந்தது.

தென்மராட்சிப் பிரதேச மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், கண்டனப் பேரணி சாவகச்சேரி பிரதேசத்தில் இடம்பெற்றது.

வடமராட்சியில் நேற்று வல்வை மகளிர் மகா வித்தியாலயம் மற்றும் அல்வாய் வடக்கு றோ.க.பாடசாலை, தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் என்பவற்றில் மாணவர்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய மாணவர்களும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி ஆசிரியர்களும் நேற்றுக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நேற்றுக்காலை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஒன்று கூடினர்.பின் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மாணவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினர்.

வவுனியாவில் தமிழ் மகா வித்தியாலயம் விபுலானந்தக் கல்லூரி, கலைமகள் மகா வித்தியாலயம், வவுனியா இந்துக் கல்லூரி சைவப்பிரகாச மகளிர் மகா வித்தியாலயம், முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின முன்பாக மாணவர்களும், ஆசிரியர்களும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டங்கைளை முன்னெடுத்தனர்.

வவுனியாவில் பாடசாலைகள் மற்றும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அதேபோன்று ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு வலது கரையில் மாணவர்களும் மக்களும் இணைந்து கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். இடதுகரை அ.த.க. பாடசாலை, ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயம், முத்துவிநாயகபுரம் தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கற்சிலை மடு அ.த.க. பாடசாலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதுடன், வடக்கு முதலமைச்சருக்கான மனு ஒன்றைப் பாடசாலை அதிபரிடம் கையளித்தனர். (ற)





யாழ்ப்பாணம் இந்து கல்லூரி



நல்லூர் மங்கையர்க்கரசி ம.வி.



அச்சுவேலி சென்.திரேசா



யாழ். ஒஸ்மானியா கல்லூரி



வடமராட்சி



மட்டக்களப்பு வின்சன் மகளிர்



வடமராட்சி



வடமராட்சி





வவுனியா

வவுனியா





அல்வாய் சின்னத்தம்பி வித்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விசுவமடு மகா வித்தியாலயம்



யாழ்ப்பாணம், மே 21

புங்குடுதீவு மகா வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவி கொடூர மாக - கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. முறை யான நீதி விரைவாகக் கிடைக்க வேண்டும் என்று வலியுறுத் தியும், குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க் வேண்டும் என்று கோரியும் குடாநாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் மாணவர்கள் தொடர்ச்சியான ஆர்ப்பாட் டங்களில் இறங்கியுள்ளனர். கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான பாடசாலை மாண வர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர்.

கிளிநொச்சி தர்மபுரம் மகா வித்தி யாலயம், முல்லைத்தீவு விசுவமடு மகா வித்தியாலம், முல்லைத்தீவு உடையார் கட்டு மகா வித்தியாலயம், கிளி.பரந்தன் குமரபுரம் இந்து மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள் நேற்றுப் பாடசாலைகளின் முன்பாகப் பெருமெடுப்பில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.
முல்லைத்தீவு தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள் நேற்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களால் புங்குடுதீவு மாணவி படுகொலைக்குக் கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
முள்ளியவளை கலைமகள் வித்தியாலய மாணவர்களும் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகா வித் தியால்ய மாணவர்களால் நேற்று கவன வீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.



குமரபுரம் இந்து ம.வி.



தர்மபுரம் மகா வித்தியாலயம்



தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலை



புதுக்குடியிருப்பு



தண்ணீரூற்று முஸ்லிம் ம.வி.



முள்ளியவளை கலைமகள் ம.வி.



முறிகண்டி இந்து ம.வி.



ஒட்டுசுட்டான் ம.வி.



வற்றாப்பளை ம.வி.

வற்றாப்பளை மகா வித்தியாலய மாணவர்களாலும் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பாடசாலையின் முன்பாகக் கூடிய மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். முல்லைத்தீவு கனிஷ்ட உயர்தர வித்தியாலய மாணவர்க ளாலும் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலய மாணவர்களும் நேற்றுக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கறுப்புப் பட்டி அணிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அவர்கள் குற்றவாளி களுக் குக் கடும் தண்டனை வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். முறிகண்டி இந்து வித்தியாலய மாணவர்களும் நேற்று ஆர்ப் பாட்டம் நடத்தினர். அந்தப் பகுதி வர்த்தகர்களும் அவர்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கனகராயன்குளம் மகா வித்தியாலய மாணவர்களாலும் பாடசாலை முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. புதுக்குடியிருப்பிலும் மாணவர் கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அந்தப் பகுதி வர்த்தகர்க ளும் மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கினர்.
(ந-421,433,102,108)



செம்மலை ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06



## வன்முறையில் ஈடுபட்டதாக 127 பேர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், மே 21


புங்குடுதீவில் மாணவி படு கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து யாழ். நகர் முழுவதிலும் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், யாழ். நீதிமன்றக் கட்டடத்துக்குச் சேதம் விளைவிக்கும் வகையில் வன்முறையில் ஈடுபட்டதாகத் தெரிவித்து 127 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாணவி படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேக நபர்கள் மற்றும் சுவிஸ் நாட்டில் இருந்து வந்து இந்தக் கொலையுடன் தொடர்புடையதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள நபர் ஆகியோர் யாழ். நீதிமன்றில் நேற்றுமுன்னிலைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் அங்கு திரண்டவர்களே மேற்படி வன்முறையில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைத் தாம் கைதுசெய்யவில்லை எனவும், வன்முறையாளர்கள் என இனங் காணப்பட்டவர்களையே கைது செய்யததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, 60 மோட்டார் சைக்கிள்களும் 43 சைக்கிள்களும் 5 ஓட்டோக்களையும் சம்பவ இடத்திலிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4-10)























## யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது நேற்று மோசமான தாக்குதல்

புங்குடுதீவு மாணவியின் படு கொலையைக் கண்டித்து நேற்று யாழ்ப்பாணத்தில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் யாழ். நீதிமன்றத்துக்கு முன்பாக திரண்ட குழுவினர் நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது கற்களை வீசி தாக்குதலை மேற்கொண்டு மோசமான வன்முறையில் ஈடுபட்டனர்.

நேற்று முற்பகல் நீதிமன்றத்துக்கு முன்பாக திரண்ட குழுவினருக் கும் பொலிஸாருக்கும் இடையே பெரும் முறுகல் நிலை ஏற்பட்டது. மாணவி படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படுவதாக வெளியான செய்தியை அடுத்து அங்கு பெரும் எண்ணிக்[illegible]னோர் திரண்டனர்.

இவர்கள் வீதியில் நின்று நீதிமன்றத்தை நோக்கி கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். பின்னர் திடீரென நீதிமன்ற பிரதான வாயிலை திறந்து நீதிமன்றத்துக்குள்ளே நுழைந்து அங்கு இருந்த பொருள்களை கையில் அகப்பட்ட வற்றால் அடித்து நொறுக்கினர். நீதிமன்ற [illegible] நீதிமன்றக் கட்டடத் தொகுதி போர்க்களமாகக் காட்சி அளித்தது. பொலிஸாரால் நிலைமையை கட்டுப் படுத்த முடியாமல்போக பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர். அங்கு இராணுவத்தின ரும் விசேட அதிரடிப் படையினரும் வரவழைக்கப்பட்டு கலைக்கப்பட் டனர்.எனினும் அவர்கள் யாழ். சிறைச்சாலை மீதும் தாக்குதல் நடத் தினர். பின்னர் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. (த-4-10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகலில் கூடத் தனியாக பெண்கள் நடமாட முடியாத ஒரு சூழ்நிலை

## மாணவியின் படுகொலைக்கு ஆனந்தசங்கரி கண்டனம்

யாழ்ப்பாணம், மே 21
யாழ் குடாநாட்டில் சமீப காலமாக வன்புணர்வுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. தமிழ்ப் பெண்கள், தமிழ்ப் பகுதிகளில் பகலில் கூடத் தனியாக நடமாட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டதை எண்ணி நாம் அனைவரும் வெட்கித் தலை குனிய வேண்டும் எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு மாணவியின் கூட்டுப் பாலியல் பலாத்காரத்தைக் கண்டிக்கும் வகையில் அவர் ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டள்ளதாவது:–

புங்குடுதீவு மாணவி வித்தியாவுக்கு நடந்த கொடூரமான, மிருகத்தனமான சம்பவம் எமது நாட்டில் என் ஞாபகத்துக்கு எட்டிய வரையில் நடந்ததும் இல்லை, நான் கேள்விப்பட்டதும் இல்லை. எத்தனையோ ஆசைக் கனவுகளுடன் தம் பிள்ளைகளைச் சீராட்டி வளர்த்த பெற்றோர்களுக்கு இப்படியான ஒரு முடிவு வருமெனக் கனவிலும் எவரும் நினைத்திருக்க மாட்டார்கள

வெறும் மன ஆறுதலுக்காக நாம் கூறும் வார்த்தைகள் எந்த விதத்திலும் மாணவி வித்தியாவின் பெற்றோர்களையோ உறவினர்களையோ சாந்தப்படுத்தப் போவதில்லை. இருந்தாலும் இந்தச் சம்பவம் நாடு முழுவதும் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள எமது உறவுகள் மத்தியில் தமது பிள்ளைக்கு நடந்த சம்பவமாகவே கருதி ஏற்பட்டிருக்கும் கோபம், ஆதங்கம் மற்றும் அனுதாபங்களைப் பார்க்கும்போது இவ்வாறான சம்பவம் நடப்பதற்கு இனி எவரும் இடமளிக்கமாட்டார்கள் என்பதே தெளிவாகின்றது.

நாம் அனைவரும் ஒன்று திரண்டு இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இதனுடன் சம்மந்தப்பட்டவர்கள் கடுமையாக தண்டிக்கப்படவேண்டும். விரைவாக, விரிவாக விசாரணை செய்யப்பட்டு, இந்தச் சம்பவத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் 'எவரையும் தப்பவிடாது, அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தி முன்மாதிரியான, கடுமையான தண்டனையை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல பாடசாலை மாணவிகளை, பெற்றோர்கள் இனிமேல் தனியாக அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும். அயலவர்களிடம் நல்லுறவுகளைப் பேணி தமது பிள்ளைகளை ஒன்றாகச் சேர்த்துப் பள்ளிக்கு அனுப்பவேண்டும். பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் மாலை நேர வகுப்புகள் மற்றும் மேலதிக வகுப்புகளை ஏற்பாடு செய்யும்போது, பெற்றோர்களுடன் இணைந்து மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளவேண்டும். இவ்வாறு செய்தால்தான் இத்தகைய கொடியவர்களிடமிருந்து மாணவிகளைப் பாதுகாக்க முடியும்.

இதுவே கடைசியாக இருக்கட்டும், அதுதான் மறைந்த மாணவி வித்தியாவுக்கு நாம் செய்யும் இறுதி அஞ்சலியாகும். அப்போதுதான் அவரின் ஆத்மா சாந்தி அடையும்–என்றுள்ளது.

(த–21)

# நேற்றைய தாக்குதலில் 3 பொலிஸார் காயம்

வலி.வடக்கு, மே 21
யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது நேற்று இடம் பெற்ற தாக்குதலைத் தடுக்கச் சென்ற பொலிஸார் மூவர் காயங்களுக்கு உள்ளாகி யாழ். போதனா வைத்தி சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது கல் வீசித் தாக்குதலை மேற்கொண்டவர்களைத் தடுக்கச் சென்ற பொலிஸார் மீது பரவலாக கல் வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது கடமையில் இருந்த 3 பொலிஸார் தலையில் காயங்களுக்கு உள்ளாகினர். அத்துடன் 10 க்கும் மேற்பட்ட பொலிஸார் சிறு காயங்களுக்கு உள்ளாகியதாகவும் கூறப்பட்டது.

(த–86)

## மரண அறிவித்தல்

# இளைய தம்பி நடராஜா



திருகோணமலை, திருக்கடலூரைப் பிறப்பிடமாகவும் யாழ். கச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைய தம்பி நடராஜா நேற்று முன்தினம் (19.05.2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-கற்பகம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-சுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகனும், புனிதம் மாவின் (மணி) அன்புக் கணவரும், நிஷாந்தன் (கனடா), துஷ்யந்தன் (முகாமையாளர், சிற்றி ஹாட்வெயார் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), உஷாநந்தினி (ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்றவர்களான ராஜகோபால், சித்திரவேல், அருளம்பலம், சிவபாலன் மற்றும் ஜெயம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மைதிலி (கனடா), சசிகலா, பிரபாகரன் (ஆசிரியர்),ஆகியோரின் அன்பு மாமனும், அஜந்தன் (கனடா), ஆதவி (கனடா) பதுஷா (வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி), லக்ஷயா (ஜோன் பொஸ்கோ), பிரதிஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2015) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.04, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
021 222 9068

## மரண அறிவித்தல்

# திருமதி மனோரஞ்சிதம்மா சுப்பையா (மனோர் ரீச்சர்)



கோப்பாய் வடக்கு அப்பிள்ளானையைப் பிறப்பிடமாகவும், இல.48 குமரபுரத்தில் வசித்து வந்தவருமான திருமதி மனோரஞ்சிதம்மா சுப்பையா (முன்னாள் ஆசிரியை - கிளி/ கிளிநொச்சி மகாவித்தியாலயம் - கிளி/பரந்தன் இந்து மகாவித்தியாலயம்) 18.05.2015 அன்று கனடாவில் இறைபதம் அடைந்தர்.

அன்னார் காலஞ்சென்ற முருகப்பர் சுப்பையா (ஓய்வுநிலை அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகப்பர் மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் இந்திரா (விவாக பிறப்பு இறப்புப் பதிவாளர், பரந்தன்) இந்திரநாதன் (அமெரிக்கா), இரஞ்சனா (ஓய்வுநிலை ஆசிரியை), மனோகரன் (பிரதேசசபை உறுப்பினர், கரைச்சி), குலேந்திரன் (அமெரிக்கா), சுபசீலி (கனடா) ஆகியோரின் அன்பு தாயாரும், காலஞ்சென்றவர்களான கமலாவதியம்மா, பேராயிரம் உடையார், தனலட்சுமி சிவலோகநாதன் மற்றும் செல்வநாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பத்மநாதன் (முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர்), மஞ்சுளா (அமெரிக்கா), யோகநாதன், (ஓய்வுநிலை கோட்டக் கல்வி அலுவலர்), ஜெயந்தினி, கருணாகரன் (கனடா), சத்தியதேவி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மயூரன், மாலதி, சுகந்தன், பாரதி, ஹரிஸ், ஆதவன், வைஸ்ணவி, பிரதீப், லதாங்கி, குமணன், ஆரணி சாந்தரூபன், நிவேதிகா, திருநயனி, ஜனதீபன், விவேகா, சிந்துஜா, ஜனார்த்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், நித்திலன், நித்திலா, சரண்யன், ஷானுயா, ஆதுரியன், அட்சரன் ஆகியோரின் அன்புப் பூட்டியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (21.05.2015) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும். துயர்பகிர்வு இன்று (21.05.2015) வியாழக்கிழமை அன்னாரின் இல்லமான இல. 151, முதலாம் ஒழுங்கை, குமரபுரத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், [illegible] கேட்டுக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



# திருமதி ஜெசலின் ஜேம்சன்

நொடாங்கொடை களுத்துறையைப் பிறப்பிடமாகவும், யோய் கொட் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. ஜெசலின் ஜேம்சன் 16.05.2015 சனிக்கிழமை கர்த் தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (21. 05.2015) வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் CACM பிப்பிலி கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகேசன் வீதி,
யோய் கொட், நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(59996)

தகவல்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

# திருமதி விஜயலட்சுமி லோறன்ஸ் சபாரஞ்சிதம்



தோற்றம் 20.07.1956
மறைவு 20.05.2015

பளையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி லோறன்ஸ் சபாரஞ்சிதம் 20.05.2015 புதன்கிழமை சிவபதமடைந்தார்

அன்னார் லோறன்ஸ் சபாரஞ்சிதம் அவர்களின் பாசமிகு மனைவி யும், திருமதி அ. சசிரேகா, பிரகலாதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகம்), பகீரதன்(இலங்கை வங்கி பருத்தித்துறை ) ஆகியோரின் அன்புத்தாயாரும்.யனுஷன், விரோஷனன் ஆகியோரின் பேர்த்தியும், தி.அருணாவுக்கரசரின் (நிர்வாகி, C.M.E கல்வி நிறுவனம் - பருத்தித்துறை) மாமியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (21.05.2015) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர் மடம் இந்து மயானத்திற்கு எடுத்ட்ச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

ஐயனார் வீதி, பருத்தித்துறை.
T.P: 077 453 4212

குடும்பத்தினர்.

# வைரமுத்து கந்தையா



தோற்றம் 03.02.1933
மறைவு 18.05.2015

நாவற்குழி, தச்சன்தோப்பைப் பிறப்பிடமாகவும் தம்பாலை அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து கந்தையா (18.05.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்தையா - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சிறி (இலங்கை), ஜெயந்தினி(கனடா), பாஸ்கரன் (கனடா), சுகந்தினி (கனடா), யாழினி(இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாக்கியம் மகேஸ்வரி(குஞ்சு), சின்னத்தம்பி, காலஞ்சென்ற இராசு மற்றும் பூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தேவராணி, காந்தராஜா, ஜீவகருணா, மகேந்திரம், கருணாநிதி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சின்னையா மற்றும் இராசதுரை காலஞ்சென்ற அம்மாச்சி மற்றும் செல்லையா அற்புதராஜா நேசமலர் கனகரத்தினம் காலஞ்சென்ற றோசாமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிலானி நிலோஜினி தபோசினி குயின்சன் கயிதா சிந்துஜா நிறுயா தினேஸ் தனிஸ் பிருத்திகா தனுஜன் தாருஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் அஷாந் இன் அன்புப் பூட் டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(21.05.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.00 மணியளவில் பூதவுடல் தம்பாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாச்சியார் வீதி, தம்பாலை, அச்சுவேலி.
0777 242025

தகவல்:
குடும்பத்தினர்.

# ஈனச் செயலை வன்மையாக் கண்டிக்கிறோம்

## சாவகச்சேரி இந்துக் கல்லூரிச் சமூகம் அறிக்கை

தென்மராட்சி மே 21
புங்குடுதீவு மாணவியின் படு கொலைக்கு சாவகச்சேரி இந் துக் கல்லூரிச் சமூகம் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.
இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில்,
இந்த ஈனச் செயலை மிக வன்மை யானக் கண்டிக்கின்ற நாம் எதிர் வரும் காலங்களில் எமது சமூகத் தில் பாதுகாப்பான வாழ்வியல் ஒழுங்களைக் கருத்தில் கொண்டு பின்வரும் கோரிக்கைகளை முன் வைக்கின்றோம்.
1. இக் கொலை தொடர்பாக விரை வாக விசாரணை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு அதி உயர் தண்டனை வழங்கப்படவேண்டும்.
2. கொலைக் குற்றவாளிகள் தப் பிச் செல்லச் சட்டம் எந்த வகை யிலும் இடமளிக்கக்கூடாது
3. பெண்கள், சிறுவர்கள், மாண வர்கள் பாதுகாப்பை சட்டம் உறு திப்படுத்தவேண்டும்.
மேற்படி எமது கோரிக்கைகளை கல்விச் சமூகத்தின் ஆதங்கங் களை மிக உன்னிப்பாக அவ தானித்துச் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டும் அனைத்துத் தரப்பினரும் செயற்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (த-9)

# மாணவி வன்புணர்வுக் குற்றவாளிகளை தண்டிப்பதற்கு ஷரியா சட்டம் வேண்டும்

## வடக்கு முஸ்லிம் பிரஜைகள் குழு வேண்டுகோள்

மன்னார், மே 21
புங்குடுதீவு பள்ளி மாணவி வித்தியாவை வன்புணர்வுக்கு உட்படுத்திப் படுகொலை செய்தவர்களுக்கு அரபு நாடுகளில் உள்ள இஸ்லாமிய 'ஷரியா' சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்து கடும் தண்டனை வழங்குவதன் மூலம் இலங்கையில் பெருகி வரும் குற்றச்செயல்களை ஒழிக்க முடியும் என வடக்கு முஸ்லிம் பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.
இவ் விடயம் தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–
உண்மையில், பள்ளி மாணவி வித்தியாவின் படுகொலையானது மனித நேயம் மிக்க எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத படுபாதகச் செயலாகும்.
இது போன்ற பல்வேறு வன்செயல்கள் போருக்குப் பின்னரான காலப் பகுதியில் வடக்கில் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளன.
இலங்கையில் அதிகரித்து வரும் இவ்வாறான குற்றச் செயல்கள் பல்லின சமூகம் வாழும் சூழலில் மாபெரும் கலாசாரச் சீரழிவை அதிகரிக்கச் செய்துள்ளது.
வடக்கில் அதிக அளவில் பாதுகாப் புப் படையினர் குவிக்கப்பட் டுள்ளபோதிலும் பல்வேறு காவல் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ள போதிலும் தொடர்ந்து அதிகரித்து வரும் குற்றச்செயல்களைக் குறைக்க முடியாத கையறு நிலை காணப் படுகிறது.
அதாவது தனி மனிதனின் பாது காப்பு உறுதிப்படுத்தப்படாமை யோடு உயிருக்கும் உத்தரவா தமற்ற நிலையே காணப்படுகிறது.
எனவே, வித்தியாவின் படுகொலை போன்ற அதிகரித்து வருகின்ற பெருங் குற்றச் செயல்களை தடுத்து நிறுத்துவதற்கும் தண் டனை வழங்குவதற்குமான மூலோ பாயமாக முஸ்லிம் 'ஷரியா' சட்டத்தை நடைமுறைப்படுத்து வதே ஒரே வழியாகும் – என்றுள் ளது. (த-56)


# ஆறாம் மாத நினைவஞ்சலி



மலர்வு
03.10.1932

உதிர்வு
25.11.2014

**கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்**
(ஆலடி - காரைநகர்)

ஆறு மாதங்கள் ஓடிச்சென்றாலும் ஐயா
ஆறாத்துயரினால் கலங்குகின்றோம் ஐயா
தீராத உங்கள் நினைவுகளுடன் எல்லோரும்
தினமிங்கு கலங்கி வாழ்கின்றோம் ஐயா
மாறாத சோகமெம் மனங்களில் குவிந்ததையா
மனைவி மக்கள் மருமக்கள் பேரர்கள் உறவினரெல்லோரும்
ஈழத்து சிதம்பர சுந்தரேசன் தாள் பணிகின்றோம் ஐயா
இறையடியில் உங்கள் ஆத்மா சாந்தி பெற

ஆறாம்மாத நினைவினில் கலந்த
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
ஆலடி - காரைநகர்

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (21.04.2015) செவ்வாய்க் கிழமை அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்
அமரர்
**ஆறுமுகம் கந்தையா**
(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)
அவர்களின் வீட்டுக்கிருத்திய- கிரியைகள் நாளை (22.05.2015) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத் தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்
குடும்பத்தினர்.
உத்திராவத்தை, புலோலி வடகிழக்கு, பருத்தித்துறை
தொ.பே: 021 226 0389

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
28
08
1977



ஆண்டவன் அடியில்
07
04
2015

அமரர் **அருளப்பு பிரகலாதன்** (அசோக்)

கடந்த 07.04.2015 அகாலமரணமடைந்த எமது குடும்ப குலவிளக்கின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனை 21.05.2015 வியாழக்கிழமை பி.ப 12.45 மணி யவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து மதிய போசனையிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியையில் ஆறுதல் வழங்கி கண்ணீர் அஞ்சலி வெளியி ட்டும் இறுதி மரியாதையில் கலந்து கொண்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.
குடும்பத்தினர்.
8ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு
0774428988

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15
01
1932



மறைவு
01
06
2014

அமரர் **திருமதி தங்கம்மா முத்துக்குமாரு**
(புங்குடுதீவு 07) திதி: சதுர்த்தி 21.05.2015

எங்கள் உயிரினில் கலந்து நெஞ்சமெல்லாம் தெய்வமாய்
நிறைந்திருக்கும் எங்களுக்கு உயிர் கொடுத்த அம்மா
அன்பின் திருவுருவாய் பண்பின் ஒளி விளக்காய் நிழல்
கொடுத்த தாயே உங்கள் நினைவால் வாடுகின்றோம்
நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து ஓராண்டு என்ன
எத்தனை யுகங்கள்சென்றாலும் என்றும் எங்கள் உயிர்
மூச்சிலே வாழ்ந்து கொண்டேயிருப்பீர்கள் எங்கள் அன்புத்
தெய்வத்தின் ஆத்மாசாந்திபெற இறைவனை
பிரார்த்திக்கின்றோம்

7/2, பிள்ளையார் வீதி, மூன்றாம் ஒழுங்கை,
திருநெல்வேலி.
குடும்பத்தினர்
077 394 12 75

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
29.03.1975

மறைவு
21.05.2012



**அமரர் நவரத்தினம் சிறீஸ்குமார்**
(முன்னாள் கிராம அலுவலர் நெல்லியடி கிழக்கு J/377)

அன்புக்கும் பண்புக்கும், பொறுமைக்கும் இலக்கணமாய்
எம்முன் வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் சேவகனே...
ஆண்டுகள் மூன்று கடந்துவிட்ட போதும்
அகலவில்லை உன் நினைவு எம் மனதில்
முப்பது ஆண்டுகள் மக்கள் சேவையை மூன்று ஆண்டுகளுக்குள்
முனைவுடனே முடித்துவிட்டீர்
நெல்லியடி கிழக்கு மக்களின் தொழில் வழிகாட்டி நீ
நேசத்தின் மறு உருவம் சிறீஸ்குமார் நீ
...றாலும் ஆறாது உன் பிரிவுத் துயரம்
...மாறாது உன்சேவை எம் மக்கள் மனதில்.

என்றும் நினைவுடன் ம.தேவராசா
கிராமமட்ட உத்தியோகத்தர்கள் கிராம மக்கள் - நெல்லியடி கிழக்கு J/377


# ரயர் எரித்த குற்றச்சாட்டில் 20 பேர் கைது

கரணவாய், மே 21
வடமராட்சிப் பகுதியில் வீதிகளில் ரயர் எரித்த குற்றச்சாட்டில் 20 இளைஞர்களைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.
புங்குடுதீவில் பாடசாலை மாணவி வ்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண் டித்து நேற்று யாழ். மாவட்டத்தில் பெரும் எடுப்பில் கண்டனப் பேரணிகளும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன.இதில்ஈடுபட்ட இளை ஞர்கள் சிலர் வீதிகளில் ரயர் களைப் போட்டுக் கொளுத்தினர்.
குறிப்பாக வடமராட்சியில் உடுப் பிட்டி, வல்வெட்டித்துறை, பருத் தித்துறை, நெல்லியடி உட்பட பல இடங்களில் இவ்வாறு ரயர்களை எரித்தனர். இவர்களில் பருத்தித் துறை ஓரம் கட்டைப் பகுதியில் வைத்து 18 இளைஞர்களையும், நெல்லியடிப் பகுதியில் வைத்து 2 இளைஞர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
இவர்களைப் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச் சாட்டின் கீழேயே கைது செய்ததா கப் பொலிஸார் தெரிவித்தனர். (த-108)


விளம்பரத் தொடர்புகளுக்கு
உதயன்
advt@uthayan.com
0215671111


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவியின் சாவுக்குக் காரணமானோர் சட்டத்தின் முன் தண்டிக்கப்படவேண்டும்

## தென்மராட்சி கல்வி வலய அதிபர்கள் வலியுறுத்தல்

தென்மராட்சி மே 21

பாடசாலை மாணவியின் அவலச் சாவுக்குக் காரணகர்த் தாவாகக் காணப்படும் அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டும். இவ்வாறு தென்ம ராட்சி கல்வி வலய அதிபர்கள் சங் கத்தினர் புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவியின் படுகொலை யைக் கண் டித்து விடுத்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-

மனித வர்க்கம் வெட்கித் தலை குனிய வேண்டிய காட்டுமிராண் டித்தன மான காமுகர்களின் இலக்குக்கு உள்ளாகி இரையான மாணவி யின் துயரச் சம்பவம் கல்வி உல கினிலே அதிர்ச்சியையும் வேத னையையும் ஏற்படுத்தியுள்ளது. எமது மாவட்டத்தின் தீவகக் கல்வி வலயத்தின் புங்குடுதீவு மகா வித் தியாலயத்தில் உயர்தர பிரிவில் சிறப்பாகப் பயின்றுவந்த பள்ளி மாணவியின் அவலச் சாவுக்கு காரணமாக இருந்தவர்களின் அநாகரீக மற்ற அருவருக்கத்தக்க செயலை தென்மராட்சி கல்வி வலய அதிபர்கள் சங்கம் வன் மையாகக் கண்டிக்கிறது.

ஏழ்மையின் பிடியிலிருந்து கல்வி மூலம் குடும்பத்தை ஏற்றம் காண வைக்கும் நோக்கில் மலர்ந்த மொட்டொன்று பொசுங்கிப் போயுள்ளது. இந்தச் செயலானது கல்வி உலகினுள் வாழ்ந்து கொண்டிருப்போரை அச்சத் திற்கும் கேள் விக் கும் உள்ளாக் கியி ருக்கின்றது அது மட்டுமன்றி எமது கல்விச் சமூகத்தி னரது குறிப்பாக மாணவர்களது எதிர்காலக் கல்வி வாய்ப்புக்கானசவா லாகவும் மாறியுள் ளது.

எனவே இவ்வா றான செயற்பாடு கள் தொடராமல் இருப்பதற்காகவும் மாணவர்களது கல்விப் பயணம் இருள் சூழ்ந்ததாக அமையாதிருப்பதற் கும் மேற்குறித்த ஈனச் செயலைப் புரிந்தோர் சட்டத் தின் முன் நிறுத்தப் பட்டு தண்டிக்கப் பட வேண்டியது காலத் தின் கட்டாயமான தொன்றாகுமே எனவும் சங்கத்தி னர் வெளியிட்ட அறிக்கையில்குறிப் பிடப்பட்டுள்ளது.

(த-9)


## உடன் தேவை

ஊர்ச் சேவல், ஊர்பேடு, கல்பேட் என்பன உடன் தேவை தொடர்பு தாசன் பாம் 158/3 கோவில் வீதி யாழ்ப்பாணம்.

**0773127498**



## இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் பாபு சாஸ்திரி ஸ்ரீமுருகன் ஜோதிடம்

வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரிக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கைரேகை பார்த்து பலன் சொல்லுவார், கணவன் மனைவி சண்டை, வேலை தொழில் உத்தியோகம் இப்படிப் பலவாறான தொழில் பாதி ப்பு, வீட்டில் பேய் பிசாசு நடமாட்டம், கண்திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இன்மை, குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு வேண்டிய வழிகளைக் காட்டுதல் ஆகியவற்றிற்கு பலன் சொல்வதோடு பிரச்சினைகளைத் தீர்த்தும் வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல்படுத்தல் போன்றவற்றையும் செய்வார். தமிழ் மொழிகளில் சொல்லப்படும். ஆகவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

இல. 175, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்விருந்தினர் விடுதி, G.G.Hotel, யாழ்ப்பாணம். தொடர்பு: **077 595 0463**


## கேள்வி அறிவித்தல்

### மாந்தைகிழக்கு பிரதேசசபை பாண்டியன்குளம்

மாந்தைகிழக்கு பிரதேசசபையின் கீழுள்ள விக்னேஸ்வரா சனசமூகநிலைய சந்தி தொடக்கம் பாண்டியன்குளம் 50 வீட்டுத் திட்ட சந்தி வரையான தார்வீதி 1100மீற்றர் 0.7 மில்லியன் ரூபா வில் மீள்திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளது இவ்வேலையை ஒப்பந்த அடிப்படையில் செய்ய விரும்பும் ஒப்பந்தகாரர்கள் C7 அல்லது அதற்குமேல் தரத் தினை உடைய கறுப்பு பட்டிய லில் சேர்க்கப்படாத ICTAD பதிவுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். வேலைசெய்ய விருப்பமான ஒப்பந்தகார்ரகள் 21.05.2015 தொடக்கம் 03.06.2015. பி.ப 02.00 மணிவரை அலுவகத்தில் நேரடியாக சமுகம் தந்து ரூபா.750 ஐ செலுத்தி கேள்விப் பத்திரங் களைப் பெற்று சமர்ப்பிக்கலாம். கேள்வி அன்றையதினம் பி.ப 02.30 மணிக்கு திறக்கப்படும்.

மேலதிக விவரங்களை அலுவலகத்திலும் அலுவலக தொலைபேசி 0243243663 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்

பாண்டியன்குளம். மாந்தைகிழக்கு பிரதேசசபை.

## வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் தொடர்பில் வர்த்தக நிலையங்கள் ஏலத்தில் விடுதல்

மேற்படி ஆலய மகோற்சவம் எதிர்வரும் 01.06.2015 திங்கட்கிழமை தொடக்கம் 15 நாள்கள் விழா நிகழ்வுகள் இடம்பெறும். உற்சவ காலத்தில் ஆலய நிலப் பிரதேசத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட விரும்பும் வர்த்தகப் பெருமக்கள் எதிர்வரும் 24.05.2015 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 - 5.00 மணிவரை இடம்பெறவுள்ளன. ஏல விற்பனையில் கலந்துகொள் ளும்படியும், சித்திபெற்ற கேள்விதாரர்கள் அன்றைய தினம் உரிய பணத்தைக் கட்டி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப் படுகின்றீர்கள்.

ஆலய நிர்வாகத்தினர்
சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயம்,
வரணி.

விளம்பர அனுசரணை:-

ஸ்ரீ வெற்றிலைக் கடை
சந்தை உட்புறம், கொடிகாமம்.

கோயில் திருவிழாக்களுக்குரிய அபிஷேகப் பொருள்களையும் வாசனைத் திரவியங்கள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

(41142)(10.6)


## STUDY IN INDIA / இந்தியாவில் உயர்கல்வி

ENGINEERING DEGREES

இந்தியாவில் தமிழ் நாட்டிலுள்ள பிரபல பொறியியல் கல்லூரியான **EXCEL ENGINEERING COLLEGE** யில் சேர்ந்து உலகலாவியரீதியில் புகழ்பெற்ற **ANNA UNIVERSITY** யின் **ENGINEER** ஆகுவதற்கான அரிய வாய்ப்பு.

- Aeronautical Engineering
- Civil Engineering
- Computer Science Engineering
- Electronics & Communication Eng.
- Mechanical Engineering
- B.Tech - Informa- -tion Technology

முதல் 5 விண்ணப்பதாரிகளுக்கும்
**50% SCHOLARSHIP**

தேவையான தகைமை
- GCE A/L Pass in Maths, Chemistry and
- Psychics + GCE O/L Credit Pass in English.

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் ஒரு வருட FOUNDATION COURSE ஐ முடித்து, பின் ENGINEERING DEGREE ஐ தொடரமுடியும் (A/L தேவையில்லை).

மேற்கூறிய **ANNA UNIVERSITY ENGINEERING DEGREE** இலங்கை UGC இனால் அங்கிகரிக்கப்பட்டதுடன் **ENGINEERING DEGREE** யை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு எதிர் காலத்தில் CANADA, AUSTRALIA, NEW ZEALAND, UK ஆகிய நாடுகளில் PERMANENT RESIDENCE (PR) பெற வாய்ப்புள்ளது.

Excel Engineering College
NH 47, Salem Main Rd, Komarapalayam - 637 303
Namakkal Dt, Tamil Nadu, INDIA
www.excelinstitutions.com

Call : (தமிழில்) 0777 - 767 818
scholinfo@yahoo.com



உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111


## முன்பள்ளி கல்வி டிப்ளோமா, குறுகிய காலப் பயிற்சி வளவாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

ஆறுதல் நிறுவனமானது ஒரு உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனமாகும். இந்த நிறுவனம் தற்போது சமூக விருத்திக்கான பல செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் அதே நேரம் முன்பள்ளிசார் செயற்பாடுகளில் பிரசித்திபெற்றதுமாகும். இந்த நிறுவனத்தினால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கும், ஆசிரியர்களாக இணையவிரும்புபவர்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட "முன்பள்ளி கல்வி டிப்ளோமா" வழங்கப்படுகின்றது.

இக் கற்கைநெறியின் தரத்தினை மேலும் விருத்தி செய்யும் நோக்கத்தோடு வடமாகாணத்திலுள்ள 05 மாவட்டங்களில் தகுதியானோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கல்வித்தகைமை :**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டம்/பட்டப்பின்படிப்பு பெற்றிருத்தல்.
2. முன்பள்ளிக் கல்விடிப்ளோமா பட்டப்படிப்பை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் அதிசிறப்பு அல்லது சிறப்பு மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல்.
3. க.பொ.த.(உத) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

**தொழில் தகைமை :**

முன்பள்ளிசார் செயற்பாடுகளில் குறைந்தது இரண்டுவருடம் நிரூபிக்கப்படக்கூடிய அனுபவம்.

**பாடநெறித்தலைப்புகள்:** சங்கீதம், சித்திரம், கைவேலை, நாடகம், நாட்டியம், உடற்கல்வி, சுகாதாரமும் போசாக்கும், குழந்தை உளவியல், கணிதஎண்ணக்கருவிருத்தி, விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், மொழிவிருத்தி, சுற்றாடல் சார் செயற்பாடுகள், முன்பள்ளிச் செயற்பாடுகளின் வரலாறும் விருத்தியும், முன்பள்ளி முகாமைத்துவம், வகுப்பறை முகாமைத்துவம், சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கற்பித்தல் முறைமை, கல்வித்தொழில்நுட்பம், மீளாய்வு முறைமைகள், முன்பள்ளி அடிப்படைத் தத்துவம், அடிப்படை ஆங்கிலமும், சிங்களமும், முன்பள்ளிகளுக்கான குறைந்த பட்ச தகைமைகள் (சர்வதேச - தேசியநோக்கு)

**குறிப்பு:** விண்ணப்பத்தில் நீங்கள் தெரிவுசெய்யும் பாடத்தையும், அதற்கானகாரணம், அனுபவம் என்பவற்றைக் குறிப்பிட்டு அனுப்புக. தகுதியானோருக்கு மட்டும் நேர்காணலுக்கு அழைக்கப்படுவர்.

முடிவு திகதி : விண்ணப்பங்கள் யாவும் 01.06.2015 இற்கு முன்னர் கிடைக்குமாறு ஆறுதல் நிறுவனம், இல.51, வைமன் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது aaruthaltrinco@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு பி.ப.04.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

ஆறுதல் நிறுவனம் சமக்கொள்கையுடைய நிறுவனமாகும். எனவே பெண்கள், மாற்றுத்திறனாளிகள் போன்றோரும் பாரபட்சமின்றி விண்ணப்பிக்கலாம்.

## சமூக சேவைகள் திணைக்களம் வடமாகாணம்

### பெறுகைகளுக்கான அழைப்பு

**கைதடி அரச முதியோர் இல்லத்துக்கான புதிய உலர் உணவு மரக்கறிகளும், பழங்களும், மாமிச உணவு, பொதியிடப்பட்ட உணவுப்பொருள்கள், வெதுப்பக உணவு, பால் மற்றும் தொற்று நீக்கி பொருள்கள் விநியோகம் - 2015/16**

01. வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த புதிய உலர் உணவு, மரக்கறிகளும் பழங்களும், மாமிச உணவு பொதியிடப்பட்ட உணவுப் பொருள்கள், வெதுப்பக உணவு, பால் மற்றும் தொற்று நீக்கி, பொருள்கள் விநியோகத்தர்களிடம் இருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.
02. விலைக்கேள்விதாரர் உலர் உணவு விநியோகம் தொடர்பில் வியாபாரப்பெயர் பதிவினை யுடைய ஒரு நபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
03. யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைமை அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
04. விலை மனுதாரர் கேள்வி கோரப்படும் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனங் களுக்கான உணவு வழங்கள் சேவையில் மூன்று (03) வருடத்துக்கு குறையாத முன் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
05. பொருத்தமான கேள்வி வைப்புப் பணம் செலுத்தப்பட்டமை பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
06. கேள்வி சமர்ப்பிப்பில் நாட்டமுள்ள விலைக்கேள்வி தாரர் இத் திணைக்களத்தில் கிடைக்கும் "Application For Bid Documents" என்ற படிவத்தினை பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா. 1.000/= காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் 22.05.2015 தொடக்கம் 12.06.2015 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். மேலும் 03.06.2015 காலை 10.00 மணிக்கு திணைக்களத்தில் இடம்பெறும் விலைக்கேள்வி தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டத்திலும் கலந்து கொள்ளலாம்.
07. "Diet Supply- 2015/16, Elders Home Kaithady, Reference No NP/24/2/3/03/2015-16" என்ற விவரம் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டி ருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விவரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.
08. விலைக்கேள்விகள் 15.06.2015 திகதி 13.30 மணிக்கு முன்பாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாக இத் திணைக்களப் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் இடுவதன் மூலம் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் 15.06.2015 ஆம் திகதி 14.00மணிக்கு திறக்கப்படும்.
09. விலைமனுதாரர் அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கும் போது அனுமதிக்கப்படுவர்.
10. கிடைக்கப் பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு அல்லது இப் பெறு கையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைகள் குழுவிற்கு அதிகாரம் உண்டு.

ந. இன்பராஜ்
தலைவர், திணைக்களப் பெறுகைகள் குழு,
சமூக சேவைகள் திணைக்களம் வ.மா.

கண்டி வீதி, கைதடி
தொலைபேசி : 021 3202464
தொலைநகல் : 021 753 9145
மின்னஞ்சல்: socialpp@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவியின் கொலையாளிகளுக்கு உச்சத் தண்டனை வழங்கவேண்டும்

## கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 21

புங்குடுதீவில் வித்தியாவுக்கு நடைபெற்ற கொடுரச் செயல் இனிமேலும் நடைபெறக் கூடாது.இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய அனைவருக்கும்பாரபட்சமின்றிஉச்சதண்டனை பெற்றுக்கொடுக்கப் பொலிஸார்நடவடிக்கைஎடுக்கவேண்டும் என கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் பொலிஸ் மா அதிபருக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

குறித்த சம்பவம் அனைத்து சமூகத்தவரையும் தலைகுனிய வைத்துள்ளது.அது மட்டுமன்றி எமது நாட்டிற்கும் ஒரு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு உரிய தண்டனையைப்பெற்றுக்கொடுக்கவேண்டும்.அதே நேரத்தில் இந்தச் சந்தேக நபர்களுக்குச் சார்பாக எந்த ஒரு சட்டத்தரணியும் நீதமன்றத்தில் முன்னிலையாகக் கூடாது.இந்தச் சம்பவம் அனைவருக்கும் ஒரு பாடமாக அமைய வேண்டும்.

அதே நேரம் இந்த விடயம் தொடர்பாக தாங்கள் மேற்கொள்கின்ற நடவடிக்கை தொடர்பாகவும் அவர்களுக்குப்பெற்றுக்கொடுக்கும்தண்டனைகள் தொடர்பாகவும் அனைத்து ஊடகங்களிலும் அறிவித்து இதனை அனைவரும் தெரிந்து கொள்ள நடவடிக்கை எடுக்க இலங்கையின் பொலிஸ் மா அதிபர் என்ற வகையில் நடவடிக்கை எடுப்பீர்களானால் அது ஏனையவர்களுக்கு ஒரு பாடமாக அமையும்.

குறித்த சந்தேக நபர்களை குற்றம் நிருபிக்கப்பட்டதன் பின்பு அவர்கள் அனைவரையும் இந்த சமூகத்தின் முன் கொண்டுவந்து இனம் காட்டப்படவேண்டும் எனவும் நான் உங்களிடம் கோரிக்கை ஒன்றையும் முன்வைக்கின்றேன்.

அண்மையில் டெல்லியில் மருத்துவக் கல்லூரி மாணவியின் சம்பவம் தொடர்பாக வழங்கப்பட்ட தீர்ப்பை போன்ற ஒரு தீர்ப்பைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமாக இருந்தால் அது வரவேற்கக் கூடிய ஒரு விடயமாகவும் இருக்கும்–என்றுள்ளது. (த)

# வன்முறைகளைக் கைவிட்டு கோரிக்கை முன் வையுங்கள்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 21

புங்குடுதீவு மாணவியின்கொலைக்கு நியாயம் கேட்கும் நாம் அனைவரும் வன்முறையைக் கைவிட்டு உணர்வெழுச்சியுடன் கோரிக்கைகளை முன்வைக்கவேண்டும் என இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மாணவியின் கொலையைக் கண்டித்து யாழ். மாவட்டச்செயலகத்துக்கு முன்பாக ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்று கூடினர். அத்துடன் வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து நிறுவனங்களும் மூடப்பட்டுப் பூரண ஹர்த்தால் அனுஸ்டிக்கப்பட்டதோடு ஆயிரக்கணக்கான மக்கள் கூடி தமது கண்டனத்தை வெளியிட்டதோடு ஜனாதிபதிக்கும் வடமாகாண முதலமைச்சருக்கும் மனுக்களைக் கையளித்தனர்.

மாணவியின்கொலைக்கு நியாயம் கேட்கும் நாம் அனைவரும் வன்முறையைக் கைவிட்டு உணர்வெழுச்சியுடன் கோரிக்கைகளை முன்வைக்குமாறும், குற்றவாளிகளுக்கு உயரிய தண்டனை வழங்க வேண்டுமென்றும் இச் சந்தர்ப்பத்தில் கேட்டு அநாகரிமான வன்முறைகளில் எவரும் ஈடுபடவேண்டாம் என்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

இந்தக் கண்டனப் பேரணியில் மதகுமார், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, வடமாகாண சபையின் அவைத் தலைவர் சிவஞானம், வடமாகாணக் கல்வி அமைச்சர் குருகுலராஜா, வடமாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்ரி அலன்ரீன், மாகாண சபை உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம், சுகிர்தன், ஆனால்ட், பரஞ்சோதி, கஜதீபன், சிவயோகன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், வர்த்தகர் சங்க பிரதிநிதிகள், பல்கலைக் கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரிய கலாசாலை அதிபர், விரிவுரையாளர்கள், கல்வியியற் கல்லூரி பிடாதிபதிகள், விரிவுரையாளர்கள் பெருமளவிலான பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (த–10)

# இளந்தலைமுறையை பாதுகாக்க அனைவரும் அணிதிரள வேண்டும்

## புதிய ஜனநாயக கட்சிக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 21

சமூகச் சிதைவுகளுக்கும் சீரழிவுகளுக்கும் பாலியல் வக்கிரங்களுக்கும் காரணமாக அமைந்துள்ளவற்றை அடையாளம் கண்டு அவற்றிலிருந்து பெண்களையும் இளந்தலைமுறையினரையும் பாதுகாப்பாதற்கான ஒரு பரந்த திட்டம் வகுக்கப்படவேண்டும். அதற்குச் சகல அரசியல் கட்சிகளும் சிவில் சமூக பொது அமைப்புகளும் சமூக அக்கறையுள்ள அனைவரும் ஒன்றுகூடிச் செயலாற்ற முன்வரவேண்டும் என அழைப்பு விடுத்துள்ளது புதிய ஜனநாயக மாக்சிச லெனிசிசக் கட்சி.

புங்குடுதீவில் இடம்பெற்ற மாணவியின் படுகொலையைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:–

நாட்டில் பெண்கள், யுவதிகள், மாணவிகள் சிறுமிகள் என்போர் மீதான பாலியல் வக்கிர செயற்பாடுகளும் சித்திரவதைகளும் வன்புணர்வுக் கொலைகளும்ஏனைய ஒடுக்குமுறைகளும் சமூகக் கொடுமைகளாகத் தொடர்கின்றன. இவற்றில் ஒன்றாக அண்மைய கொடூரச் சம்பவமாக வடபுலத்தின் புங்குடுதீவு மாணவி மீதான வன்புணர்வுப்படுகொலை இடம் பெற்றிருக்கின்றது. இந்த ஈனச் செயலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக மக்கள் மத்தியில் கண்டனங்களும் எதிர்ப்புகளும் கவனவீர்ப்புப் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் மக்களால் வெளிக்காட்டப்படுவரும் கோபமும் எதிர்ப்பும் நியாயமானவையாகும்.

அதேவேளை சமூகச் சிதைவுகளுக்கும் சீரழிவுகளுக்கும் பாலியல் வக்கிரங்களுக்கும் காரணமாக அமைந்துள்ளவற்றைக் அடையாளம் கண்டறியவும் அவற்றிலிருந்து பெண்களையும் இளந்தலைமுறையினரையும் பாதுகாப்பாதற்கும் ஒரு பரந்த திட்டம் வகுக்கப்பட வேண்டும். அதற்குச் சகல அரசியல் கட்சிகளும் சிவில் சமூக பொது அமைப்புகளும் சமூக அக்கறையுள்ள அனைவரும் ஒன்று கூடிச் செயலாற்ற முன்வரவேண்டும்.

சமூகச் சீரழிவுகளின் விளைவுகளுக்கு எதிராகப் போராடும் அதே வேளை அவற்றுக்கான காரணங்களைக் கண்டறிந்து திட்டமிட்டுச் அவற்றுக்கு எதிராகச் செயற்படுவதற்கு அனைத்து நேர்மையான மக்கள் சார்புச் கட்சிகளும் பொது அமைப்புகளும் முன்வரவேண்டும் –என்றுள்ளது. (த–10)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 07 1946

மறைவு 01 06 2014

அமரர் மகேஸ்வரி வேலாயுதபிள்ளை

திதி: சதுர்த்தி

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
என்றென்றும் ஒளிவீசி இருந்தாயே
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நீங்கா நினைவுகளுடன் நாம் இருப்போம்

கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு (5712) குடும்பத்தினர்



முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 1936.06.22

மறைவு 2014.06.01

அமரர் வல்லிபுரம் குலசேகரம்

(திதி - சதுர்த்தி (21-05-2015))

ஓராண்டு ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆனாலும் ஆறவில்லை எங்கள் துயர்
காலங்கள் மறையலாம் எம் கனவுகளைச் சுமந்த
உங்களின் நினைவுகள் என்றும் மறையாது
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

உசன், மிருசுவில்.

உங்கள் நினைவுகளுடன்
மனைவி - [illegible]
மகன் - [illegible]
மருமகன் - [illegible]


# புங்குடுதீவு மாணவி கொலைக்கு யாழ். மருத்துவர்கள் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 20

புங்குடுதீவில் மாணவி வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்டமை மிகவும் துன்பகரமானதும் அருவருக்கத்தக்கதுமான ஒரு செயலாகும். இது மனித நேயம் உள்ளவர்களின் ஆன்மாவை உறைய வைத்த ஒரு துன்பியல் நிகழ்வாகும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ். கிளைச் சங்கத் தலைவர் சட்ட மருத்துவ நிபுணர் உ.மயூரதன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களை விரைவாகச் சட்டத்தின் முன் நிறுத்தித் தகுந்த தண்டனை பெற்றுத் தருமாறு சம்மந்தப்பட்ட தரப்பினரைக் கேட்டுக்கொள்வதுடன் தொடர்ந்து இவ்வாறான சம்பவம் இடம் பெறாமல் தடுக்க ஆவன செய்யுமாறு சங்கம் வலியுறுத்துகின்றது.

இளைய தலைமுறையினரின் ஒரு சிலருடைய இந்த மனிதாபிமானதுக்குப் புறம்பான செயலானது அவமானத்துக்கு உரியதாக இருந்தாலும் பெரும்பாலான இளைய சமுதாயம் விழிப்புடன் இருப்பது நம்பிக்கை தருகிறது. மேலும் வரும் காலங்களில் போதைவஸ்து பாவனை, மதுப் பாவனை சமுதாயத்துக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுவர்களுக்கு எதிராக இதே விவேகத்துடன் இளந்தலை முறையினர் செயல்படவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

மருத்துவர்களாகியநாம்இச்செயலை வன்மையாக கண்டிப்பதோடு இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களின் நடவடிக்கைகளை உன்னிப்பாகஅவதானிப்போம் என்பதையும் அறியத் தருகிறோம். ஏன்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–4)

# குற்றம் புரிந்தவர்களுக்கு அதிக பட்சத் தண்டனை

## புங்குடுதீவு மாணவியின் படுகொலை குறித்து வடக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 21

புங்குடுதீவு பாடசாலை மாணவி கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்ட சம்பவமானது மக்களுக்குச் சேவையாற்றும் அரச சேவையாளர்கள் என்ற வகையில் எம் மத்தியில் மிகுந்த வேதனையும் அதிச்சியினையும் ஏற்படுத்தியுள்ள அதேவேளை, குற்றவாளிகளுக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளது வடமாகாண அபிவிருத்தி உதவியாளர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

[illegible] ஒரு நல்ல சூழலில் தான் கல்வி சாத்தியம் என்பார்கள். அதேபோல தற்போது புங்குடுதீவு மாணவிக்கு ஏற்பட்ட சம்பவம் இந்த நாட்டில் உள்ள அனைவருக்கும் பெரும் தாக்கத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான துன்பியல் சம்பவங்கள் எமது தேசத்தில் வரலாற்று ரீதியாக பதிவாகி வருகின்றன.

இவ்விதமான சம்பவத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும் என சம்பந்தப்பட்ட தரப்பினரைக் கேட்டுக் கொள்வதுடன் இச்செயல்களில் ஈடுபடும் காமுகர்களை சட்டத்தின் முன் நிறுத்தி அதிக பட்ச தண்டனை வழங்கவேண்டும். அத்துடன் எமது சமூகம் சார்ந்த அக்கறையுள்ள சட்ட புலமையாளராகிய சட்டதரணிகள் இக்கொலையாளிகளுக்கு சார்பாகச் செயற்படக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த–10)

# மிக் கொள்வனவு; கோத்தாவிடம் விசாரணை

கொழும்பு, மே 21

மிக் 27 ரக விமானம் கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவிடம் விசாரணைகள் இடம்பெறவுள்ளது.

கோத்தபாய ராஜபக்சவை எதிர்வரும் 20 ஆம் திகதி நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

2006 ஆம் ஆண்டு இலங்கை விமானப் ப்டைக்கு மிக் 27 ரக 04 விமானங்களைக் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில், இடம் பெற்ற நிதி முறைகேடு தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரிடம் விசாரணைகள் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயனின் மாபெரும் கலை இலக்கியத் தேர்வின் பரிசில் நாள்

























வெற்றியீட்டிய மாணவர் களுக்கான
உதயன் நாளிதழால் நடத்தப்பட்ட மாபெரும் கலை இலக்கிய போட்டிகளில் இந்த
பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. மாணவர் களுக்கு
நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள், ஓவியப் போட்டி பிரிவு 'ஏ' யில் வெற்றி பெற்ற பெற்ற
பரிசில்கள் வழங்குவதை இங்கு காணலாம்.

இந்தப் பரிசுக் கொண்டாட்டத்தின் ஏனைய நிகழ்வுகள் நாளைய உதயனில் வெளிவரும். விழாவில் பரிசு பெற்ற மாணவர்களுக்கான ஒளிப் படங்கள் தேவைப்படின் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 0718628380.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பிறருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிப்பணி இனிதாக நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். வீட்டுத் தேவைகளை, தாராள செலவில் பூர்த்தி செய்வீர்கள்.

**இடபம்:** தொழில், வியாபாரம் சிறக்க, விடாமுயற்சி தேவை. மிதமான வருமானம் இருக்கும். கணவன், மனைவி ஒற்றுமையுடன் இருப்பது, குடும்ப நலனைப் பாதுகாக்கும்.

**மிதுனம்**: தெய்வ அருள் பலமாக இருக்கும். கடமையை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரம், வளர்ச்சி பெறும். ஆரோக்கியம் மேம்படும்.

**கடகம்:** குடும்பத்தினரின் ஒத்துழைப்புக் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் அக்கறை செலுத்துவது நல்லது. பணியாளர்கள் பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றுவது நல்லது.

**சிங்கம்**: வாழ்வில் இனிய அனுபவம் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி நிலை அதிகரிக்கும். வருமானம் உயரும். மாணவர்கள் போட்டி, பந்தயத்தில் வெற்றி காண்பர்.

**கன்னி**: காணாமல் போன பொருள் அதிர்ஷ்டவசமாக கிடைக்கும். எதிரியும் பாராட்டும் சூழல் உருவாகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். அரசியல்வாதிகள் புதிய பதவி பெற யோகமுண்டு.

**துலாம்**: தொழில், வியாபார இலக்கை அடைய அனுபவசாலியின் வழிகாட்டுதல் கை கொடுக்கும். குடும்பத்தில் தெய்வ வழிபாடு சிறக்கும். உறவினர்கள் உதவிகரமாக நடந்து கொள்வர்.

**விருச்சிகம்**: நண்பரின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்ப்பு ஓரளவு நிறைவேறும். சுபம் குறித்த பேச்சு நடக்கும். அரசியல்வாதிகள் பிரச்னைக்கு தீர்வு காண்பர்.

**தனுசு**: செயலில் நேர்மை வெளிப்படும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். ஆரோக்கியம் சீராகும். விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

**மகரம்**: திட்டமிட்டுச் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். வியாபாரத்தில், உபரி வருமானம் கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும்.

**கும்பம்**: நிதானத்தைப் பின்பற்றினால் சிரமத்தை தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில், மிதமான லாபம் கிடைக்கும். வெளியூர் பயணம் மூலம் சந்தோஷம் காண்பீர்கள்.

**மீனம்**: தொழில் வளர்ச்சிக்கான புதிய உத்திகளை மேற்கொண்டு லாபம் காண்பீர்கள். உடல் நலனில் அக்கறை உண்டாகும். இனிய பொழுதுபோக்கில் ஈடுபடுவீர்கள்.

# கொலை செய்ய ஆள் தேவை

நமது ஊரில் அவ்வப்போது விநோதமான விளம்பரங்கள் வருவதுண்டு. ஆனால் சவுதி அரசு வெளியிட்டு உள்ள வேலை வாய்ப்பு விளம்பரம் அந்த நாட்டு மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

உலக அளவில் மிக அதிகமாக சாவுத் தண்டனை வழங்கும் நாடுகளில் சவுதி 3 ஆவது இடத்தில் உள்ளது. இந்த ஆண்டு மட்டும் 85 பேருக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் சாவுத் தண்டனையை நிறை வேற்றுவதற்கு மேலும் 8 பேர் தேவை என்று சவுதி அரசு விளம்பரம் செய்து உள்ளது.

இந்த வேலைக்கு முன் அனுபவம் உட்பட எந்த சிறப்பு தகுதியும் தேவை இல்லை என்றும், சாவுத் தண்டனைக்கு குறைவாக தண்டனை பெற்றவர்களின் உடல் உறுப்புகளை துண்டிக்க வேண்டியிருக்கும் என்றும் இந்த விளம்பரத்தில் தெரிவிக்கப் பட்டு உள்ளது.



# பதிலுக்குப் பதில்

சிறுவன் ஒருவனை தலையில் தாக்கிக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் தம்மால் பிடிக்கப்பட்ட இரு சிறுவர்களுக்கு குறிப்பிட்ட சிறுவனுக்கு ஏற்பட்டுள்ள அதேயளவான காயத்தை தலையில் ஏற்படுத்தி தீவிரவாதிகள் தண்டனை நிறைவேற்றியுள்ளனர்.

மேற்படி தீவிரவாதிகளின் கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்ற தண்டனை நிறைவேற்றக் கொள்கையின் பிரகாரம் இந்தத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈராக்கிய நகரான மொசூலைச் சேர்ந்த தண்டனை நிறைவேற்றத்திற்குள்ளான இரு சிறுவர்களும் குறிப்பிட்ட சிறுவனின் தலையில் தாக்கி அவனைக் காயப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் தாக்கிய சிறுவர் இருவரையும் பிடித்த தீவிரவாதிகள், பாதிக்கப்பட்ட சிறுவனின் தலையில் ஏற்பட்ட காயத்தை அளவுகோலால் அளந்து அதே அளவான காயத்தை குற்றச்சாட்டுக்குள்ளான சிறுவர்கள் இருவரது தலையிலும் ஏற்படுத்தியுள்ளனர்.

I Like

விலையில்லாத ஓர் ஓட்டை டயரை
ஓட்டி விளையாடியபோது
கிடைத்த மகிழ்ச்சி... விலை மதிப்புள்ள
வாகனத்தை ஓட்டும்போது கிடைப்பதில்லை.

# கொஞ்சம் சிரிங்க பாஸ்...

*ஆசிரியர் : உன்னிடம் 10 சொக்லேட் இருக்கு. அதில மூன்று உமாவுக்கு கொடுக்குற, மூன்று வித்யாவுக்கு கொடுக்குற, மூன்று சிவாஜினிக்கு கொடுக்குற, அப்ப உனக்கு என்ன கிடைக்கும்...?*

*மாணவன் : புதுசா எனக்கு மூன்று கேர்ள் ப்ரெண்ட் கிடைக்கும்..!*

*நாங்கெல்லாம் அப்பவே அப்படித்தான்*



# புலிக்காக பாயும் புலி பின்வாங்குகின்றது ?

சிம்புதேவன் இயக்கத்தில் விஜய் நடித்துள்ள திரைப்படம் புலி. திரைப்படத்தின் அனைத்து கட்டப் படப்பிடிப்பும் முடிவடைந்து தற்போது இறுதிகட்ட பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. தீபாவளி தினத்தில் திரைப்படம் வெளியாகும் என்று கூறப்பட்டது.

ஆனால் தற்போது, அது செப்ரெம்பர் 19 ஆம் திகதி விநாயகர் சதுர்த்தியன்று வெளியாகும் எனக் கூறப்படுகிறது. இந்த நிலையில், சுசீந்திரன் இயக்கத்தில் விஷால் நடித்து வரும் பாயும்புலி திரைப்படத்தையும் அதே விநாயகர் சதுர்த்தி யன்று வெளியிட ஏற்கெனவே முடிவு செய்து வைத்திருந்தனர்.

ஆனால், இப்போது விஜயின் புலி வெளி யாகயிருப்பதை அறிந்து, பாயும் புலி வெளியீட் டுத் திகதியை மாற்றி விட்டார்களாம். அதாவது, விஜய் திரைப்படம் வெளியாகயிருந்த தீபாவளி அன்று விஷாலின் பாயும்புலி வெளியாகிறதாம். ஒரேநாளில் விஜய் திரைப்படத் துடன் மோது வது பிரச்சினையில்லை.

அதனால் தனது திரைப்படத்தின் வசூல் பாதிக்கப்படக்கூடாது என்பதை கருத்தில் கொண்டே பின்வாங்கியிருக்கிறாராம் விஷால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கையும் மனிதர்களும்

ராஜராஜன்

எங்குபார்த்தாலும் பச்சைப் பசேல் என்ற தோற்றத்துடன் காணப்படும் வயல் வெளிகள். அவற்றின் ஒரு புறத்தில் கம்பீரமாக எழுந்து நிற்கும் ஆலயம். ஆலயத்தைச் சூழவுள்ள நிலத்தில் கிளை பரப்பி நிற்கும் பெரு விருட்சங்கள் சூரிய ஒளியைத் தடுத்து அவை தந்து கொண்டிருக்கும் நிழல் உடலை மட்டுமல்ல உள்ளத்தையும் குளிரச் செய்யும் அதிசயம். இந்த இதமான சூழ்நிலையில் மெல்ல வீசிக்கொண்டிருக்கும் தென்றல் காற்று எமது உடலை வருடிச் செல்லும்போது உலகையே மறந்து ஒரு கணம் நிற்கின்றோம். இயற்கையின் விரோதங்களில் இதுவொரு சிறுபங்குதான்.

மனிதர்கள் விஞ்ஞானத்தின் உதவியுடன் புதிய புதிய வசதிகளை ஏற்படுத்திக் கொண்டாலும் இயற்கையின் கொடைகளுக்கு இவை ஈடாகவே மாட்டாது . இயற்கையை வெல்லவும் அவனால் முடியாது.

ஐம்பெரும் பூதங்களையும் அடக்கி ஆளும் வல்லமை இயற்கையிடமே காணப்படுகின்றது. மனிதர்களால் இது முடியவே முடியாது. இயற்கை கொள்ளுகின்ற ஆத்திரத்தின் வெளிப்பாடுகளாக சுனாமி, நிலநடுக்கம், சூறாவளி, பெருவெள்ளம் ஆகியவற்றை நாம் காண்கின்றோம். இவற்றை எதிர்த்து அடக்கி வைக்கின்ற வல்லமை எம்மிடம் இருப்பதில்லை. ஆனால் இயற்கைக்கு விரோதமான செயல்களில் ஈடுபடவே எம்மால் முடிகின்றது.

பஞ்ச பூதங்களில் ஒன்றான காற்று கிடைக்காது விட்டால் இந்த உலகில் ஒன்றுமே இயங்க முடியாது. உயிர்களின் இயக்கம் காற்றை அடிப்படையாகவே கொண்டுள்ளது. தூய காற்று மனிதர்களின் ஆரோக்கியத்துக்கு மிகவும்அவசியமானது. ஆனால் இதைத் தெரிந்து கொண்ட போதிலும் மனிதர்களே அதை மாசுபடுத்தும்காரியங்களில் ஈடுபடுகின்றனர்.

அண்மையில் நோபாள நாட்டையே சின்னாபின்னமாக்கிய நிலநடுக்கம் இயற்கையின் கோரத் தாண்டவத்தின் ஒருபகுதிதான். இதற்குப் பல்வேறு விஞ்ஞான பூர்வமான விளக்கங்கள் கூறப்பட்டாலும் மனிதர்களின் கொடுமையான செயல்களைப் பொறுத்துக் கொள்ளாத இயற்கையின் சீற்றமே இந்த நிலநடுக்கத்துக்குக் காரணமெனக் கூறுகின்றனர். உலகின் ஒரேயொரு இந்துத்துவ நாடான நேபாளத்தில் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மிருகங்கள் பலியிடப்பட்டு வருவதை இயற்கையால் பொறுத்துக்கொள்ள முடியவில்லையென அவர்கள் கூறுகின்றனர். மிருகங்களை இவ்வாறு பலியிடுகின்ற உரிமை மனிதர்களுக்கு இல்லையெனவும் அவர்கள் வாதிடுகின்றனர்.

மலைகளில் உற்பத்தியாகும் ஆறுகள் பூமியில் தாம் விரும்பிய இடங்களின் ஊடாக ஓடிச்சென்று கடலில் கலப்பதுதான் இயற்கையின் நியதியாக இருந்தது. ஆனால் மனிதர்கள் தமது தேவைகளைக் கருத்தில்கொண்டு ஆறுகளை மறித்து அணைகளைக் கட்டி அங்கு பெருமளவு நீரைத் தேக்கி வருவதால் பூமியின் சமநிலை பாதிக்கப்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். பூகம்பம் ஏற்படுவதற்கு இதுவுமொரு காரணமென்பது அவர்களின் வாதமாகும்.

இதைப் போன்றுதான் மரங்கள் பெருமளவு அழிக்கப்படுவதாலும் பருவநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு, பூமி அவலங்களை எதிர்கொண்டு வருகின்றது. மழை வீழ்ச்சிக்குரிய முக்கிய காரணிகளில் ஒன்றாக மரங்கள் காணப்படுவதால் பருவ மழை பொய்த்து வருகின்றமைக்கு மரங்களை வெட்டி அழிப்பது பிரதான காரணியாக விளங்குகின்றது.

நீர், இயற்கை எமக்கு அள்ளித் தருகின்ற அருங்கொடையாகும். நீரின்றி உலகில்லை என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால் மனிதர்கள் அதையும் விட்டு வைக்கவில்லை. அதிகரித்த இரசாயனங்களின் பாவனை காரணமாக நிலத்தடி நீர் மாசடைந்து காணப்படுகின்றது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் ஆறுகள் மற்றும் நீர் நிலைகளை மனிதர்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு மாசுபடுத்தி விட்டன.

மனிதர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சில வகை சூரியக் கதிர்களை வடிகட்டிப் பாதுகாத்து வந்த ஓசோன் படலத்தையும் மனிதர்கள் விட்டு வைக்கவில்லை. ஓசோன் படலத்தில் ஏற்பட்ட துவாரங்கள் மோசமான விளைவுகளை ஏற்படுத்தவல்லன.

அன்று இயற்கையையே மனிதர்கள் தமது தெய்வமாக வணங்கினார்கள். இயற்கைக்கு மாறாக எதனையும் செய்வதற்கு அவர்கள் துணிந்ததில்லை. அவர்களின் செயல்கள் யாவும் இயற்கையோடு இணங்கியதாகவே காணப்பட்டன. அதனால் நீண்டகாலம் ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு அவர்களால் முடிந்தது.

ஆனால் இன்றைய நிலை என்ன? இயற்கையோடு மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும் மனிதர்கள் தெரிந்து கொண்டே தமக்குரிய சவக்குழிகளை விரைந்து அமைத்துக்கொள்கின்றனர். இயற்கையைப் பகைப்பதால் அழிவைத் தவிர வேறொன்றும் மனிதர்களுக்குக் கிடைக்கப் போவதில்லை.

# எதிர்காலத்துக்கு ஏற்பத் தன்னை மாற்றியமைக்கும் ஜெஸ்டெட்னர்

1964 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட, பரிபூரண காகிதாதிகள் தீர்வுகளை வழங்கும் ஜெஸ்டெட்னர், கடந்த ஆண்டில் தனது 50 ஆவது வருட பூர்த்தியை பொது பட்டியலிடப்பட்ட நிறுவனமாக கொண்டாடியிருந்தது. எதிர்காலத்துக்கேற்ப தன்னை மாற்றியமைத்துக் கொள்ள முன்வந்துள்ளது.

ஆரம்பத்தில் 3ஆக காணப்பட்டு, தற்போது 21ஆக விரிவடைந்துள்ள வேகமாக வளர்ந்து வரும் வலையமைப்புடன், கம்பனி தனது சந்தைப் பங்கையும் விஸ்தரித்துள்ளது. துறையில் காணப்படும் முதல் மூன்று தீர்வுகள் வழங்குநர்களில் ஒன்றாக தன்னையும் நிலை நிறுத்தியுள்ளது.

ஜெஸ்டெட்னர் ஓஃவ் சிலோன் பிஎல்சி, தனது புதிய வர்த்தக குறியீட்டை சினமன் கிராண்ட் ஹோட்டலில் இடம்பெற்ற வைபவத்தின் போது அறிமுகம் செய்திருந்தது. இந்நிகழ்வு ஏப்ரல் 29ஆம் திகதி இடம்பெற்றிருந்தது. புதிய வர்த்தகக் குறியீடு, விறுவிறுப்பூட்டும் வகையில் சிவப்பு மற்றும் நீல நிறங்களில் அமைந்துள்ளது. தெளிவான 'ஜ' எனும் எழுத்தின் மூலமாக கம்பனியின் மூலமாக வழங்கப்படும் முழுமையான தீர்வுகள் வழங்கப்படுவதை பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளதுடன், நேர்த்தியான அம்பு ஒன்றின் மூலம் எய்தப் படும் வளர்ச்சிஎன்பது பிரதிபலிக்கப்படுகிறது.

முன்னொருபோதுமில்லாத வகையில் ஜெஸ்டெட்னர் தன்னை உயர்ந்த நிலைக்கு உயர்த்தியுள்ளது. புதிய மற்றும் மறுசீரமைக்கப்பட்ட அணியினருடன், கம்பனியை சிறந்த பாதையில் வழிநடத்திச் செல்லும் வகையில் செயலாற்றுவதுடன், அனுபவம் வாய்ந்த நபர்களும் கம்பனியுடன் இணைந்து கொண்டுள்ளனர். ஜெஸ்டெட்னர் மூலமாக அதிகளவு கவனிப்பு மற்றும் வாடிக்கையாளர்களை மையமாக கொண்ட சேவைகள் வழங்கப்படுகின்றன.

சொந்த, ஒப்பந்தமளிக்கப்பட்ட அல்லது தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான எந்தவொரு நிறுவனமாக இருந்தாலும், அவற்றின் நாளாந்த காகிதாதிகள் தேவைகளை சிக்கனமாக நிர்வகிக்கும் பொறுப்பை ஜெஸ்டெட்னர் மேற்கொண்டு வருகிறது. புத்தமைவான வன்பொருள்கள் மற்றும் மென்பொருள்கள் முகாமைத்துவம் போன்றவற்றின் மூலமாக வேலை விநியோகம் மற்றும் இலாபங்கள் போன்றன உறுதியளிக்கப்படுகின்றன.

70 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் நம்பிக்கையை வென்ற மற்றும் மதிப்பை பெற்ற நிறுவனம் என்பதுடன், துறைசார் முன்னோடியாக திகழும் ஜெஸ்டெட்னர் நிறுவனத்தின் சேவைகளில் உலகின் முன்னணி அலுவலக தன்னியக்க வர்த்தக நாமங்கள் உள்ளடங்கியுள்ளன. அதன் மூலமாக நம்பிக்கை, தங்கியிருத்தல் மற்றும் பணத்துக்கு பெறுமதி போன்றன வழங்கப் படுவது உறுதி செய்யப்படுகிறது. நஷுவா லங்கா பிரைவேற் லிமிடெட், (ஜெஸ்டெட்னர் ஓஃவ்செட்) மற்றும் ஜெஸ்டெட்னர் பிரின்டிங் சேர்விசஸ் (பிரைவேற்) லிமிடெட், (ஜெஸ்டெட்னர் அவுட்சோர்ஸ்) போன்றன தாய் நிறுவனமான ஜெஸ்டெட்னர் ஓஃவ் சிலோன் பிஎல்சி நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகின்றன.

ஜெஸ்டெட்னர் நிறுவனத்தின் பிரதான வியாபார பொருள்கள் ஜப்பானிய நாட்டு பொருள்களாக அமைந்துள்ளன. இவற்றின் மூலமாக Ricoh சர்வதேச சந்தையில் முதல் தர நிலையை தக்க வைத்துள்ளது. ஃபுஜிட்சு தயாரிப்புகள் ஜப்பான் நாட்டில் முதல் தர மடிக்கணினிகள் எனும் நிலையை கொண்டுள்ளன. அத்துடன் சர்வதேச சந்தையில் முதல் மூன்று நிலைகளில் ஒன்றை BenQ புரொஜெக்டர்கள் கொண் டுள்ளன. உயர் தரம் வாய்ந்த டிஜிட்டல் அச்சிடல் மற்றும் ஓஃவ்செட் அச்சுப்பிரதிகளை வழங்குவதற்கு மேலதிகமாக சாதனங்களை விற்பனை செய்வது மற்றும் வாடகைக்கு வழங்குவது போன்ற செயற்பாடுகளை கம்பனி மேற்கொண்டு வருகிறது.




சேவைகள் மற்றும் மாற்றீடுகளுக்கான செலவுகள் கம்பனியால் பொறுப்பேற்கப்படும். இதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு குறைந்த செலவினம் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது. தமது சொந்த பாரிய வாடிக்கையாளர் வலையமைப்புக்கு வெவ்வேறு குறியீடுகளை வழங்கி அவற்றின் மூலம் குறித்த வாடிக்கையாளர்களினால் மேற்கொள்ளப்படும் பிரதிகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும். அதற்கமைய கட்டணம் அறவிடப்படும்.

நிறுவனத்தின் தயாரிப்புகள் நாட்டின் சகல மாகாணங்களிலும் பரவிக் காணப்படும் நிலையில், ஜெஸ்டெட்னர் ஓஃவ் சிலோன் பிஎல்சி, மாலைதீவுகளிலும் முன்னணி அலுவலக தன்னியக்க தீர்வுகளை வழங்கும் வர்த்தக நாமமாக திகழ்கிறது. 10,000 க்கும் அதிகமான தன்னிறைவான வாடிக்கையாளர்களை இலங்கையிலும், மாலைதீவுகளிலும் கொண்டுள்ளது. கம்பனி பாரியளவு திட்டங்களை அரசாங்க கல்வித் துறையில் வென்றிருந்தது. துறையில் அனுபவம் வாய்ந்த ஊழியர்களை நாடு முழுவதிலும் விற்பனை மற்றும் சேவைப் பிரிவுகளில் கொண்டுள்ளது. அத்துடன், பல்தேசிய நிறுவனங்களுடன் நெருக்கமான உறவுகளையும் 15 ஆண்டுகளுக்கு மேலாகப் பேணி வருகிறது. அத்துடன், தடங்கலில்லாத செயற்பாடுகளையும், பொருள்களையும் வழங்கி வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றை உறுதி செய்து வருகிறது.

விற்பனைக்குப் பிந்திய சேவைகளை பொறுத்தமட்டில், பயன்படுத்தும்பொருள்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் சாதனங்கள் போன்றன அசலாக அமைந்துள்ளதுடன், நாடு முழுவதும் பரந்தளவில் காணப்படுவனவாக அமைந்துள்ளன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ் மக்களின் பாதிப்புகளை நிவர்த்தி செய்வதற்கு.......

★ தண்ணீர்ப் பிரச்சினையால் ஆரம்பித்த இறுதிப் போர், நந்திக் கடலில் முடிவுற்றது. அத்தகைய நிலை, நாட்டில் உருவாகுவதற்கு புதிய அரசு இடமளிக்காது--

★ போர் முடிவுற்ற கையோடு நாட்டின் அபிவிருத்தியிலேயே முன்னைய அரசு குறியாக இருந்தது. போரினால் பாதிப்புற்ற பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களில் நம்பிக்கையை உண்டாக்கத் தவறிவிட்டது--

★ பிரிவினை வாதத்தை நாட்டில் இருந்து விரட்டி – தோற்கடித்து – இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதுமே புதிய அரசின் குறிக்கோளாகும் --

★ புதிய அரசு , நாட்டின் தேசிய பாதுகாப்பில் விசேட கவனம் செலுத்தி வருகிறது. விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்கவோ, அன்றி ஊடுருவவோ இடமளிக்கப்பட மாட்டாது--

◆ நாட்டில் முப்பது ஆண்டு காலம் நீடித்த போர், நிறைவடைந்து ஆறு ஆண்டுகள் பூர்த்தி அடைந்து விட்டன.

– போரில் உயிர் நீத்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரையும் இந்த வேளையில் நினைவு கூருகின்றோம்.

• இவ்வாறான கசப்பான வரலாறு எமக்கு ஏன் உண்டானது என்பதனை அனைவரும் சிந்திக்க வேண்டும்.

• 1980 ஆம் ஆண்டுக்கு முன்னர்ஆட்சியில் இருந்த அரசுகள், இனங்களுக்கு இடையில் நல்லுறவைப் பேணுவதில் அக்கறை காட்டவில்லை.

அது மட்டுமன்றி போர் முடிவுற்ற பின்னரும் அதனைத் திருத்திக் கொள்வதற்கு முந்திய அரசு தவறி விட்டது.

மேற்போந்த கருத்துக்களை, நிலைமைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா, நேற்று முன் தினம் (19.5.2015) மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வில் விலாவாரியாகத் தெரிவித்தார்.

இறுதிப்போர் நிறைவடைந்த பின்னர், இராணுவத்தினரை நினைவு கூரும் அணிவகுப்பில் பங்குபற்றிய நிகழ்வு அதுவாகும்.

முன்னைய போர் நிலை மீண்டும் உருவாகுவதற்குத் தமது அரசு இடம் அளிக்கப்போவதில்லை என்பதையும் ஜனாதிபதி உறுதிபடத் தெரிவித்தார்.

அபிவிருத்தியையும் இன நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதில் புதிய அரசு வெற்றி ஈட்டி உள்ளதாகவும் அவர் புளகாங்கிதம் கொண்டார்.

அத்தோடு--

போரினால் பாதிப்புற்ற பௌதிக வளங்களை மீளக் கட்டி எழுப்புவதனை விடவும், பாதிப்புற்ற மக்களின் இதயங்களை வென்று எடுப்பதே மிகப் பிரதானமானது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அத்தோடு, பரஸ்பர நம்பிக்கை மற்றும் சகல சமூக மக்களின் இதயங்களை வென்றெடுப்பதே தமது இலக்கு, குறிக்கோள் என்றும் எடுத்துரைத்தார் அவர்.

ஜனாதிபதி தமது உரையில் சுட்டிக்காட்டிய, வெளிப்படுத்திய கருத்துக்கள், ஏற்புடையவை, வரவேற்கத் தக்கவை என்பது ஒரு புறமிருக்க--

போரினால் மிகப் பெரிய அளவில், பல வகைப்பட்ட பாதிப்புகளை அனுபவித்த தமிழ் மக்களின் குறைகளை, தேவைகளை, வெறும் சொல்லளவில் இன்றி செயலில் ஆற்றவேண்டிய பெரும் பொறுப்பு-- அவருக்கு உண்டு . அதனை ஊன்றி, அழுத்தி இங்கே பட்டியல் இடுவது பொருத்தம்.

தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்கு முன்னுரிமை தர வேண்டிய நீண்ட பட்டியலில் பின்வருவன முதன்மை பெறுகின்றன:

★ தமிழர்கள் தமது பூர்வீக, சொந்த மண்ணில் மீளக் குடியமர விரைந்து நடவடிக்கை (பேச்சில் அல்ல)செயலில் எழ வேண்டும்.

★ காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் விவகாரத்தை இழுத்தடிக்காமல், விரைந்து செயற்பட்டு நல்ல முடிவுகளை வெளிப்படுத்துதல் அவசியம்.

போரின் போது உருவாக்கப்பட்ட பாதிப்புகளுக்குப் பொறுப்புக் கூறுதல்.

★ தமிழ் அரசியல் கைதிகளின் விடுப்பு.

★ நல்லிணக்கத்துக்கான அர்த்தமுள்ள நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுதல்.

– என்பன உடன் செயலுருப் பெறவேண்டும்.

எதிர்பார்க்கலாமா, நம்பி இருக்கலாமா?–

# மஹிந்தவின் வெற்றிக்களிப்பு

## நிலைத்து நிற்கப் போவதில்லை

● சேரலாதன்

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரியைத் தோற்கடித்து வெற்றிவிழா கொண்டாட முடியாத நிலையில் இருந்த மஹிந்த ராஜபக்ஷ முள்ளிவாய்க்கால் வெற்றியைப் பெரிதாகக் கொண்டாடி மகிழ்ந்திருக்கின்றார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போர் வெற் றிக் கொண்டாட்டங்கள் தேவை யில்லை, போரில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துகின்ற நிகழ்வுகளே போதும் என்று உத்தியோகபூர்வ மாக அறிவித்துள்ள போதிலும் மஹிந்த ராஜபக்ஷ போர் வெற்றியைக் கொண்டாடியமை அவரது மனதில் ஆழமாகப் புதைந்து கிடக்கும் இனவாதத்தை வெளியே அப்பட்டமாகக் காட்டி நிற்கின்றது.

இறுதிப்போரில் கிடைத்த வெற்றி இலங்கை அரசுக்கு மட்டுமே சொந்தமானதல்ல. இந்தியா உட்பட பல நாடுகளின் கூட்டு முயற்சியே புலிகளைத் தோற்கடிப்பதற்கு உதவியிருக்கின்றது. தனது பழைய வஞ்சத் தைத் தீர்த்துக்கொள்ளும் நோக்கில் புலிகளுட னான இறுதிப் போரை எந்த வகையிலாவது வெற்றி கொள்ளவேண்டும் என்ற வெறியுடன் செயற்பட்ட இந்தியாவை மஹிந்த தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். புலிகள் பயங்கரவாதிகளென முத்திரை குத்தப்பட்டதால் சர்வதேச நாடுகளும் இலங்கை அரசுக்கு உதவிகளை வழங்கியிருந்தன. இவை யாவும் புலிகளின் வீழ்ச்சிக்கு வழி கோலியிருந்தன.

> சரத்பொன் சேகாவின் வாயிலிருந்து கூட இறுதிப் போரின் அவலங்கள் தொடர்பாக ஒரு வார்த்தை தானும் வெளி வரவில்லை. அவ்வாறு வெளி வந்தால் தாமும் போர்க்குற்ற விசாரணைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி நேரிடும் என்ற பயம் அவரைத் தொற்றிக் கொண்டுள்ளதையும் அறிய முடிகின்றது.



ஆனால் இந்த வெற்றியை இலங்கை அரசு கொண்டாடுவதற்கான தகுதியைப் பெற்றிருக்கின்றதா என்பதே இன்று எழுந்துள்ள கேள்வியாகும். முதலாவதாக அன்னிய நாடொன்றுடன் இந்தப் போர் இடம்பெறவில்லை. உள் நாட்டிலேயே இது இடம்பெற்று முடிந்துள்ளது. போர்க்களத்தில் வீரர்கள் களமாடுவதும், சாவைத் தழுவுவதும் போர் மரபுகளாகும். ஆனால் போர் இடம்பெற்ற போது பல்லாயிரக் கணக்கான ஒன்று மறியாத அப்பாவி மக்கள் சாவைத் தழுவியதும் ஏராளமானவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகி அவயவங்களை இழந்த நிலையில் அல்லலோடு வாழ்வதும் இலங்கை அரசுக்கோ அல்லது அதன் தலைவரான மஹிந்தவுக்கோ தெரியாத ஒன்றல்ல. ஆனால் தெரியாத மாதிரி வேடம் போடுவதற்கே இங்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஓர் அப்பாவித் தமிழ்க்குடி மகனுக்கும் சேதம் ஏற்படாத வகையில் போரை நடத்தி வெற்றி கொண்டாதாக மஹிந்த கூறியிருந்தமை இதை உறுதி செய்கின்றது. வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு சரணடையச் சென்றவர்கள் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டதும் தமிழ்ப் பெண்கள் பலர் ஈவிரக்கமற்ற வகையில் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதும் மஹிந்தவுக்குத் தெரியாது போலும்– அப்போது அவரது பங்காளியாக இருந்து போரை நடத்திய இப்போதைய பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவின் வாயிலிருந்து கூட இறுதிப்போரின் அவலங்கள் தொடர்பாக ஒரு வார்த்தை தானும் வெளிவரவில்லை. அவ்வாறு வெளி வந்தால் தாமும் போர்க்குற்ற விசாரணைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி நேரிடும் என்ற பயம் அவரைத் தொற்றிக்கொண்டுள்ளதையும் அறிய முடிகின்றது. அஹிம்சையைப் போதித்த புத்தரின் வழி வந்தவர்கள் தாமென மார்தட்டிக்கொள்ளும் இவர்கள்– இவ்வாறு தர்மத்தை மறந்து செயற்படுவதை அந்தப் புத்தரே மன்னிக்க மாட்டார்.

இறுதிப் போரில் சாவைத் தழுவிய தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துகின்ற உரிமை கூட தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்ட நிலையில் தென்பகுதியில் போர் வெற்றிக்கொண்டாட்டங்கள் மஹிந்த தலைமையில் வெகு சிறப்பாக இடம்பெற்றுள்ளன. ஒரே தேசத்தின் ஒரு பகுதி சாவைத் தழுவிய உறவுகளின் நினைவில் கண்ணீரில் மூழ்கி நிற்க, வேறொரு பகுதி வெற்றிக் களிப்பில் எக்காளமிடுவதை இந்த நாட்டில்தான் பார்க்க முடிகின்றது.

தமிழர்களின் சாவிலும் தமது எதிர்கால அரசியலுக்கான அத்திபாரத்தை இடுகின்ற மஹிந்தவின் செயலானது அருவருப்பை ஏற்படுத்துகின்றது. பெரும்பான்மையின மக்களிடையே இனவாதத் தீயை வளர்ப்பதன் மூலமாக ஆட்சிக் கதிரையில் அமர்ந்து கொள்ள முடியுமென்ற அவரது இழிவான எண்ணமும் தெளிவாகத் தெரிகின்றது.

ஆனால் அப்பாவி மக்களைக் கொன்று குவித்துவிட்டு அவர்களின் உயிரற்ற உடல்களின் மீது ஏறிநின்று கொண்டு அரசியல் ஆதாயம் தேடுகின்ற அவரது முயற்சிகள் ஒருபோதுமே பலிக்கப் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
ரெங்கன்

# கோத்தாவின் மனு

## அரசுக்கு ஏற்படுத்தியுள்ள சிக்கல்

### தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யவும் தீர்மானம்

தேர்தல் சீர் திருத்தம் தொடர்பானஆலோசனைப் பொதி ஒன்று நேற்றுப் புதன் கிழமை அமைச்சரவையினால் ஆலோசனைக்கு எடுக்கப்பட்டது. எல்லாக் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளும் விதத்தி லான தேர்தல் பொதியொன்றை நிர்ண யிப்பதில் ஏற்பட்டுவரும் தாம தமும், சில சமயம் அவ்வாறான தேர்தல் சீர்திருத்தப் பொதியை பொதுமக்கள் தீர்ப்புக்கு விட வேண்டும் என்ற வகையில் உயர் நீதிமன்றம் கருத்துத் தெரிவிக்கக் கூடிய சாத்தியக்கூறி னாலும் ஜனாதிபதி சிறிசேனவுக்கு மேலும் தேவையான அவகாசம் கிடைப்பதாக உள்ளது.

20 ஆவது அரசமைப்புத்திருத்தத்தை அவசரப்பட்டு நிறைவேற்ற வேண்டிய தில்லை என்பதே ஜனாதிபதியின் கருத்தாகத் தெரிகின்றது. அவர் தனக்கே உரிய முறையில் முன்னாள் ஜனாதிபதி விடுத்துள்ள சவாலை சமாளித்தாக வேண்டும். இருவருக்குமிடையில் நடைபெற்ற நேருக்கு நேர் உரையாடலின்போது தம்மை பிரதமருக்குரிய வேட்பாளராக நிறுத்த வேண்டும். அத்துடன் வேறு பல கோரிக்கைகளோடு கட்சியின் வேட்பாளர் நியமன சபையின் தலைவராகவும்தம்மை நியமிக்கவேண்டும் என்றும்மஹிந்தகோரிக்கை வைத்தார்.

மஹிந்த ராஜபக்ஷ அவரது குடும்பம் மற்றும் சகபாடிகள் மீதான ஊழல் நிர்வாகச் சீர்கேடுகள் தொடர்பாக ஆதாரம் இருக்கும் எல்லா விடயங்களும் வழக்குகள் தொடரப்படும் வரை விசாரணைகளுக்குட் படுத்தப் பட வேண்டும் என்று சிறிசேன விரும்புவதாக அவருக்கு நெருக்கமானவட்டாரங்கள்தெரிவித்துள்ளன. இது ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் பரப்புரைகளில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளின் அடிப்படையிலாகும். இதன்மூலம் ராஜபக்ஷ தமக்கெதிராக நடத்தி வரும் இயக்கத்தைப் பலவீனப்படுத்த முடியும், மக்களின் ஆதரவைப் பெற்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை தேர்தலுக்கு தயாராக்க முடியும் என்று சிறிசேன கருதுவதாக அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இது அவர் எதிர்நோக்கும் ஒரு பெரிய சவாலாகவே கருதப்படுகின்றது. சில பிரச்சினைகளின் செயற்பாடுகளில் அரசுத் தலைவர்கள் பின்னடிக்கிறார்கள் என்றும்– சிறிசேனவின் ஆதரவாளர்கள் மத்தியில் கருத்து நிலவுகின்றது.

**அரசு தரப்புக்கு**

**ஏற்பட்ட ஏமாற்றம்**


இந்த வகையில் அரசு தரப்புக்கு பெரும் ஏமாற்றமொன்று. இரு உறுப்பினர் கொண்ட உயர் நீதிமன்றம் கோத்தபாய ராஜபக்ஷவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை தொடர்பான மனு மீது வழங்கிய தீர்ப்பினால் ஏற்பட்டுள்ளது. மூவர் கொண்ட உயர் நீதிமன்றக் குழுவிலிருந்து ஒருவர் விலகிக்கொண்டதன் பேரில் இருவர் அடங்கிய குழு தீர்ப்பை வழங்கியிருந்தது. கோத்தபாய தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணை முடிவடையும்வரையில் அவர் கைது செய்யப்படலாகாதென்று குழு தெரிவித்தது. அவர்கள் இந்த வழக்கு விசாரணையை ஒக்ரோபர் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர். அநேகமாக ஐந்து மாதங்கள் இப்பொழுது அரசினால் உருவாக்கப்பட்டுள்ள நிதிக் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் பிரிவின் சட்டபூர்வத் தன்மை குறித்து முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக் ஷ மனுவில் கேள்வி எழுப்பியுள்ளார். தாம் அரசியல் ரீதியில் துன்புறுத்தலுக் குள்ளாக்கப்படுவதாகவும் எந்த நேரமும் கைது செய்யப்படக்கூடிய நிலையிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.



“ ராஜபக்ஷ தமக்கெதிராக நடத்தி வரும் இயக்கத்தை பலவீனப்படுத்த முடியும், மக்களின் ஆதரவைப் பெற்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை தேர்தலுக்கு தயாராக்க முடியும் என்று சிறிசேன கருதுவதாக அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

**பிரதமர் ரணில்**
**கூறியுள்ள கருத்து**

உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஜனாதிபதியின் தரப்பினரையும் ஐ.தே.க. ஆதிக்கத்திலுள்ள அரசையும் ஆத்திரப்படச் செய்துள்ளது. இது பற்றிப்பிரதமர் ரணில்விக்கிரமசிங்க செய்தியாளர்களிடம் பேசுகையில்; சட்டப்படி இந்தத் தீர்ப்பு பிழையானது என்று எனது வழக்கறிஞர்கள் என்னிடம் தெரிவித் துள்ளார்கள்.



அரசமைப்புச் சரத்துகளின்படி இரண்டு நீதியரசர்கள்கொண்ட ஓர் அமர்வினால் தடை உத்தரவைப் பிறப்பிக்க முடியாது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். அவர்களால் அறிவித்தல் விடுக்க மட்டுமே முடியும். இந்த விடயத்தில் தடை உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்னர் எதிர்த்தரப்பின் கருத்து கேட்கப்படவும்கூட இல்லை. சட்டமா அதிபரைச் சந்திக்கும்படியும் கருத்துக்களை எடுத்துக் கூறும்படியும் எனது வழக்கறிஞர்களைக் கேட்டிருக்கிறேன். நாங்கள் நீதிபதிகளுக்குத் தொலைபேசி அழைப்புகள் விடுத்து அறிவுறுத்தல்களை விடுப்பதில்லை. நீதி மறுக்கப்படும்போது நாங்கள் முறையான வழியைப் பின்பற்றுவோம். பொலிஸ் தரப்பிலும்கூட சட்டமா அதிபரிடம் முறையிடப்படவிருப்பதாக நான் அறிகிறேன்.

அவர் மேலும் கூறுகையில்;

இப்பொழுது ஊழல் தொடர்பாக நம்பகமான விசாரணைகள் தொடர்வதால் இன்னும் பலர் அதில் ஆர்வம் கொண்டிருக்கிறார்கள் என்றார். சில முன்னணி சட்ட நிபுணர்கள் கடந்த வெள்ளிக்கிழமை இது தொடர்பாக முழுமையானதும் 5 நீதியரசர்களைக் கொண்டதுமான ஆயம் ஒன்றின் முன் உயர் நீதிமன்றத்தின் உத்தரவை மீள்பரிசீலனை செய்யக் கோருவது பற்றி ஆலோசனை நடத்தியுள்ளார்கள். இந்த சட்ட நிபுணர்கள் பிரதமரையும் குறித்த அடிப்படை உரிமை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சரவை உறுப்பினர்களையும் பிரதிநிதித்துவம் செய்கிறவர்களாவர்.

இது தொடர்பான மனுவொன்று தாக்கல் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பொலிஸார் சார்பிலும் இவ்வாறானதொரு மனு தாக்கல் செய்யப்படவிருக்கின்றது. இது சட்டமா அதிபர் திணைக்களத்தால் செய்யப்படுமா அல்லது அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் சட்ட நிபுணர்களால் செய்யப்படுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இந்த நிலைமையில்தான், ஜனாதிபதி தேர்தலின்போது சிறிசேனவுக்கு வெளிப்படையாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக பலத்த ஆதரவை வழங்கியிருந்த ஜே.வி.பி. கட்சியானது இப்போது நாடாளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளது. தேர்தல் சீர்திருத்தத்துக்கு எவரது ஆதரவையும் பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கும் நிலையில் 100 நாள்கள் கடந்துவிட்டமையால் தேசிய நிறைவேற்று அதிகார சபையும் செயல் இழந்து விட்டது என்றவாறு ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்; எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பது எவருக்கும் புரியாமல் இருக்கிறது. பல்வேறு கோரிக்கைகள் விடுக்கப்பட்ட நிலையிலும் சபாநாயகர் தமது அங்கீகாரத்தை இன்னமும் வழங்கவில்லை. பிரதமராகத் தொடர்வதற்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிகாரமில்லை. நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டுப் புதிய அரசு ஒன்று பதவியில் அமரவேண்டும் என்று கூறினார்.

அரசின் முக்கிய பிரமுகர்கள் சமீப வாரங்களில் வெளியிடப்பட்டு வந்துள்ள அரசின் அதிகாரப்பூர்வ நிலைப்பாடுகள் பற்றிய முரண்பாடான கருத்துக்களுக்கு ஜனாதிபதியும் அரசும் இப்போது தங்கள் நிலைகளை வெளிப்படுத்தும் செயற்பாடுகளில் இறங்கியுள்ளார்கள் என்பது இந்த வாரம் தெரியவந்துள்ளது.


முக்கியமான பிரச்சினைகள் மீண்டும் மீண்டும் தோன்றிக் கொண்டிருப்பதால் அவர்கள் திசைதெரியாமல் தவிப்பது போலும் தோன்றுகின்றது. பல்வேறு புலனாய்வுகள் தொடர்பாகவும் மக்களுக்குச் சரியான விளக்கமின்மையால் அவர்கள் குழப்பமடைந்துள்ளார்கள். அதே சமயம் அரசு தங்கள் ஆள்களைத் தேடிப்பிடித்து குற்றம் காணுவதிலேயே இறங்கியுள்ளார்கள் என்று எதிர்த்தரப்புகள் குற்றஞ்சாட்டி வருகிறார்கள். நல்லாட்சிக்கு திசையொன்றும் தெரியாமல் தவிப்பதுபோலும் தெரிகின்றது.

அமைச்சரவை உபகுழுத் தேர்தல் சீர்திருத்தம் தொடர்பாக கடந்த வாரம் விவாதித்தபோது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் இரு தேர்தல் முறைகளிலும் ஒவ்வொன்றுக்கும்125 என்ற வகையில் நிர்ணயிக்கலாம் என்று தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒரு தலைப்பட்சமாக தீர்வை எடுக்க வேண்டும் என்று ஜே.வி.பி. விரும்புகிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். இதனை அமைச்சர் ரணவிக்க மறுத்தார். நூறு வீதம் விகிதாசார முறை பற்றியே நாம் விவாதிக்கிறோம் என்று அவர் கூறினார். ஐ.தே.க. சமர்ப்பித்துள்ள யோசனையில் தேர்தல் சீர் அமைப்பில் இப்போதிருக்கும் 225 ஆசனங்களைத் தொடர்ந்து பேண வேண்டும் என்று அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. 125 ஆசனங்கள் நேரடித் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுவதையும் எஞ்சியிருக்கும் 100 ஆசனங்களும் விகிதாசார முறையில் தெரிவாக வேண்டும் என்றும்– ஐ.தே.க. தெரிவித்துள்ளது. இப்போது விவாதிக்கப்படும் சீர் அமைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் ஜே.வி.பி. பெரும்பாலும் காணாமற் போய்விடும் என்று ஒரு கருத்தும் நிலவுகின்றது. அவ்வாறாயின் அது நியாயமாக மாட்டாது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாக்கில் படியும் மஞ்சள் நிற அழுக்கைப் போக்க சில டிப்ஸ்...

நாக்கின் மேற்புறத்தில் வெள்ளையாக ஒரு படலம் சூழ்ந்திருக்கும். இது ஆரோக்கியமற்ற வாய் பராமரிப்பைக் குறிக்கும். இத்தகைய வெள்ளைப்படலத்தால் எந்த ஒரு தீவிரமான ஆரோக்கிய பிரச்சனையையும் சந்திக்கப் போவதில்லை என்றாலும், இந்த வெள்ளைப்படலம் கடுமையான வாய்த்துர்நாற்றத்தை ஏற்படுத்தும். பொதுவாக நாக்கில் பக்றீரியாக்கள் மற்றும் இறந்த செல்கள் போன்றவை தங்கியிருப்பதால் தான், நாக்கின் மேலே வெள்ளையான படலம் காணப்படுகிறது. மேலும் இந்த வெள்ளைப் படலமானது மருந்து மாத்திரைகள் எடுக்கும் போது, மது அருந்தும் போது, புகைப்பிடிக்கும் போது, உடலில் நீர்ச்சத்து குறைவாக இருக் கும் போது அதிக அளவில் ஏற்படும். ஆகவே நாக்கில் உள்ள வெள்ளைப் படலத்தைப் போக்கவும், வாயில் இருந்து துர்நாற்றம் வருவதைத் தவிர்க்கவும் வேண்டுமானால், பற்களை தினந்தோறும் இரண்டு முறை துலக்குவதுடன், நாக்கையும் தினமும் சுத்தம் செய்ய வேண்டும். இப்போது நாக்கில் வெள்ளைப்படலம் ஏற்படாமல் இருக்க என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று பார்ப்போம்.



### போதிய தண்ணீர்

தினமும் போதிய அளவில் தண் ணீர் குடிக்கா மல் இருந்தால், நாக்கில் பூஞ்சை கள் மற்றும் பக்றீரியாக்கள் அதிக அளவில் தங்கி விடும். அது மட்டுமின்றி, தண்ணீரைக் குறைவாகக் குடித்தால், உணவுத்துகள்கள் நாக்கில் உள்ள வெடிப்புக்களில் தங்கி விடும். ஆகவே நாக்கை சுத்தமாக வைத்துக் கொள்ள தினமும் தண் ணீரை அதிக அளவில் குடித்து வர வேண்டும்.

### கொப்பளிக்கவும்

தினமும் [illegible]ன்று முறை வெதுவெதுப்பான நீரால் வாயை கொப்ப[illegible]க்க வேண்டும். இதனால் நாக்கில் நச்சுக் கள் தங்குவ[illegible]த் தவிர்க்கலாம். அதிலும் ஒரு டம்ளர் வெதுவெ[illegible]ப்பான நீரில் 1/2 டேபிள் ஸ்பூன் உப்பு சேர்த்து கலந்து, [illegible]த நீரை வாயில் ஊற்றி கொப்பளிக்க வேண்டும். இந்த மா[illegible] தினமும் காலை மற்றும் இரவில் படுக் கும் முன் செய்து [illegible]வது மிகவும் நல்லது.

### சர்க்க[illegible] பொருள்களை தவிர்க்கவும்

சர்க்க[illegible] கலந்த பொருள்களை அதிகம் எடுத்துக் கொள்[illegible] தவிர்க்க வேண்டும். ஏனெனில் அவற்றில் மிகவும்[illegible]த்தான பக்றீரியாக்கள் இருப்பதால், அவை நாக்கில்[illegible]ள்ளைப்படலத்தின் அளவை அதிகரித்துவிடும். எனவே[illegible]க்கை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமெனில்[illegible]க்கரை உள்ள பொருள்கள் அதிகம் உண்பதைத் தவிர்க்க[illegible]ண்டும்.

### நாக்[illegible]த்தப்படுத்தவும்

தினமு[illegible]ளை துலக்கும் போது, நாக்கை சுத்தம் செய்யும் பொருள் கொண்டோ அல்லது டுத்பிரஷ் கொண்டோ சுத்தம் செய்ய வேண்டும். அதிலும் பற்களைத் துலக்கிய பின், சிறிது உப்பை நாக்கில் தூவி மென்மையான பிரஷ் கொண்டு தேய்த்தால், நாக்கில் தங்கியுள்ள பக்றீரியாக்களை நீக்கி விடலாம். முக்கியமாக நாக்கை தேய்க்கும் போது, கடுமையான முறையில் தேய்க்க வேண்டாம். இல்லாவிட்டால், நாக்கில் கொப்புளங்கள் வருவதோடு, இரத்தக்கசிவையும் ஏற்படுத்தி விடும். எனவே மென்மையாகக் கையாள வேண்டும்.

### மஞ்சள்

நாக்கை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள, தினமும் ஒரு டம்ளர் தண்ணீரில் 1/2 டீஸ்பூன் மஞ்சள் தூள் சேர்த்து குடிக்க வேண்டும். இதனால் நாக்கில் வெள்ளைப்படலம் வருவதைத் தடுக்கலாம். அதுமட்டுமன்றி, தினமும் நாக்கில் தேனைத் தடவி வருவதும் நல்லது.

### தேங்காய் எண்ணெய்

நாக்கில் உள்ள வெள்ளைப்படலத்தை நீக்கிய பின், தேங்காய் எண்ணெயை தடவிக் கொண்டால், நாக்கில் உள்ள புண்களை விரைவில் குணமாக்கலாம்.

### தயிர்

நாக்கில் வெள்ளைப்படலத்தைத் தடுக்க வேண்டுமானால், கான்டிடா என்னும் பூஞ்சையின் வளர்ச்சியை தடுக்க வேண்டும். இத்தகைய பூஞ்சையின் வளர்ச்சியை தடுக்கும் குணம் தயிருக்கு உள்ளதால், தினமும் இரவில் படுக்கும் முன், நாக்கை சுத்தம் செய்த பின் தயிரை நாக்கில் தடவிக் கொண்டால், நாக்கில் பக்றீரியாவின் தாக் கம் இல்லாதவாறு பாதுகாக்கலாம்.

## நாளை

**வைகாசி-08**
**வெள்ளிக்கிழமை**
**22.05.2015**

திதி: சதுர்த்தி
மு.ப. 08.06 வரை
நட்சத்திரம்: புனர்பூசம்
பி.இ.12.40 வரை
சுபநேரம்:
05.52-07.22 வரை
இராகுகாலம்:
10.22-11.52 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### சரியான வழியில் முன்னேறு

மற்றவர்களுக்கு நன்மை செய்ய மனதால் நினைத்தாலும் தர்மம் தான். அது போல தீமையை நினைத்தாலே பாவம் தான்.
செய்த தவறுகள் உனக்கு வழிகாட்டும் தெய்வங்கள் என்பதைப் புரிந்து கொள். எனவே துன்பத்தையும் வாழ்த்தப் பழகு.
அளவில்லாத நேர்மையும், அக்கறையும் கொண்டவர்கள் வாழ்வில் சாதனை புரியும் தகுதி பெறுகிறார்கள்.
முறையற்ற செயலைச் செய்து விட்டதாக நினைத்தாலும் திரும்பிப் பார்க்க வேண்டாம். சரியான வழியில் முன்னேறிக் கொண்டிரு.

## பேரீச்சம்பழம்

உலகின் பழமையான நாகரிகமான மொசப்பத்தேமியாதான் முதன்முதலாகப் பேரீச்சம்பழத்தின் பயன்பற்றிக் கூறப்பட்டுள்ளது. எகிப்திய பிரமிட்டுகளிலும், கிரேக்க, ரோமானிய, பாலஸ்தீனிய வரலாற்றுக் குறிப்புகளிலும் இடம் பெற்றுள்ள பேரீச்சம்பழம் கடந்த 300 ஆண்டுகளாக உலகெங்கிலும் சத்துணவுப்பழமாக உலக மக்களால் உண்ணப்பட்டுவருகின்றது. இரத்த விருத்திக்கான இயற்கை மருந்து பேரீச்சை. பேரீச்சையில் இரும்புச்சத்து மட்டுமல்ல, விற்றமின் ஏ, சுண்ணாம்புச் சத்து என்பனவும் நிறைந்துள்ளன. தசை வளர்ச்சியை அதிகரித்து, உடல் வலிமையைப் பெருக்கும் இந்தப் பழம், சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் கண்டிப்பாகச் சாப்பிட வேண்டிய அருமையான பழம்.

- தினமும் ஒரு பேரீச்சம்பழம் சாப்பிட்டு வந்தால் இதயம் வலுப்பெறும்.
- தினமும் இரண்டு பேரீச்சம்பழத்துடன் ஒரு டம்ளர் பால் சாப்பிட்டு வந்தால் இரத்தம் விருத்தியடையும்.
- இனிப்பு உணவுகளைத் தவிர்த்துத் தவிக்கும் நீரிழிவு நோயாளிகள் கூட தாராளமாக பேரீச்சம் பழம் சாப்பிடலாம். பேரீச்சம் பழத்தில் உள்ள இனிப்பால் அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது.
- ஒரு டம்ளர் பேரீச்சம் பழத்தை அரைத்துக் கலந்து சாப்பிட்டு வர எலும்பு வலுப்பெறுவதுடன், உடல் வலிமையும் கூடும்.
- எங்கேனும் அடிபட்டதால் அதிக இரத்தப் போக்கு ஏற்பட்டவர்கள் தினமும் பேரீச்சம்பழம் சாப்பிட்டு வந்தால், இரத்த இழப்பை விரைவில் ஈடுகட்டலாம்.
- வெண்குஷ்டம் இருப்பவர்கள் பேரீச்சம்பழ சாறு குடிக்கலாம். இது இரத்தத்தில் சிவப்பணுக்களை அதிகரிக்கச் செய்து, நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுக்கும்.
- தினசரி இரவில் 3 பேரீச்சம்பழம் சாப்பிட்டு சுடுதண்ணீர் அருந்தினால் மலச்சிக்கலைத் தரும் மந்தமான மலக்குடல் சுறுசுறுப்பாகி மலம் சுலபமாக வெளியேறும்.
- பேரீச்சம் பழத்தை பிற பழங்களுடன் கலந்து சாலட் ஆக செய்து சாப்பிட வாதம், பித்தம், முட்டி வீக்கம் குணமாகும்.
- பேரீச்சம் கொட்டையை வறுத்து பொடி செய்து, காபி போல் பால் சீனி கலந்து பருகலாம். உடலுக்கு உரமளிக்கும் இதனை வாரம் ஓரிரு நாள் பருகுவது நல்லது.
- பல் முளைக்கும் குழந்தைகள் வயிற்றுக் கடுப்பால் அவதியுறும் போது பேரீச்சம்பழத்தைச் சுடுநீரில் கலந்து குழைய வேக வைத்து வேளை ஒன்றுக்கு 1 கரண்டி வீதம் 3 வேளை பருக்க வயிற்றுக்கடுப்பு நிற்கும்.
- தினசரி 4 பேரிச்சம்பழம் சாப்பிட்டு வருபவர்கட்கு வயிற்றுக்கடுப்பு, அஜீரணபேதி, மலச்சிக்கல், அமிபியாசிஸ் போன்ற வயிற்றுக் கோளாறுகள் வருவதில்லை. குறிப்பாக குடலுக்குப் பாதுகாப்பு கவசமாக பேரீச்சம்பழம் விளங்குகிறது.
- முடி பராமரிப்புக்கு பேரீச்சம்
  1. 100 கிராம் உயர்ரக பேரீச்சம் பழத்தை எடுங்கள்.
  2. இதைக் கொட்டையுடன் தட்டி, மூழ்கும் அளவுக்கு தண்ணீர் ஊற்றி, பத்து நிமிடம் கொதிக்க வைத்து இறக்குங்கள்.
  3. ஒரு நாள் இதை அப்படியே விடுங்கள்.
  4. ஊறிய பேரீச்சம் பழத்தை அரைத்து வடிகட்டுங்கள்.
  5. இதனுடன்சம அளவு தேங்காய் எண்ணெயைக் கலந்து காய்ச்சுங்கள். அவ்வளவுதான் எண்ணெய் தயார்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | | 9 | 2 | 7 | | |
| 2 | | | | | 1 | | 5 | 6 |
| | | 9 | | | 5 | 2 | 8 | |
| | [illegible] | 5 | | | | | 9 | 3 |
| 3 | | | | | | | | 5 |
| 9 | [illegible] | | | | | 8 | 7 | |
| | 9 | 3 | 6 | | | 5 | 1 | |
| 4 | 1 | | 7 | | | | | 8 |
| | | 2 | 1 | 3 | | 4 | | |

### நேற்றைய சுடோக்கின் வி[illegible]

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | 8 | 6 | 5 | 2 | 1 | 3 | 7 |
| 2 | 7 | 1 | 3 | 4 | 8 | 5 | 6 | 9 |
| 5 | 3 | 6 | 7 | 1 | 9 | 4 | 8 | 2 |
| 6 | 1 | 9 | 5 | 2 | 3 | 8 | 7 | 4 |
| 4 | 8 | 2 | 1 | 7 | 6 | 3 | 9 | 5 |
| 3 | 5 | 7 | 9 | 8 | 4 | 2 | 1 | 6 |
| 8 | 6 | 3 | 2 | 9 | 5 | 7 | 4 | 1 |
| 1 | 9 | 5 | 4 | 3 | 7 | 6 | 2 | 8 |
| 7 | 2 | 4 | 8 | 6 | 1 | 9 | 5 | 3 |

சுடோக்[illegible] எண் [illegible] தர்க்க ரீதியான ஒழு[illegible]றுத்தல் [illegible] வ[illegible] என் [illegible] கே[illegible] ஏற்ப[illegible] 9 நிரல்களையும் [illegible] 3X3 [illegible] உள்ளேயும் [illegible] களையும் கொண்டிருக்கிற[illegible] வற்[illegible]டிகள், கட்டங்க[illegible] ச[illegible] ரங்கள் [illegible]ன்றும் அ[illegible] ஒவ்வொரு [illegible]ரையிலும் நிரலி[illegible] வரையான எண்கள் இரண்டு தட[illegible] (மீண்டும்) வராது [illegible]ப்பட வேண்டும் [illegible] நிரப்பப்படுகையில் [illegible]ள் பெட்டிகளுக்குள் [illegible] அவ்வாறே 1-9 இலக் கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இந்தியாவில் இவை

அப்பிள் – இமாச்சலப் பிரதேசம், ஜம்மு–காஷ்மீர்.

வாழைப்பழம் – குஜராத், மகாராஷ்டிரம், தமிழ்நாடு, கேரளம்.

இஞ்சி – கேரளம், மேகாலயா.

கோகோ – கேரளம், கர்நாடகம், தமிழ்நாடு.

திராட்சை – மகாராஷ்டிரம், ஆந்திரம், கர்நாடகம், பஞ்சாப், உத்தரப் பிரதேசம்.

மாம்பழம் – உத்தரப் பிரதேசம், பீகார், ஆந்திரம், மகாராஷ்டிரம், தமிழ்நாடு.

ஓரேஞ்சு – மகாராஷ்டிரம், கர்நாடகம், தமிழ்நாடு, மேகாலயா.

மிளகு – கேரளம், கர்நாடகம், தமிழ்நாடு

அன்னாசி பழம் – அஸ்ஸாம், மேகாலயா, மேற்கு வங்கம், திரிபுரா.

ஏலக்காய் – கர்நாடகம், சிக்கிம்,கேரளம், தமிழ்நாடு.

முந்திரி – கேரளம், ஆந்திரம்.




## கர்வம் கூடாது

ரமேஷ் புத்திசாலி மாணவன். அதனால் அவனுக்கு கர்வம் உண்டு...எவருடனும் நட்புவைத்துக்கொள்ளமாட்டான். எல்லோரும் அவனை விட அறிவில் மட்டமானவர்கள் என எண்ணம். மற்ற மாணவர்கள் அனைவரும் சேர்ந்து எப்படியாவது ரமேஷை ஏதாவது ஒரு பந்தயத்தில் தோற்கடித்து ...வல்லவனுக்கு வல்லவன் பூமியில் உண்டு என நிரூபிக்க வேண்டும் என எண்ணினர். அப்போது அந்தப் பள்ளியில் புதிதாக சேர்ந்த வினோத் என்ற மாணவன் அந்தப் பணியை ஏற்றான். அவன் ரமேஷிடம் சென்று 'ரமேஷ் நீ புத்திசாலி ..அதேபோல நானும் உன்னைவிட புத்திசாலி தான்' என்றான். கோபமடைந்த ரமேஷ் என்ன பேசுகிறாய் என்னைத் தெரியாமல் 'நான் ஒரு கேள்வி கேட்பேன்.உனக்கு விடை தெரியவில்லை எனில் நீ எனக்கு பத்து ரூபாய் தரவேண்டும்.நீ கேட்கும் கேள்விக்கு எனக்கு பதில் தெரியவில்லை என்றால் நான் நூறு ரூபாய் தருகிறேன்'என்றான்.ஆனால் அந்த கேள்விக்கு உனக்கு விடை தெரியவில்லை என்றால் கூட நீ பத்து ரூபாய் கொடுத்தால் போதும்' என்றான். பின்னர் ரமேஷ் கேட்டான்'பூமிக்கும் ..சந்திரனுக்கும் இடையே எவ்வளவு தூரம்'. வினோதிற்கு பதில் தெரியாததால் பத்து ரூபாயை ரமேஷிற்கு கொடுத்தான்.இப்போது வினோத் கேள்வி கேட்கவேண்டும். வினோத் கேட்டான்.. 'மலை ஏறும்போது மூன்று கால்களுடன் ஏறி..இறங்கும்போது நான்கு கால்களுடன் இறங்கியது யார்'.

ரமேஷிற்கு விடை தெரியவில்லை.அதனால் ஒப்புக் கொண்டபடி நூறுரூபாயை வினோதிற்கு கொடுத்துவிட்டு ..விடையை நீயே சொல்' என்றான். 'எனக்கும் தெரியாது'என்ற வினோத் பத்து ரூபாயை நீட்டினான்.அப்போது தான் கூறிய வார்த்தைகளை வைத்தே வினோத் தன்னை வென்றதை உணர்ந்து ரமேஷ் தலை குனிந்தான். அவன், கர்வம் மறைந்து அனைவருடனும் நட்பாக பழக ஆரம்பித்தான்.

## எங்கே போகிறோம் இளைஞர்களே...



இலட்சியம் இல்லாத வாழ்க்கை ஆணியில் தொங்குகிற சட்டை மாதிரி உள்ளீடற்றுத் தள்ளாடுகிறது. இந்திய இளைஞனே... இன்று உனது இலட்சியம் என்ன? காற்றின் போக்கில் பறக்கும் காகிதமாய் நம்மில் பலருக்கு இலக்கு என்ன என்பது தீர்மானமாகாமலேயே இருக்கிறது.பல நேரங்களில் அதை நாம் தீர்மானிப்ப தென்பது சாத்தியமில்லாமல் இருக்கிறது. எனவே நம் இளைஞர்கள் பலருக்கு இருக்கும் வரைக்கும் சுவாசிப்பதே இலட்சியமாய் இருக்கிறது. அல்லது சுவாசிக்க முடிந்தவரைக்கும் இருப்பதே இலட்சியமாய் இருக்கிறது. இளைஞனே... உனது இலட்சியம் ஒரு கிலோமீற்றர் தூரத்தில்கூட இருக்கலாம். அல்லது, சூரிய மண்டலத்தைப்போல், தொட முடியாத தூரத்திலும் இருக்கலாம். ஆனால், எதாவதொன்று இருக்கட்டும். கழுதையில் சவாரி செய்கிறவன் கழுதையின் வாயருகில் கேரட்டைக் காட்டிக் கொண்டே போவதைப்போல, உன் இலட்சியத்தைக் காட்டிக் கொண்டே உன்னை நீ வழி நடத்து.

உனது இலட்சியம் என்று நீ கோடு கிழித்துக் கூறுவது எதை? மருத்துவராவது - பொறியியல் வல்லுநராவது - ஆசிரியராவது - எழுத்தாளராவது - ஓவியராவது-தனித் தொழில் தொடங்குவது, இவை போன்ற ஆசைகளுக்கெல் லாம் நீ இலட்சியங்கள் என்று நாமங்கள் சூட்டிக்கொள்ளக்கூடாது இவை எல்லாம் இலட்சியங்கள் அல்ல. நீ தேர்ந் தெடுக்கும் துறைகள். அவ்வளவுதான். இந்தத் துறையில் வாழ நினைப்பது உன் விருப்பம். இந் தத் துறையை நீ வாழ வைப்பது உன் இலட்சியம்.

நீ ஈடுபடும் துறையில் உன் பெயர் சொல்லும் முத்திரை என்ன? குறைந்தபட்சம் உனது இலட்சியம் என்பது அதுதான். நம்மில் பலர் ஒரு நாற்காலி கிடைக்கும்வரைக்கும் தீயைப்போல் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள். கிடைத்தபிறகோ அந்த நாற்காலி போல விறைத்துப்போகிறார்கள். நம்முடைய அகராதியில்- ஆசிரியன் என்பவன் கற்பதை நிறுத்திவிட்டவன். அரச ஊழியன் என்பவன் ஒன்றாம் தேதி மட்டும் உறங்காதவன். மருத்துவன் என்பவன் தும்மிக் கொண்டே ஜலதோஷத்துக்கு மருந்து கொடுப்பவன். இந்த நிலை மாற வேண்டாமா? பதவி, உயர்வை மட்டுமே தீர்மானிக்கும் என்பதனால், இளைஞர்களுக்கெல்லாம் கூட சோகத்தால் சோகை பிடித்து விடு கிறது. இளைஞனே, உனது இலட்சியம்




என்பது வெறும் பதவியாக மட்டுமல்ல அதற்கும் மேலே. அந்த இலட்சியத்தை ஏற்படுத்திக் கொள்.



## நாற்கொம்பு மான்

நாற்கொம்பு மான் தெற்காசியாவின் திறந்த வெளிக்காடுகளில் வாழும் ஒரு மானினமாகும். இது இந்தியாவில் கங்கை நதியின் தெற்கிலிருந்து தமிழ் நாடு வரையிலும் ஒரிசா மாநிலத்திற்கு மேற்கிலிருந்து சராத்தின் கீர் காடுகள் வரை வாழ்கின்றது. மேலும் இவ்வினத்தின் ஒரு சிறிய உயிர்த் தொகை நேபாளத்திலும் வாழ்கின்றது. வளர்ந்த விலங்கு 55–60 செ.மீ உயரமும் 20 – 22 கிலோ எடையும் கொண்டிருக்கும். பெண் விலங்குகளுக்கு கொம்புகள் இராது. ஆண்களுக்கு நான்கு கொம்புகள் இருக்கும். இதில் பின்புறம் உள்ள இரண்டு கொம்புகள் பிறந்த சில மாதங்களிலேயே முளைக்கத் தொடங்கிவிடும். முன்புறம் உள்ள கொம்புகள் பிறந்ததிலிருந்து 14–15 மாதங்களுக்குப் பின் முளைக்க ஆரம்பிக்கும்.இம் மான் இன்னமும் பரவலாக காணப்பட்டாலும் எண்ணிக்கை மிகவும் குறைந்துள் ளது. தற்பொழுது 1000 முதல் 10000 வரை இருக்கலாம் என கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமணத்துக்கு நாள் பார்க்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விதிகள்

**1. முதல் விதி**
திருமணம் மல மாதத்தில் இடம்பெறக்கூடாது. (மலமாதம் என்பது
இரண்டு அமாவாசை அல்லது இரண்டு பௌர்ணமி ஒரே மாதத்தில் வருவது.)

**2. இரண்டாவது விதி**
சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, தை, பங்குனி தவிர இதர மாதங்களில் திருமணம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

**3. மூன்றாவது விதி**
இயன்றவரை சுக்கில பட்ச காலத்திலேயே திருமணம் செய்வது நல்லது என்பது மூன்றாவது விதி.

**4. நான்காவது விதி**
புதன், வியாழன், வெள்ளிபோன்ற சுப ஆதிபத்திய முடைய கிழமைகள் மிக ஏற்றவை. இதர கிழமைகள் அவ்வளவு உகந்தவை அல்ல.
இடபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், தனுசு, மீனம் ஆகிய சுப லக்கினங்களில் மட்டுமே திருமணம் நடத்த வேண்டும்.

**5. ஐந்தாவது விதி**
துதியை, திரிதியை, பஞ்சமி, ஸப்தமி, தசமி, திரயோதசி ஆகிய சுப திதிகள் தவிர இதர திதிகளைத் தவிர்ப்பது நல்லது.

**6. ஆறாவது விதி**
முகூர்த்த லக்கினத்துக்கு 7 ஆம் இடம். முகூர்த்த நாளன்று சுத்தமாக இருக்க வேண்டும்.

**7. ஏழாவது விதி**
அக்கினி நட்சத்திரம், மிருத்யூ பஞ்சகம், கசரயோகங்கள் போன்ற காலகட்டத்தில் திருமணம் நடத்தக்கூடாது.

**8. எட்டாவது விதி**
திருமணத்தின் போது குரு, சுக்கிரன் போன்ற சுபகிரகங்கள் திருமண லக்கினத்துக்கும் மணமக்களின் ஜனன ராசிக்கும் எட்டாம் வீட்டில் இடம் பெற்றிருக்கக்கூடாது.

**9. ஒன்பதாவது விதி**
திருமணநாள் மணமக்களின் சந்திராஷ்டம தினமாக இல்லாமல் இருப்பது மிகமிக முக்கியமான விதியாகும்.

**10. பத்தாம் விதி**
மணமக்களின் ஜனன நட்சத்திர நாளிலும் 3, 5, 7, 12, 14, 16, 21, 23, 2வதாக வரும் நட்சத்திர தினங்களிலும் திருமணம் நடத்தக்கூடாது.

**11. பதினொன்றாம் விதி**
கடைசியாக மணமக்களின் பிறந்த திகதி அல்லது கிழமைகளிலும் கல்யாணம் பண்ணக்கூடாது.
– இவ்வளவு விடயங்கள் தெரிந்து கொண்டபின் நீங்களே அனைத்து சுபகாரியங்களுக்கும் நல்ல நாள் பார்த்துவிடுவீர்கள் தானே. அவரவர் குலதெய்வத்தை மனதில் வேண்டிக்கொண்டு உங்கள் வீட்டில் உள்ள பெரியவர்களின் ஆசியுடன் நல்லதொரு நாளைக் குறியுங்கள்.

# பெண் கல்வியும் சமுதாய முன்னேற்றமும்.......

பெண் என்பவள் ஒரு குடும்பத்தில் முக்கிய அங்கம் வகிக்கிறாள். குறிப்பாக தன்னுடைய குழந்தைகளின் அறிவுக்கும், பண்பாட்டுக்கும் அடித்தளம் இடுபவளே ஒரு பெண்தான். கல்வி ஒரு மனிதனை அறிவுடையவனாகவும், பண்புள்ளவனாகவும் மாற்றுகிறது. வளர்ந்து வரும் இந்நவீன உலகில் கல்விமுக்கியத்துவம் வகிக்கிறது. கல்வி நிறுவனங்களோ நாள்தோறும் பல்கி பெருகி வருகின்றன. மருத்துவம், பொறியியல், கணினி, கணிதம், வணிகம், இலக்கியம், வரலாறு என்று பல துறைவாரியாக கல்விபோதிக்கப்படுகிறது. மனித குலத்தின் அகக் கண்ணைத் திறந்துவிடும். கல்வி அனைவருக்கும் குறிப்பாக பெண்களுக்கு மிக அவசியமான ஒன்றாகும். கல்வியைப் பற்றி முக்கியத்துவத்தைப் பாமரனும் அறியும் வண்ணம் பல அறிவொளி இயக்கங்கள் நாளும் பரப்புரை செய்து வருகின்றன. குழந்தை தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவது சட்டப்படி குற்றம். பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாத பெற்றோர் மீது கடும் நடவடிக்கை என்று அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறது. இருப்பினும் அனைவருக்கும் கல்வி என்ற திட்டம் இன்றுவரை சாத்தியப்படவில்லை. நம் சமுதாயத்தில் ஆண்களே படிக்க முன் வராத நிலையில், பெண்கள் கல்வியைப் பற்றியே சிந்தனையின்றி இல்வாழ்க்கை மட்டுமே அவர்கள் கடமை என்று எண்ணித் திரி கின்றனர். பெண்களுக்குக் கல்வி என்ற விழிப்புணர்வு நம் மக்களிடம் குறைந்தே காணப் படுகிறது. கல்வி கற்ற பெண் ணுக்கு ஏற்ற மண மகன் கிடைப்பது சிரமமாக இருப்ப தால், படிப்புக்கு முக் கியத் துவம் கொடுக் கப்படு வதில்லை.

மேலும் குடும்பத்தில் படித்த பெற்றோர் இல் லாததால் அவர்களுக்கு கல்வியில் வழிகாட் டுதல்கிடைக்காமற்போய்விடுகிறது. மேலும் காலங்காலமாக இருந்து வரும் ஆணாதிக்கப் போக்கினால் பெண்கள் அடக்கி வைக்கப்படுகின்றனர். அதனால்அவர்களிடம் ஆக்கபூர்வமான திறமைகள் இருந்தும், அவற்றை வெளிப்படுத்தத் தயங்குகின்றனர். பெண்கள் எந்த தொழிலைச் செய்ய முற்பட்டாலும்: பெட்டைக் கோழி கூவி விடியுமா?'பெண்புத்தி பின் புத்தி' என்று கேலி பேசி அவர்களை இளக்காரமாகப் பார்க்கிறது இச்சமூகம். நாளுக்கு நாள் பெண்களின் வாழ்வியல் நடைமுறைகள் மாறிவரும் இக்காலக்கட்டத்தில், நம் கலாசாரத்தைச் சிதைக்காமல், பழையன கழிதலும், புதியன புகுதலும் வாக்குக்கு ஏற்ப, பெண்களின்அடிமைத்தளையை நீக்கி, சமூக மாறுதல்களை ஏற்படுத்த பெண்கல்வி அவசியம். உலகம் விஞ்ஞான வளர்ச்சியில் உன்னதமான உயரத்தை எட்டிப் பிடித்திருக்கிறது. அறிவியல் அகிலத்தையே ஆட்டிப் படைக்கிறது. ஆனால் பெண்கள் என்று வரும்போது, அவர்கள் சம உரிமையை மறுக்கும் ஆண் ஆதிக்கப் போக்கு நம் சமுதாயத்தில் சற்று அதிகமாகவே காணப்படுகிறது.

இப்போக்கு, முன்பேவிட சற்றுக் குறைந்திருந்தாலும் இன்றும் பெண்களுக்கு சம உரிமை மறுக்கப்பட்டே . வருகிறது. பெண்கள் சிறு வயதில் பெற்றோருக்கும், மணமுடித்தப் பின் கணவருக்கும், முதுமையில் பிள்ளைகளுக்கும் பயந்தும், [illegible] கொடுமை, பாலியல் வன்கொடுமை என்று எத்தனைத் தாக்குதல்கள் பெண்ணினம் மீது இத்தகைய அரக்கர் களின் பிடியிலிருந்து பெண்கள் விடுபட கல்வி ஒன்றே தீர்வு என்பதை அவர்கள் உணர வேண்டும் 'அடுப்பு ஊதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு? என்ற நம் சமுதாயத்தின் பழைமைவாதக் கருத்துக்கு எதிராக, பெண் கல்வியை ஆதரித்தும், போற்றியும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அன்றே முழக்கமிட்டார்.

'கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம்!
அந்நிலத்தில் புல் விளைந்திடலாம்! நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை!'

என்று பாடிய அவரது கனவு ஓரளவுக்குத்தான் நிறைவேறியுள்ளது என்றால் அது மிகையில்லை. மேலோட்டமாகப் பார்க்கையில் பெண்கள் சம உரிமை பெற்றது போல் தோன்றும். ஆனால் அந்த மாயத் தோற்றத்தின் அடியில் பல கசப்பான உண்மைகள்





**. பெண்சிசுக்கொலை, வரதட்சணைக் கொடுமை, பாலியல் வன்கொடுமை என்று எத்தனைத் தாக்குதல்கள் பெண்ணினம் மீது ! இத்தகைய அரக்கர்களின் பிடியிலிருந்து பெண்கள் விடுபட கல்வி ஒன்றே தீர்வு என்பதை அவர்கள் உணர வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# வடக்கின் பல பகுதிகளிலும் நேற்றுக் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், மே 21

புங்குடுதீவு மாணவியின் படுகொலைக்கு காரணமான குற்றவாளிகளுக்கு அதி உச்ச தண்டனையை விரைந்து வழங்க வேண்டும் எனக் கோரி, நேற்று முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தால் நடவடிக்கைக்குச் சமாந்தரமாக யாழ்.குடாநாடு உட்பட வடக்கின் பல்வேறு பகுதிகளிலும் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றும் நடத்தப்பட்டது.

புங்குடுதீவு மாணவியின் படுகொலைக்கு நீதி வேண்டி வடக்கில் கடந்த ஒரு வாரகாலமாகவே பல்வேறு பகுதிகளிலும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக நேற்றைய தினம் வடக்கு மாகாணம் முழுவதையும் இணைத்து ஹர்த்தால் மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் ஹர்த்தாலுக்குச் சமாந்தரமாக நகரின் பல்வேறு பகுதிகளிலும் கவனவீர்ப்புப் போராட்டம் பேரெழுச்சியுடன் பெருந்திரளான மக்கள் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டது. (5)





மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் மற்றும் மன்னார் பிரஜைகள் குழு ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று புதன் கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்திற்கு முன்னால் ஆரம்பமாகி மன்னார் பஸார் பகுதியை சென்றடைந்தது. அங்கு கவனவீர்ப்புப் போராட்டம் சில மணி நேரம் முன்னெடுக்கப்பட்டது.





நாவாந்துறை சென் நீக்கலஸ் அமைப்பினரும், நாவாந்துறை பொது மக்களும் மாணவியின் படுகொலையைக் கண்டித்தும் நீதி கோரியும் யாழ்.நகரின் பிரதான வீதி வழியாகப் பேரணியாகச் சென்றனர். இதில் பெருமளவு பெண்கள் பங்கெடுத்திருந்தனர்.



சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் ஆரம்பித்த பேரணி, ஏ – 9 வீதி வழியாக கொடிகாமம் சந்தி நோக் கிச் சென்றது. முச்சக்கர வண்டியில், ஒலிபெருக்கி கட்டப்பட்டு கோஷம் எழுப்பியவாறும், கறுப்புக் கொடிகளைத் தாங்கியவாறும் பேரணியாக மக்கள் சென்றனர்.





நேற்றுக் காலை 9 மணியளவில் புத்தூரில் இருந்து நூற்றுக்கணக்கான இளைஞர்களுடன் ஆரம்பமாகிய இந்தப் பேரணி, யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி வழியாக கோப்பாய் பிரதேச செயலகத்தை அடைந்தது. போர்க் கா[illegible] புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்ட கிரிசாந்தி முதல் புங்[illegible] யில் நீதிவேண்டும் என வலியுறுத்தி கோஷங்களை எழுப்பியவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.







வடமராட்சி பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் கண்டனப் பேரணி பெருமளவு மக்களின் பங்கு பற்றலுடன் உணர்வெழுச்சியாக இடம்பெற்றது. நேற்றுக் காலை 9 மணியளவில் மந்திகை சந்தியில் இருந்து ஆரம்பமான எதிர்ப்புப் பேரணி பருத்தித்துறை நகரப்பகுதி வரை நகர்ந்து, பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு வந்த போது பிரதேச செயலக[illegible] தடுக்க பிரதேச செயலக வாயிலுக்கு குறுக்காக பொலிஸ் வாகனம் நிறுத்[illegible]க்காரரில் இருவர் மாத்திரம் உள்ளே சென்று மனுவைக் கையளிக்க பொலிஸார் அனுமதித்தனர். இதேவேளை வல்வெட்டித்துறை ஆட்டோ சங்கமும் படுகொலையைக் கண்டித்து ஆட்டோ பேரணியை நடத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20

# யாழ். நகரில் நேற்று மாபெரும் போராட்டம்



புங்குடுதீவு மாணவியின் படுகொலை யைக் கண்டித்தும் குற்றவாளிகளுக்கு அதி உச்சத் தண்டனை வழங்கக் கோரி யும் யாழ்.நகரில் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கலாசாலை ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல்வாதிகள், வைத்தியசாலை ஊழியர்கள், சமூக அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

யாழ்.நகரப் பகுதியில் ஆரம்பமான பேரணி மாவட்டச் செயலகம் வரை சென்றது. அங்கு அனைவரும் ஒன்று திரண்டு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் மனு ஒன்று வடக்கு முதலமைச்சரிடம் கையளிப்பதற்காக அவைத் தலைவரிடம் வழங்கப்பட்டது.

இந்த மனுவில் மாணவியின் கொலைக் குற்றவாளிகளுக்கு அதி உச்சத் தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கு நட வடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

(த-4)





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Nature Pure**

20L போத்தலில் அடைத்த சுத்தமான குடி தண்ணீரை மொத்தமாகவும்,, சில்லறையாகவும் எம்மிடம் பெறமுடியும்.

குறிப்பு: வீடுகளுக்கும் கொண்டுவந்து தரப்படும்

தொடர்புகளுக்கு: 077 254 3253

## மரண அறிவித்தல்

### வேலு செல்லையா

பூங்காவனம் சந்தி முரசுமோட்டை பரந்தனை வசிப்பிடமாககொண்ட வேலு செல்லையா நேற்று (20.05.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2015) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோரக்கன்கட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 077 374 3444 ()(10.6) தகவல்: குடும்பத்தினர்.

**சீரடி சாய்பாபா ஜோதிடம்**

இந்தியாவிலிருந்து வந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிடர்

**சாய்ராம் சாஸ்திரிகள்**

ஜாதகம், கைரேகை, நாமநட்சத்திரம் பார்த்து பலன் சொல்லப்படும். வெளிநாட்டு பிரச்சினை, குழந்தைப்பாக்கியம், திருமண யோகம் என்பனவும் மற்றும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.

காலை 9.00 மணி - மாலை 6.00 மணி வரை.

076 809 7406

Land Mark Yaal inn Hotel

இல.46/1, கல்லூரி வீதி, (யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்துக்கு முன்பாக), நீராவியடி, யாழ்ப்பாணம்.

(59429)(4.3.7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி சோபிகா ஐங்கரன் 3A



செல்வி பேபி சகிலா முத்துக்குமார்(2A,B)

எமது வித்தியாலயத்தின் கல்வி வரலாற்றுப் பாதையில் முதன் முறையாக க.பொ.த. (உ/த) பரீட்சை கலைப்பிரிவில் மூன்று பாடங்களிலும் விசேட சித்தி (3A) பெற்ற செல்வி சோபிகா ஐங்கரன் அவர்களையும் (2A,B) பெற்ற செல்வி பேபி சகிலா முத்துக்குமார் அவர்களையும் பாராட்டுவதுடன் அவர்களை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும், பாடசாலைச் சமூகம் சார்பாக பாராட்டுகின்றோம்.

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்,
பா/சன்மார்க்க மகா வித்தியாலயம்.

## வேலணை மேற்கு பெரியபுலம் திருவருள்மிகு மகா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) கோயில்

### மன்மத வருட மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2015

| | | |
|---|---|---|
| கணபதி ஹோமம் | 22.05.2015 | வெள்ளிக்கிழமை காலை 8.00 |
| கொடியேற்றம் | 23.05.2015 | சனிக்கிழமை முற்பகல் 10.30 |
| சங்காபிஷேகம் (உற்சவ மூர்த்தி) | 24.05.2015 | ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 |
| சங்காபிஷேகம் (மூலமூர்த்தி) | 26.05.2015 | செவ்வாய்க்கிழமை காலை 8.00 |
| வேட்டைத்திருவிழா | 30.05.2015 | சனிக்கிழமை பி.ப 3.00 |
| சப்பறத் திருவிழா | 31.05.2015 | ஞாயிற்றுக்கிழமை இரவு 7.00 |
| இரதோற்சவம் | 01.06.2015 | திங்கட்கிழமை காலை 9.30 |
| தீர்த்தோற்சவம் | 02.06.2015 | செவ்வாய்க்கிழமை காலை 8.30 |
| வைரவர் பொங்கல் | 05.06.2015 | வெள்ளிக்கிழமை மாலை 6.30 |

மஹோற்சவ காலத்தில் அடியார்கள் ஆலயத்துக்கு வருகை தந்து திருத்தொண்டாற்றி எம்பெருமானின் அருள்பெற்றுய் யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

www.velanaimahakanapathi.com

ஆலய பரிபாலன சபை,
பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் கோயில்,
வேலணை மேற்கு, வேலணை.

(60007)(10.6)

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு: 1935.05.11 இறப்பு: 2015.05.20

### "தியாகச் செம்மல்" கந்தையா பரமலிங்கம்

யாழ்ப்பாணம் தென்மராட்சி வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவிலடி மீசாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு 13, கோட்டம் ரவர், இல,41 சீ,2/1, பாபர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் பல்வேறுபட்ட சமூக நிறுவனங்களின் ஆர்வலரும் விவசாயத்தில் மிகுந்த ஈடுபாடுடையவருமான கந்தையா பரமலிங்கம் நேற்று (20.05.2015) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

தியாகச் செம்மல் கந்தையா பரமலிங்கம் அவர்கள் நலிவுற்ற குழந்தைகளின் வாழ்வியல் முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டு உணவுட்டி கல்விவளர்த்து எதிர்காலத்தில் சமூகத்தில் நற்பிரஜைகளாக மிளிரவேண்டும் என்னும் ஆழ்மன விருப்பை நோக்காக கொண்டு பூநகரிப் பகுதியில் அமைந்துள்ள தனது சொந்த நிலவளத்தில் நீர்ப்பாசன வசதியுடன் கூடிய 198 1/2 ஏக்கர் விவசாய நிலத்தினை மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்திற்கு நன்கொடையாக தந்த கொடை வள்ளல் மட்டுமன்றி குழந்தைகளை சந்திக்கும் நேரங்களில் அறிவுரைகள் பல கூறி அவர்களை நல்வழிப் படுத்தும் உத்தமனுமாவார்.

வையத்துள் வாழ்வாங்குவாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
மண்ணுலகை விட்டுப் பிரிந்தாலும்
காலங்கள் பல கடந்து சென்றாலும்
கொண்ட கோலங்கள் நிலைமாறிப் போனாலும்
காலத்தால் அழியாதது உங்கள் ஞாபகங்கள்
பிறப்போடு இறப்பு இணைந்தது
எனினும் உங்கள் இழப்பை நெஞ்சம் ஏற்பதில்லை

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விதியின் கணக்கை மாற்றிட எம்மால் முடியாதே, அதனால் இவர் தம்பிரிவால் வாடும் குடும்பத்தினர், உறவினருக்கும் எங்கள் இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

தலைவர். தி.இராசநாயகம்
பணியாளர்கள், பணிப்பாளர்கள், இல்லக் குழந்தைகள்
மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லம்.

(C/16768)(10.6)

## மரண அறிவித்தல்



### கந்தையா பரமலிங்கம்

தென்மராட்சி வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவிலடி மீசாலையைப் பிறப்பிடமாகவும் கோட்டம் ரவர், இல-41 சீ, 2/1, பாபர் வீதி,கொழும்பு- 13 ஐ வசிப்பிடமாவும் கொண்ட கந்தையா பரமலிங்கம் நேற்று (20.05.2015) புதன்கிழமை கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் கந்தையா-சிவகாமி தம்பதியரின் அன்புமகனும், பரமலிங்கம் பார்வதியின் அன்புக் கணவரும் மோகனதாஸ் (பிரான்ஸ்), சசிகலா (பிரான்ஸ்) சுவதி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் மேனகா (பிரான்ஸ்), கணேசபிள்ளை (பிரான்ஸ்), யசோதரன் (சிவகுரு ஹாட்வெயார் உரிமையாளரும், மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்ல உப தலைவரும்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுசிகரன் (பிரான்ஸ்), கிருபாகரன் (பிரான்ஸ்), வசிகரன் (பிரான்ஸ்), மத்தேயு (பிரான்ஸ்), ஸ்ரீபன் (பிரான்ஸ்) வினோஜா (கொழும்பு), தரனீஸ் (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.05.2015) வியாழக்கிழமை மக்கள் அஞ்சலிக்காக கொழும்பு ஜெயரட்ண மலர்சாலையில் வைக்கப்பட்டு நாளை (22.05.2015) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவகுருயசோதரன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சிவகுரு ஹாட்வெயார் உரிமையாளரும்,
மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்ல உப தலைவரும்
0112337619, 077 772 2305

(C/16767)(10.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



### திருமதி சிவபாக்கியம் முருகுப்பிள்ளை


04ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் முருகுப்பிள்ளை நேற்று (20.05.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-பதஞ்செல்வி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- பார்வதி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற முருகுப்பிள்ளையின் (ஓய்வு பெற்ற தபால் ஊழியர், புதுக்குடியிருப்பு) அன்பு மனைவியும், சிவநேசன் (லண்டன்), அருள்நேசன் (கனடா), பார்த்தீபன் (பிள்ளையார் ஹாட்வெயார், புதுக்குடியிருப்பு), பிரதாபன்(கனடா), கலைமகள் ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பமாலா (லண்டன்), ரனித்தா (கனடா), ஜெயந்தி கௌசிகா (கனடா), [illegible] (மருத்துவர் பொது வைத்தியசாலை- கொழும்பு) ஆகியோரின் மாமியாரும், துஷாரா, [illegible], கீர்த்தி, லக்சா, கிருத்திகா, [illegible], அஜிஸ், கோபிஷன் ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகாக இன்று (21.05.2015) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு புதுக்குடியிருப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 0770648951



### முருகேசு கந்தசாமி

(உரிமையாளர்-ராஜன் எலக்றிக்கல்ஸ், பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு, அம்பன்-குடத் தனையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கந்தசாமி நேற்றுமுன்தினம் (19.05. 2015) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வ ராசா மற் றும் செல்லமுத்து தம்பதியரின் மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், ராஜகாஷ் (யா/ஹாட்லிக் கல்லூரி மாணவன்), ராகவி ( யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரி), ராஜதாஸ் (யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தங்கம்மா, சங்கரப்பிள்ளை மற்றும் இராசமணி, நகுலராஜா (ராஜன் ஹாட்வெயர்-பருத்தித்துறை), புஸ்பராணி (லண்டன்), நவரத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2015) வெள்ளிக் கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தும்பளை கோரியடி இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாலாம் குறுக்குத்தெரு சந்தி,
தும்பளை வீதி, பருத்தித்துறை.
021 226 4769

தகவல்: முருகேசு [illegible]
சகோதரன் (உரிமையாளர் [illegible]
ஹாட்வெயார் ஸ்ரோர்ஸ்) பருத்தித்துறை.
0776086237

## பாலச்சந்திரன் கொலை; பொன்சேகா புதுக் கதை

### சண்டையிலேயே உயிரிழந்தாராம்

வன்னியில் போரின் இறுதிக்கட்டத்தில் 40 ஆயிரம் பொதுமக்கள் படையினரால் படுகொலை செய்யப்பட்டதான குற்றச்சாட்டையும், பாலச்சந்திரன் பிரபாகரன் படுகொலைக் குற்றச்சாட்டையும் முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நிராகரித்துள்ளார்.

போர் நிறைவடைந்து ஆறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதை யொட்டி, தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்திருந்த செவ்வியிலேயே, போருக்குத் தலைமை தாங்கிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இந்தக் குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தும் சுதந்திரம் வழங்கப்படாமையால், இராணுவம் மிக கடுமையான விலையைக் கொடுக்க நேரிட்டது.

பொதுமக்களைக் கருத்தில் கொண்டு நான்கரை மாதங்கள் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதை விட வேறு வழி இராணுவத்துக்கு இருக்கவில்லை.

வெளிநாட்டு அழுத்தங்களினால் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்று அரசு எடுத்த முடிவினால், எமது படையினர் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். 2009 ஜனவரி தொடக்கம் மே வரையான காலத்தில் இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் படையினருமாக, 2000 பேர் கொல்லப்பட்டனர். 2008ஆம் ஆண்டு முழுவதும் கொல்லப்பட்ட படையினருக்குச் சமமான எண்ணிக்கை இது.

முன்னெப்போதும் இல்லாதளவுக்கு ஏற்பட்ட இந்த இழப்புகள், போர் எந்தளவுக்கு கடுமையான சூழலில் இடம்பெற்றது என்பதை வெளிப்படுத்துகிறது. நான்காவது கட்ட ஈழப்போரில் இராணுவம் 5000 படையினரை இழந்தது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகனான 12 வயதுடைய பாலச்சந்திரன், சண்டையின்போதே உயிரிழந்திருக்க வேண்டும்.எனது படையினர் அதற்குப் பொறுப்பு அல்ல.

போரில் 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டிருந்தால், அங்கு எலும்புக்கூடுகள் தான் எஞ்சியிருக்கும். சரணடைந்த விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதான குற்றச்சாட்டுக்கள் குறித்து கருத்து வெளியிட முடியாது.

ஊடகங்களால் விவாதிக்கப்பட்ட வெள்ளைக் கொடிச் சம்பவம், இயந்திரக் காலாட் படைக்குத் தேவையான கவச போர் ஊர்திகளை வாங்குவதற்காக நான் சீனா சென்றிருந்தபோதே நடந்ததாக குற்றம் சாட்டப்படுகிறது.

2009 மே 11ஆம் திகதி சீனா சென்ற நான், மே 17ஆம் திகதி காலை 9 மணியள்விலேயே நாடு திரும்பினேன். நடவடிக்கைத் தலைமையகத்தில் நான் இல்லா விட்டாலும் நாளொன்றுக்கு மூன்று தடவைகள் நான் வழிகாட்டல் கட்டளைகளை வழங்கிக் கொண்டிருந்தேன்.

நான் சீனாவுக்குப் புறப்பட்ட போதே, போர், சார்ஜன்ட்கள் மற்றும் கோப்ரல்களுக்கு (இளநிலை அதிகாரிகள்) மாற்றப்பட்டு விட்டது. எதிரிகள் 12 கி.மீ நீளமான, 2 கி.மீ அகலமான பகுதிக்குள் சிக்கி விட்டனர். சார்ஜன்ட்களும், கோப்ரல்களும் .எதிரிகளின் நிலப் பகுதிக்குள் முன்னேறுவதற்குத் தலைமை தாங்கினர்.

இரண்டு வாரங்களுக்கு மேல் விடுதலைப் புலிகளால் தாக்குப் பிடிக்க முடியவில்லை என்றும் அவர் தனது செவ்வியில் தெரிவித்துள்ளார். (த)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி மகாலட்சுமி நவரத்தினம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாலட்சுமி நவரத்தினம் நேற்று (20.05.2015) புதன்கிழமை சிவபதம் எய்தி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
M.S. நவரத்தினம் (கணவர்)
K. குகராஜா (சகோதரன்)

### சிவக்கொழுந்து இரத்தினசபாபதி

(பதிமாஸ்டர்)

செல்லர் வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறை வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து இரத்தினசபாபதி (பதிமாஸ்டர்) நேற்று (20.05.2015) புதன்கிழமை சிவபத மடைந்துவிட்டார்.

அன்னார் கமலாம்பாளின் அன்புக் கணவரும், கிருஷ்ணவேலு, ஆதிரா, அங்கவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மசீலன், ராஜ்குமார் ஆகியோரின் மாமனும், சாரங்கராஜ், கஸ்தூரி, பிரியங்கராஜ், அறிவரசி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2015) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ.ராஜ்குமார் (மருமகன்)

### சின்னப்பு செல்லத்துரை

(ஓய்வுபெற்ற தபால் அதிபர் மலேசியா)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு செல்லத்துரை நேற்று (20.05.2015) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விமலாதேவியின் (துன்மலை, ,இள வாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்) அன்புக் கணவரும், லிங்கநாதன், பரிமளாகாந்தி, சுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்திரா, சூரியகுமார், காஞ்சனா ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற தர்மபுத்திரன் மற்றும் கனகாதேவி, விசுமா புத்திரன், புஸ்பதேவி, பூபாலேந்திரன் (பிரான்ஸ்), இந்திராதேவி, பத்மாதேவி, பாலபுத்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2015) வியாழக்கிழமை பி.ப 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் (மலேசியா) நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. சிவச்சந்திரன் (இளவாலை)

### திருமதி கண்மணி முருகேசு



பண்டத்தரிப்பு, வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி முருகேசு நேற்று (20.05.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான வைரமுத்து சின்னம்மா தம்பதியரின் இளைய புதல்வியும், அமரர் கந்தையா முருகேசுவின் அருமை மனைவியும், சரவணபவன் (ஆனந்தன் - சங் கானை கலைமகள் விலாஸ்), இராஜராஜேஸ்வரி (வதனா - இணு வில்), லிங்கேஸ்வரன் (ஜேர்மனி), முருகானந்தன் (கொழும்பு), பாலச்சந்திரன் (ஓட்டுமடம்), ஞானேஸ்வரி (இந்தியா), இரவிச் சந்திரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், செல்வராணி, சிவானந்தன், பரமேஸ்வரி, சுதாஜினி, சுபோதினி, ரஜனி ஆகியோரின் மாமியும், அமரர்களான இலட்சுமி, அன்னமுத்து, நாகேந்திரம், சிவக்கொழுந்து கந்தையா (மாணிக்கம்) ஆகியோரின் சகோதரியும், அமரர்களான செல்லம்மா, முத்தையா, செல்லத்துரை ஆகியோரின் மைத்துனியும், காண்டீபன், கலையரசி, எழிலரசி, கலைமகள், பிரவீனன், ஹம்சா, பிரவீனா, கார்த்திகன், சுஜானி, சதானந்தன் ஆகியோரின் பேர்த்தியும், மதியழகி, சிவகுமாரன், பாலகுமார் ஆகியோரின் வழிவந்த பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2015) வியாழக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பண்டத்தரிப்பு விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] வீதி,
பண்டத்தரிப்பு.

தகவல்:
குடும்பத்தினர்.
மு.சரவணபவன் (மகன்-ஆனந்தன்)
கலைமகள் விலாஸ் - சங்கானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் - 23

# ராஜஸ்தானுக்கு மரண அடி

## இரண்டாவது தகுதியாட்டத்தில் சென்னை எதிர் பெங்களூர்

வில்லியர்ஸ், மன்டீப் இருவரினதும் அரைச்சதமும் அரவிந், சகால், ஸ்ரார்க், பட்டேல் ஆகியோரது கட்டுக்கோப்பான பந்துவீச்சும் கைகொடுக்க 71 ஓட்டங்களால் ராஜஸ்தானை வீழ்த்தி இரண்டாவது தகுதியாட்டத்தில் சென்னையுடன்



மோத தகுதிபெற்றது பெங்களூர்.

பெங்களூர் எதிர் ராஜஸ்தான் அணிகளுக்கிடையிலான விலகல் ஆட்டம். வெற்றிபெறும் அணி இரண்டாவது தகுதியாட்டத்தில் சென்னையுடன் மோதும் தோல்வியடையும் அணி தொடரை விட்டு வெளியேறும். இதனால் சென்னை எதிர் பெங்களூரா அல்லது சென்னை எதிர் ராஜஸ்தானா என்ற கேள்வியில் சென்னையுடன் தமது அணியை சேர்த்திட வீரர்கள் தீவிரம் காட்டினர். விலகல் ஆட்டம் என்பது வீரர்களின் பதட்டத்திலேயெ தனியாகத் தெரிந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் கெயிலுடன் ஹோக்லி. முதல் பந்துப்பரி மாற்றத்தின் இரண்டாவது பந்திலேயே அதிரடியை ஆரம்பித்த கெயிலை ஒருவாறாக அடக்கி வாசிக்கச் செய்தனர் ராஜஸ்தான் பந்து வீச்சாளர்கள். நீண்ட நேரம் நிலைத்து நின்றும் கெயிலால் ஒன்றும் செய்ய முடியவில்லை. 26 பந்துகளில் 27 ஓட் டங்களை மடடுமே பெற்றார். கெயிலை வெளியேற்றிய குல்கர்னி ஹோக்லியையும் வெளியேற்றத் தவறவில்லை. ஆதிரடியில் கெயிலை மிஞ்சும் வில்லியர்ஸும் தடுமாற்றம் காட்ட பத்துப் பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் பெங்களூர் 59–2. வில்லியர்ஸுன் தடுமாற்றம் தொடர்ந்தது. வீணடிக்கப்பட்ட பந்துகளை ஓரளவு சரிசெய்தார் மண்டீப். மண்டீப்பின் அதிரடியில் பெங்களூர் தொடர்ந்தும் போராடும் நிலையிலேயே இருந்தது. 15ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 2 சிக்சர் மற்றும் ஒரு பவுண்டரியுடன் அதிரடியை ஆரம்பித்தார் வில்லியர்ஸ். வில்லியர்ஸின் தாண்டவம் தொடர்ந்தது. மன்டீப்பும் தனது பங்கிற்கு அவ்வப் பொழுது அடித்து விளாசிக்கொண்டிருந்தார். ஆரைச்சதம் கடந்த வில்லியர்ஸ் 66 ஓட்டங்களுடன் ரண்அவுட் முறை மூலம் ஆட்டமிழந்தார். ஆனபோதிலும் விடவில்லை மன்டீப் தனது பெய ரிலும் அரைச்சதம் ஒன்றைப் பதிவு செய்தார். வந்த வரத்திலேயே சிக்சரை விளாசினார் டினேஸ் கார்த்திக் முடி வில் பெங்களூர் 180–4.

120 பந்துகளில் 181 ஓட்டங்களைப் பெற் றால் வெற்றி. ஸ்ரார்க் போன்ற பந்து வீச்சாளர்களை எதிர்கொண்டு இந்த இலக்கை எட்டுவதென்பது சற்றுக் கடினம். வழக்கம் போல ரஹானே நங்கூரம் போட்டு நிற்பதைப்போல நிலைத்து நின்றார். ஆனால் பெங்களூரை வீழ்த்துவோம் என்று அறிக்கைவிட்ட சிமித்தும் வற்சனும் பத்து ஓட்டங்களைக்கூட எட்டுவதுக்கு படாத பாடுபட்டு பவிலியன் திரும்பினர். ராஜஸ்தானின் தோல்வி தொடக்க வீரர்களில் இருந்து ஆரம்ப மானது. ரஹானே மட்டும் பெங்களூ ருக்கு அச்சுறுத்தலாக தொடர்ந்தும் களத்தில் நின்றார். ஆனால் ரஹானேயின் துடுப்பில் இருந்தும் சிக்சர்கள் பறப் பதுக்கு மறுத்துவிட்டன. பின்வரிசை வீரர்களும் சொதப்ப முடிவில் ராஜஸ்தான் 109 ஓட்டங்களை மட் டுமே பெற்று 71 ஓட்டங்களால் படு தோல்வியடைந்தது. (ரி)

---

## கண்ணீர் அஞ்சலி

**திருமதி விஜயலட்சுமி**
**லோறன்ஸ் சபா ரஞ்சிதம்**



எமது பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமை யாற்றும் **லோ. பிரகலாதனின்** அன்புத் தாயாரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம், பிரதேசசெயலகம்,பச்சிலைப் பள்ளி

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 | 28 |
| 03 | 06 |
| 1936 | 2014 |

**அமரர் ஆறுமுகம் துரைராசா**

(திதி - 21.05.2015)

உடுவில் தெற்கு, மல்லாகம், யாழ்ப்பாணம். — குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்கள்

### மரியதாஸ் ஜெயபாலன்



வராத்துப்பளையைப் பிறப்பிடமாகவும், இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட மரியதாஸ் -ஜெயபாலன் நேற்று (20.05.2015) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் மரியதாஸ்-அருளம்மா தம்பதியரின் அன்பு மகனும், ராமப்பிள்ளை- புஸ்பவதி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயராணியின் அன் புக் கணவரும், சிவபாலன் (திருகோணமலை), பிரபாகரன் (இந்தியா), ஜெயச்சந்திரன் (லண்டன்), பிரியங்கா (கனடா) ஆகியோ ரின் அன்புத் தந்தையும், மேரிபோலின், காலஞ்சென்ற ஜெயராணி, செல்வராணி (கனடா), ஜெயசாந்தினி, ஜெயரூபன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தேவசகாயம், அருமைத்துரை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.05.2015) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித அந்தோனியாரின் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**
(தேவசகாயம்)

---

### செல்வி தனபாக்கியவதி கந்தையா (தனம் ரீச்சர்)



மட்டுவில் தெற்கு, வாகையடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி தனாபக்கியவதி கந்தையா (தனம் ரீச்சர்) நேற்று (20.05. 2015) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி கந்தையா -வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பத்மநாதன் (ஆசிரியர்), இராசரத்தினம் (நவாலி), குணபாக்கியவதி (உசன்), காலஞ்சென்ற பத்மாவதி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகாம்பிகை , சிவயோகம், கார்த்திகேசு (உசன்), சிவறஞ்சன் (லண் டன்) ஆகியோரின் அன்பு மைத் துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2015) வியாழக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(60011) (6)

தகவல்:
குடும்பத்தினர்.

---

## ஓராண்டு நினைவஞ்சலி

**பரராஜசிங்கம்**
**கமலாதேவி**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17.02.1947 | 31.05.2014 |

ஓராண்டு பறந்தோடினாலும் - உங்கள்
நினைவுகள் எம் உள்ளத்தில் நீங்காது
நீங்கள் விட்டுச் சென்ற நினைவுகள்
எங்கள் மனதினை வாட்டுதம்மா
இந்நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வைமன் றோட்,
யாழ்ப்பாணம்

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சந்திரபூரணி பூபாலபிள்ளை

(ஓய்வுபெற்ற கணக்குப் பதிவாளர்-யாழ். மாநகரசபை)



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாக வும் இல.63, கருவேப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிட்மாகவும், கொண்ட திருமதி சந்திரபூரணி பூபாலபிள்ளை நேற்று (20.05. 2015) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தெட்சணாமூர்த்தி, செல்வபூரணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப் பிள்ளை-தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், பூபாலபிள்ளையின் (ஓய்வு பெற்ற முகாமைத்துவ உதவியாளர்-வலயக் கல்வி அலுவலகம், தீவகம்) அன்பு மனைவியும், சிவதர்சினி (முகாமைத்துவ உதவியாளர், வலயக் கல்வி அலுவலகம்-யாழ்ப்பாணம்), சயந்தன் (Cinnamon Grand Colombo) ஆகியோரின் அன்புத் தாயும், ராஜீவ் (ஆசிரியர்-ஜெயபுரம் மகா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2015) வியாழக் கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

63, கருவேப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கு.


(60017) (10.6)

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 021 321 4362, 0772334240

---

### வீரகத்திப்பிள்ளை நடராஜா

(V.V. நடராஜா, கண்டி முதலாளி) நயினாதீவு-வவுனியா



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 1952 | 2015 |
| 06 | 05 |
| 10 | 19 |

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வவுனியா வேப்பங்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட வீரகத்திப்பிள்ளை நடராஜா (V.V. நடராஜா, கண்டி (முதலாளி) 19.05.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை-தங்கம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற முருகேசு-தங்கமுத்து தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கமலவதியின் (கமலி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற கமலாம்பிகை, மயில்வாகனம் மற்றும் மனோன்மணி, கனகரத்தினம், மகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பார்வதிப்பிள்ளை, தாமோதரம்பிள்ளை காலஞ்சென்றவர்க ளான சுப்பிரமணியம், மார்க்கண்டு, செல்லமுத்து, சிவக்கொழுந்து, சம்மா, பொன்னம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மலர், மாணிக்கவாசகன், கேதீஸ்வரன், கிரிதாஸ், யாழினி காலஞ் சென்ற மங்கையர்க்கரசி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமாரன், அனுஜா, கயல்விழி, சரிதா, விவேகானந்தன் ஆகியோரின் அன்பு மாமனும், தட்சாயினி, தர்சன், தனுசன், சயிந் சயிந்தன், சர்வின், ஹஸ்வின், ஹஸ்வி, ஜனுசா, டிலோசன், ம தர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2015) வெள்ளிக் கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைச்சோலை, மன்னார் வீதி,
வேப்பங்குளம், வவுனியா.
024-2220345 / 0772200624

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகள் குறித்த பட்டியல் எம்மிடம் இல்லை

## கைவிரித்தார் ஜனாதிபதி



கொழும்பு, மே 21

தற்போது தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் தொடர்பான விவரப்பட்டியல் ஏதும் தம் வசம் கிடையாது என ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதி இல்லத்தில் நேற்றுக் காலை ஊடக நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் பத்திரிகை ஆசிரியர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் நிறைவில் ஜனாதிபதியிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

சர்வதேச தரப்பினர் தம்வச முள்ள பல்வேறு பட்டியல்களை வெளியிட்டு வருகின்றனர். இந்த நிலையில் இலங்கை அரசிடம் தடுப்பிலுள்ள அரசியல் கைதிகள் தொடர்பான விவரப்பட்டியல் ஏதும் உள்ளதா என வினவியதற்குப் பதிலளித்த ஜனாதிபதி தம்வசம் எந்தவொரு பட்டியலும் இல்லை என்று தெரிவித்தார்.

இதேவேளை, ஜனவரி 8 ஆம் திகதி இடம்பெற்ற சதிப் புரட்சி தொடர்பான விசாரணையின் நிலை என்ன என எழுப்பிய கேள்விக்கு ஜனாதிபதி பதிலளிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான ஜனவரி 8ஆம் திகதி பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பித்து தேர்தல் முடிவுகள் வெளியாவதை தடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதென எனக்குத் தகவல் கிடைத்துள்ளது – என்று கூறினார்.

அது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும் தன்னைக் கொலை செய்ய முன்னெடுக்கப்படும் சூழ்ச்சிகள் குறித்து இதுவரை மூவர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டில் அடுத்து பொதுத் தேர்தல் இடம்பெறும் என்றும் அது புதிய முறையிலா அல்லது பழைய முறையிலா நடைபெறும் என்று இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்றும் ஜனாதிபதி கூறினார்.

இதேவேளை, பொலிஸ் நிதி மோசடி பிரிவை இரத்துச் செய்வதற்கு தான் உறுதி அளிக்கவில்லை என்றும், ஆனால் அதில் உள்ள சில சரத்துக்கள் குறித்து பிரதமருடன் கலந்துரையாடப்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் நிதி மோசடி பிரிவு அரசியல் கட்சி ஒன்றின் செயற்றிட்டத்திற்கு இயங்குகிறது என எவரும் ஆதாரத்துடன் முறைப்பாடு செய்தால் அது குறித்து ஆராயப்படும் என்றும், ஆனால் தற்போதைய நிலைப்படி அதில் அரசியல் செயற்பாடு இல்லை என்பது புலப்படுவதாகவும் ஜனாதிபதி கூறினார்.

வில்பத்து குறித்து ஜனாதிபதி கருத்து வெளியிடுகையில் ,

வில்பத்து சரணாலயத்திலுள்ள காடுகளை அழிப்பது தவறாகும். எந்தவொரு காடும் அழிக்கப்படக் கூடாது. அதற்கு இடமளிக்கப் போவதுமில்லை. இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இரண்டாம், மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்கு காணி வழங்கப்பட வேண்டும் என்பது உண்மை. காட்டுப்பகுதியை அதற்காகப் பயன்படுத்த இடமளிக்க முடியாது – என்றார்.

கடந்த அரசின் காணி விவகாரம் தொடர்பான அதிரடிப்படையின் உத்தரவுக்கிணங்கவே வில்பத்துவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் ஜனாதிபதி இதன்போது மேலும் கூறினார். (த–சி)

# இரகசிய முகாம்கள் எதுவும் இல்லையாம்

## நாடாளுமன்றில் அறிவித்தது அரசு

கொழும்பு, மே 21

இலங்கையில் முப்படையினரின் கீழ் எந்தவொரு இரகசிய முகாமும் இயங்கவில்லை என்று அரசு நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தது.

நாடாளுமன்றில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது ஈ.பி.டி.பி யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எழுப்பியிருந்த கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ஆளுங்கட்சிப் பிரதம கொறடாவும், அமைச்சருமான கயந்த கருணா திலக்க இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இலங்கையில் இரகசியமான தடுப்பு முகாம்கள் உள்ளனவா? ஆமெனில் அந்த முகாம்கள் பற்றிய விவரங்கள் யாவை? அந்த முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் யாவர்? அவர்கள் பற்றிய தகவல்கள் எவை? என்றே டக்ளஸ் கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இவற்றுக்குப் பதிலளித்த அமைச்சர் கயந்த கருணாதிலக்க, இலங்கையில் இராணுவத்தின் கீழோ, விமானப்படையின் கீழோ, கடற்படையின் கீழோ, பொலிஸின் கீழோ எந்தவொரு இரகசிய முகாமும் இயங்கவில்லை என்று குறிப்பிட்டு ஏனைய கேள்விகள் ஏற்புடையதல்ல என்றும் தெரிவித்தார்.

இதனையடுத்து, இடையீட்டுக் கேள்வியொன்றை எழுப்பிய டக்ளஸ் தேவானந்தா.

"மக்கள் இரகசிய முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று வடக்கு முதலமைச்சரும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் குறிப்பிடுகின்றனர். இதனால் மக்கள் மத்தியில் குழப்பம் இருக்கிறது. தமிழ் ஊடகங்களில் மக்கள் அழுது புலம்பும் செய்திகள் வெளியாகின்றன" எனச் சுட்டிக் காட்டினார்.

இதன்போது தனது ஆசனத்தில் இருந்து எழுந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இரகசிய முகாம் என எதுவும் இல்லை என்றும், காணாமல் போனோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு தனிப் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளதால், காணாமற் போனோர் தொடர்பில் அ[illegible] முறைப்பாடுகளைப் பதிவுசெய்யலாம் என்று குறிப்பிட்டார். (த)

# புங்குடுதீவு சம்பவம் குறித்து வெட்கித் தலை குனிகிறேன்

## மனோ கணேசன் தெரிவிப்பு



கொழும்பு, மே 21

கொடிய இனவாதிகளால் எழுதப்பட்ட கிரிஷாந்தி, இசைப்பிரியா ஆகியோரின் கொடூர வரலாறுகளை எதிர்த்துப் போராடிக் களைத்து போய்விட்டு, இன்று உள்ளூர்வாசிகளால் புங்குடுதீவின் 18 வயது மாணவி சிவலோகநாதன் வித்தியா கடத்தப்பட்டு, பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு, மிகவும் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அறியும்போது ஒரு தமிழனாக வெட்கித் தலை குனிகிறேன். அதேவேளை இத்தகைய சமூக அக்கிரமங்களுக்கு எதிராக வடக்கில் இளைய தலைமுறை இன்று தெருவில் இறங்கி போராடுவதை வரவேற்கின்றேன் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும், தேசிய நிறைவேற்று சபை தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இன்று புதன்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் சிங்கள, தமிழ் மொழிகளில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

இந்தக் கடத்தல் மற்றும் அதன் பிறகு நடந்ததாகச் சொல்லப்படும் சம்பவங்கள் எழுத்தில் எழுத முடியா கொடூரமானவை. இந்த அக்கிரமக்காரர்களை மன்னிக்க முடியாது. இன்று ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கூறபடுகின்றது. கொழும்புக்குத் தப்பி வந்த ஒருவர் வெள்ளவத்தை காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இனி இந்த வழக்கு காலதாமதம் இல்லாமல் விரைவில் விசாரிக்கப்பட்டு, கொலையாளிகளுக்கு அதிக பட்ச உச்சகட்ட தண்டனை வழங்கப்பட வேண்டும்.

கடந்த மஹிந்த ஆட்சிகாலத்தில் தமிழ் மாகாணங்களில், குறிப்பாக வடக்கில் இளைஞர் மத்தியில் போதை வஸ்து, மதுபாவனை, பாலியல் நடவடிக்கைகள் ஆகியவை திட்டமிட்டுத் தூண்டி விடப்பட்டன. ஒரு இனத்தை அழித்திட, அந்த இனத்தின் மொழி, கலை, கலாசாரம், பண்பாடு, வரலாறு என்பவற்றைத் திட்டமிடப்பட்டு அழிப்பது என்ற உலகெங்கும் ஆதிக்கவாதிகளால் கடைப்பிடிக்கப்படும் அந்த கொள்கை இலங்கையிலும் கடைபிடிக்கப்பட்டது. அதை மஹிந்த கூட்டம், கொழும்பில் அலரி மாளிகையில் திட்டமிட்டு, வடக்குக்கு கொண்டு சென்று அங்கே தன் அடியாள்கள் மூலமாகச் செய்தது.

இன்று மஹிந்த ஆட்சி இல்லை. மைத்திரி ஆட்சி வந்து விட்டது. ஆனாலும், இன்னமும் மஹிந்த மீண்டும் வருவார் என எண்ணி வடக்கின் பொலிஸ் மற்றும் அதிகார வட்டாரம் மெத்தனமாக இருக்கின்றதோ என்ற சந்தேகம் வருகிறது. இது முதல் சம்பவம் அல்ல. கடந்த சில காலமாகவே இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து ஆங்காங்கே தமிழர்கள் மத்தியில் நடக்கின்றன. குறிப்பாக பாடசாலை செல்லும் தமிழ் மாணவிகள் குறிவைக்கப்படுகிறார்கள்.

இன்று இந்த அராஜகங்களை எதிர்த்து நமது இளைஞர்கள் நேரடியாகத் தெருவில் இறங்கிப் போராட முன்வந்துள்ளார்கள். இந்த எதிர்ப்பு இயக்கம் இது போன்ற நிகழ்வுகள் இனி நிகழா வண்ணம் தடை போடும் என நம்புகிறேன்–என்றுள்ளது. (த)

# உள்ளக விசாரணை ஜீன் மாதம் முதல்

போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக்குற்றங்கள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கான உள்நாட்டுப் பொறிமுறையின் செயற்பாடுகள் ஜூனில் (அடுத்த மாதத்தில்) நடைமுறைக்கு வரும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

போர்ச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக சர்வதேச விசாரணையாளர்கள் இலங்கைக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என நேற்றுக் காலை பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடகநிறுவனங்களின் தலைவர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது ஜனாதிபதி குறிப்பிட்டார்.

உள்ளக விசாரணைப் பொறிமுறை அடுத்தமாதமளவில் நிறுவப்படும் எனத் தெரிவித்த ஜனாதிபதி மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள் விடயத்தில் உள்நாட்டுச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சுட்டிக்காட்டினார்.

விசாரணைகள் தொடர்பில் நாம் ஐ.நாவுடன் விசாரணைகளை நடத்தினோம். அரச் என்ற வகையில் வெளிநாட்டு விசாரணையாளர்கள் இலங்கைக்குள் வருவதை நாம் அனுமதிக்கப்போவதில்லை என நாம் கூறினோம். இருந்தபோதிலும் ஐ.நாவிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று உள்ளக விசாரணைகளை முன்னெடுப்போம் – என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

உள்ளக விசாரணைப் பொறிமுறையின் முன்னேற்றம் தொடர்பில் நாம் மனித உரிமை சபை செப்ரெம்பரில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. அந்த வகையில் உள்ளகப் பொறிமுறை ஜுன் மாதமளவில்ஆரம்பமாகும். மனித உரிமை விசாரணைகளின் போது நாட்டின் இறைமை பாதுகாக்கப்படுவதை நாம் உறுதிப்படுத்துவோம் – என்று ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

இலங்கையில் இறுதிப்போர்க் காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தினால் நடத்தப்பட்ட சர்வதேச விசாரணை அறிக்கையை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் வெளியிடவுள்ளதாக மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்திருந் தார்.

இவ்வருடம் மார்ச்மாதத்தில் வெளியிடப்படவிருந்த விசாரணை அறிக்கையானது கடந்த ஜனவரி மாதத்தில் பதவிக்கு வந்த புதிய அரசின் வேண்டுகோளிற்கு இணங்க ஆறு மாதங்கள் தாமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

# அபிவிருத்தி உத்தியோகத்தர் தாக்கப்பட்டமைக்கு கண்டனம்

மட்டக்களப்பு, மே 21

மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகத்தில் செங்கலடிப் பிரதேச செயலகமும் அப்பிரதேச விஞ்ஞான ஆய்வு நிலையமும் இணைந்து நடத்திய கண்காட்சி இறுதி நிழ்வில் தேசிய கீதம் தமிழில் பாடியமைக்காகச் செங்கலடி பிரதேச செயலக உத்தியோகத்தர் தாக்கப்பட்டமை குறித்து வட மாகாண அபிவிருத்தி உதவியாளர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழ் மொழி இலங்கையின் தேசிய அரச கரும மொழிகளில் ஒன்றாக இருப்பதனால் தமிழ் நிகழ்வுகளுக்குத் தேசிய கீதம் தமிழ்மொழியில் இசைப்பதில் தவறுஎதுவுமில்லை என நாம் கருதுவதோடு தற்போது நாட்டில் இன நல்லிணக்கம் பற்றி பேசப்பட்டுவரும் சந்தர்ப்பத்தில் இவ்வாறு ஏற்பட்டுள்ள நிகழ்வானது ஏற்றுக் கொள்ளமுடியாததும் கவலையளிக்கும் விடயமாகவும் உள்ளது. இனிவரும் காலங்களில் இவ்வாறான துன்பியல் நிகழ்வு ஏற்படாத வண்ணம் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய– காத்திரமான நவடிக்கை எடுக்க வேண்டும் என வட மாகாண அபிவிருத்தி உதவியாளர் ஒன்றியம் மேலும் தெரிவித்துள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புங்குடுதீவு பாடசாலை மாணவி படுகொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று கோரியும் கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் நேற்று கண்டன ஆர்ப் பாட்டம் நடத்தப்பட்டது.



புங்குடுதீவு மாணவியின் படுகொலையைக் கண்டித்து நேற்று யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் பெரும் ஆர்ப் பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.



பாடசாலை மாணவி படுகொலையைக் கண்டித்து வல்வெட்டித்துறை முச்சக்கரவண்டி சங்கத்தினரும் வல்வெட்டி முச்சக்கர வண்டி சங்கத்தினரும் ஒன்றிணைந்து வல்வெட்டித்துறை வழியாக தொண்டமனாறு · திக்கம் பருத்தித்துறை மந்திகை மாலுசந்தி நெல்லியடி ஊடாக வல்லைச்சந்திவரை கவனவீர்ப்பு பேரணி நடத்தினர்.



மாணவி படுகொலையைக் கண்டித்து வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் நேற்றுக் கவனவீர்ப்பு ஆர்ப் பாட்டம் நடத்தினர்.



மன்னாரில் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் மற்றும் மன்னார் பிரஜைகள் குழு ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த கண்டன ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் மன்னார் பிரஜைகள்குழு அலுவலகத்திற்கு முன்னால் ஆரம்பமாகி மன்னார் பஸார் பகுதியை சென்றடைந்தது.

# செப்ரெம்பரில் புதிய நாடாளுமன்றம்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, மே 21

தற்போதைய நாடாளுமன்றம் எப்போது கலைக்கப்படும்? அடுத்த பொதுத்தேர்தல் எப்போது நடத்தப்படும்? என்ற அங்கலாய்ப்பு பரவலாகக் காணப்படும் நிலையில், எதிர்வரும் செப்டெம்பரில் புதிய நாடாளுமன்றம் ஸ்தாபிக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே[illegible] தெரிவித்தார்.

பத்திரிகை ஆசிரியர்கள் மற் றும் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடன் ஜனாதிபதி இல்லத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான அரசமைப்பின் 20ஆவது திருத்தம் மற்றும் அரசமைப்புச் சபை ஆகியன தொடர்பில் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக்கொண்ட பின்னர் தற்போதைய நாடாளுமன்றம் கலைக்கப்படும் என ஜனாதிபதி உறுதியளித்தார்.

தற்போதைய நாடாளுமன்றத்தால் இன்னமும் செய்யப்படவேண்டிய சில விடயங்கள் எஞ்சியுள்ளன. அந்த விடயங்கள் தொடர்பில் தீர்வுகள் எட்டப்பட்டபின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படும். செப்ரெம்பர் அளவில் புதிய நாடாளுமன்றதை நாங்கள் கொண்டிருப்போம் – என்று ஜனாதிபதி விவரித்தார்.

நாடாளுமன்றம் எப்போது கலைக்கப்படும்? தேர்தல் எப்போது நடத்தப்படும்? என எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு ஜனாதிபதி தெளிவான பதிலைக் குறிப்பிடாதபோதிலும், தீர்வு காணப்படாத விடயங்களுக்கு விரைவில் தீர்வு காணப்பட்டு தேர்தல் நடத்தப்படும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த ஜனவரியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வழங்கிய 100 நாள் திட்ட வாக்குறுதியின் அடிப் படையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன – பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையி லான அரசு ஏப்ரல் 23ஆம் திகதியுடன் நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்குச் செல்லவேண்டும் என்றபோதிலும் 100 நாள் செயற்றிட்ட இலக்குகள் இன்னமும் பூர்த்திசெய்யப்படாத நிலையில் நாடாளுமன்றக் கலைப்பு தாமதமடைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி வசமிருந்த அள விற்கு மீறிய அதிகாரங்களைக் குறைப்பதும் அதனை நாடாளு மன்றத்திற்கு வழங்குவதுமே தாம் பதவிக்கு வந்தபோது தமக்கு முன்பாகவிருந்த முதலாவது நோக்கமாக இருந்ததாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, புதிய தேர்தல் முறைமைக்கு ஆதரவைத் திரட்டுவதே தமக்கு முன்பாகவுள்ள அடுத்த இலக்கு என்றும் இதற்கான கலந்துரையாடல்கள் தற்போது இடம்பெற்றுக்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் அனைத்துமே நாடாளுமன்றத்தின் கரங்களில் உள்ளன. தேர்தல் சீர்திருத்தம் தொடர்பில் இவ்வாரத்தில் நாம் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளோம். இதனை நிறை வேற்றமுடியும் என நம்பிக்கை கொண்டுள்ளோம் – என்று ஜனாதிபதி கூறினார்.

முன்வைக்கப்பட்டுள்ள தேர்தல் சீர்திருத்த யோசனைகள் தமக்குப் பாதகத்தைக் கொண்டுவரும் என சிறிய கட்சிகள் எதிர்ப்புகளை வெளிப்படுத்திவரும் நிலையில், கடந்த சில வாரங்களாக மைத்திரிபால சிறிசேனவின் கூட்டணி அரசில் கருத்து மோதல்கள் வலுப்பெற்றுவருகின்றமை சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

19ஆவது திருத்தத்தை நிறை வேற்றியமையையிட்டு ஏதேனும் அளவில் திருப்தி கொள்ள முடியும். இது விடயத்தில் பாரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என ஜனாதிபதி கூறியதுடன், தமக்கு வாக்களித்தவர்கள் தமது வாக்குகள் வீண்போகவில்லை என்பதை தன்னைச் சந்தித்த தருணங்களில் எடுத்துக்கூறி அகமகிழ்ந்தனர் என்றும் குறிப்பிட்டார். (ற–சி)

### முடங்கியது

அதற்குப் பல்வேறு வர்த்தக சங்கங்கள், போக்குவரத்துச் சங்கங்கள் தமது ஆதரவுகளைத் தெரிவித்திருந்தன.

யாழ்.நகரப் பகுதி, திருநெல்வேலி, சுன்னாகம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், மருதனார்மடம், சங்கானை, காரைநகர், வடமராட்சி கிழக்கு, என்று குடாநாட்டின் பட்டிதொட்டியெங்கும் உள்ள வர்த்தக நிலையங்கள் முழுமையாக மூடப்பட்டிருந்தன. சிறிய வர்த்தக நிலையங்களும் நேற்று முழுமையாக மூடப்பட்டிருந்தது. மருதனார்மடம் மற்றும் சுன்னாகம் சந்தைப் பகுதிகளில் கறுப்புக்கொடிகள், வாழைகள் என்பன கட்டப்பட்டிருந்தன.

அத்துடன் யாழ்.மாவட்டச் செயலகம் மற்றும் ஏனைய பிரதேச செயலகங்கள், அரச திணைக்களங்கள் என்பன காலையில் திறந்திருந்தாலும் மதியத்துடன் அவையும் செயலிழந்தன. குடாநாட்டிலுள்ள சகல பாடசாலைகளும் நேற்று முழு நாளும் மூடப்பட்டிருந்தன. தனியார் போக்குவரத்துச் சேவை முன்னரே அறிவித்தவாறு சேவையில் ஈடுபடவில்லை. இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான ஒரு சில சாலைகளின் பஸ்கள் மாத் திரம் காலையில் சேவையில் ஈடுபட்டன. ஆனால் அவையும் காலை 11 மணியுடன் தமது சேவையை நிறுத்திக் கொண்டன.

அத்துடன் நகரின் முக்கிய இடங்கள் யாவும் வெறிச்சோடியது. பொது மக்கள் வீடுகளுக்குள் முடங்கியதால், வீதிகளில் சனநடமாட்டல் இல்லாமல், அமைதியாக இருந்தது. கிளிநொச்சி மாவட்டத்தில் சந்தைகள் செயலிழந்திருந்தன. ஆனால் ஏனைய வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன. பாடசாலைகள் யாவும் முழுமையாக மூடப்பட்டிருந்தன. உள்ளூர் போக்குவரத்து இடம்பெறவில்லை. ஏ–9 வீதியூடான போக்குவரத்து மாத்திரம் இடம்பெற்றது. அரச திணைக்களங்கள் மந்த கதியில் இயங்கின. இதனால் கிளிநொச்சி மாவட்டத்தில் ஓரளவுக்கே இயல்புநிலை பாதிக்கப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலைகள் இயங்கிய போதும் மாணவர் வரவு குறைவாகவே இருந்தது. அத்துடன் சகல வர்த்தக நிலையங்களும் முழுமையாக மூடப்பட்டிருந்தன. அத்துடன் கறுப்புக் கொடிகளும் வர்த்தக நிலையங்களின் முன்பாக பறக்க விடப்பட்டிருந்தன. போக்குவரத்து நடவடிக்கைகள் குறைவாக இடம்பெற்றது. அரச திணைக்களங்கள் வழமை போன்று இயங்கினாலும், பொதுமக்களின் வரத்துக் குறைவாகவே காணப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில், வர்த்தக நிலையங்கள் மாத்திரம் மூடப்பட்டிருந்தது. அரச திணைக்களங்கள் இயங்கின. பாடசாலைகளில் போராட்டங்கள் இடம்பெற்றன. இயல்பு நிலை ஓரளவு பாதிக்கப்பட்டிருந்தாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டம் வழமை போன்று இயங்கியது. அங்கு எந்த இயல்புநிலை பாதிப்பும் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற–5)

### வடக்கில்

கொண்டுவருவது சம்பந்தமாகவும் இதன்போது விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

குறிப்பாக யாழில் சமா தானத்தை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு தான் பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார் எனவும் பிரதமர் இதன்போது குறிப் பிட்டுள்ளார். அத்துடன், சுமூக நிலைமையை ஏற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன், நாடாளுமன்றத்துக்கு வருகைதந்த ஜனாதிபதியிடமும் இந்தப் பேச்சு தொடர்பில் பிரதமர் விளக்கமளித்துள்ளார். (ற–சி)

### பொலிஸாருடன்

அதற்கு இடமளிக்கக் கூடாது. மிகவும் நிதானத்துடன் மக்கள் நடந்து கொள்ள வேண்டும்." – என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

யாழ்.நீதிமன்றத்தின் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட வன்முறைச் சம்பவம் தொடர்பில் கண்டனம் தெரிவித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:– அமைதியாக நடைபெறும் எமது பேரணிகளையும் – கண்டன நிகழ்வுகளையும் சாக்காக வைத்துப் பொதுமக்களின் ஆதனங்களை அடித்து நொறுக்கிச் சேதம் விளைவிப்பதும் டயர்களை எரிப்பதும் பெரும் குற்றச் செயல்கள். இன்றைய இந்தச் சோகச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி யார் இந்த ஈனச் செயல்களில் ஈடுபடுகின்றார்கள் என்பதை மக்கள் விழிப்பாய் இருந்து கண்டுபிடிக்க வேண்டும்.

பல காரணங்களால் அன்றும் இன்றும் பொலிஸாருடன் ஒத்துழைப்பது எமது மக்களுக்கு சற்றுச் சிரமமாகவே இருக்கின்றது. குற்றவாளிகளை கைது செய்வது சம்பந்தமாகத் தாமதத்தையும் அசட்டைத் தன்மையையும் காட்டுகின் றார்களோ பொலிஸார் என்பதிலும் எமது மக்கள் கோபம் அடைந்துள்ளார்கள்.

ஆனால் இந்தத் தருணத்தில் நாங்கள் பொலிஸாருக்கு அனுசரணையாகச் செயற்பட வேண்டும். அவர்களை எதிரிகள் போன்று கணித்து நடந்து கொள்ளக் கூடாது. பொலிஸாருக்கும் எமக்கும் இடையில் மனஸ்தாபங்களை ஏற்படுத்தி நிலைமையைச் சீர்குலைக்க சில விஷமிகள் கங்கணங் கட்டிக்கொண்டு நிற்கின்றார்கள் என்பது நன்றாகப் புரிகின்றது. அவர்களின் சாகசங்களுக்கு நாங்கள் அடிமையாகப்படாது.

அதே நேரம் நடைபெறும் கண்டனப் பேரணிகள் மக்களால் நடத்தப்படுபவை. எந்த ஒரு கட்சியாலோ, தொழிற் சங்கத்தாலோ, நிறுவனத்தாலோ அல்ல என்பதை நாங்கள் நினைவுறுத்த வேண்டும். அவ்வாறு குறிப்பிட்ட சில அலகுகள், நிறுவனங்கள் போன்றவை தமக்கு இதனூடாகச் சில தனித்துவமான நன்மைகளைப் பெற முயற்சித்தால் அது இறந்த அந்த அபலைப் பெண்ணுக்கு நாம் செய்யுந் துரோகமாகவே கணிக்கப்படும்.

ஆகவே சந்தர்ப்பத்தைப் பாவித்து கட்சி நலம், காடையர் நலம், கரவான நலங் காண விழைபவர்களுக்கு நாங்கள் எச்சரிக்கின்றோம். மனவருத்தத்தில் வாடும் எம்மக்களின் முதுகில் ஏறிச் சவாரி செய்ய எத்தனிக்காதீர்கள். நீங்கள் அடையாளம் காணப்பட்டால் மிகவும் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்கநேரிடும். – என்றுள்ளது. (ற–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் - 26

## இன்றைய மோதல்கள்

**புனித சவேரியார் வி.க.தொடர்**

யாழ்ப்பாணம் மே 21

தேவன்பிட்டி புனித சவேரியார் ஆலயத்தின் திரு விழாவை முன்னிட்டு மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தேவன்பிட்டி புனித சவேரியார் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் 11பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் தேவன்பிட்டி புனித சவேரியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு. காலை 7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தட்சனமடு விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி திருநகர் விளையாட்டுநகழக அணி மோதவுள்ளது. 8மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சந்திரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. 9மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முல்லைத்தீவு இளம்பறவை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. 10மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிளிநொச்சி ஜெயந்திநகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மணியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. 11மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக. அணியை எதிர்த்து பள்ளிக்குடா ஜொலிபோய்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. 12மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முல்லைத்தீவு அலைஓசை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மன்னார் பெரியகுளம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. 2மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் பெரிய பண்டிவிரிச்சாண் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து காந்தக்குளம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பள்ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தட்சணாமடு விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி-23)

**ஸ்ரார் ஈகிள்ஸ் வி.க.தொடர்**

மன்னார் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுமதியுடன் மன்னார் பெரியகடை ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக்கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 20பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத்தொடரின் ஆட்டங்கள் மன்னார் பொது விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வவுனியா சலஞ்சர்ஸ் அணியை எதிர்த்து மன்னார் ரைடஸ் அணி மோதவுள்ளது. மதியம் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் [illegible] கிளியேட்டஸ் அணி மோதவுள்ளது. (ரி-23)

# சிம்பாப்வே அணிக்கு அதியுயர் பாதுகாப்பு

## ஒருவீரருக்கு இருநூறு பொலீஸார் என்ற அடிப்படையில்





கடந்த ஆறு ஆண்டுகளாக பாகிஸ்தான் சென்று விளையாடுவதை சர்வதேச அணிகள் புறக்கணித்து வந்தது. இந்த நிலையில் பாகிஸ்தானில் கிரிக்கெட் விளையாட துணிந்து நேற்று பாகிஸ்தானில் களமிறங்கிய சிம்பாப்வே அணிக்கு 3 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்பு கொடுத்திருக்கின்றனர். இந்த தொடர் மூலம் பாகிஸ்தானை மற்றைய நாடுகள் தனிமைப்படுத்துவது முடிவுக்கு வருகிறது.

இலங்கையணிக்கு எதிரான தாக்குதலுக்குப் பின்னர் எந்தவொரு அணியும்பாகிஸ்தான்சென்று விளையாட அச்சம் தெரிவித்த நிலையில் சிம்பாப்வே அணி மட்டும் பாகிஸ்தான் சென்று விளையாட சம்மதம் தெரிவித்தது. இதற்கான வேலைகளை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை துரிதமாக செய்து கொண்டிருந்த வேளையில் கடந்த சில நாள்க ளுக்கு முன் பஸ் மீது தீவிரவாதிகள் கொடூர தாக்குதல் நடத்தினார்கள். இதில் நாற்பதுக்கும் மேற்பட்டோர் பலியானார்கள். இதனால் சிம்பாப்வே அணி பாகிஸ்தான் வருவதற்கு தயங்கியது. ஆனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் ஷகா ரியார் கானின் தொடர் முயற்சியால் மீண்டும் விளையாட சம்மதம் தெரிவித்தது சிம்பாப்வே.

இதனால் தங்கள் நாட்டுக்கு வரும் சிம்பாப்வே வீரர்களுக்கு எந்த ஒரு அசம்பாவிதமும் நடைபெற்று விடக்கூடாது என்பதில் பாகிஸ்தான் அரசு கவனமாக இருக்கிறது. இதனால் சிம்பாப்வே அணி நேற்று பாகிஸ்தான் வந்தவுடன் அவர்கள் தங்கும் விடுதி மற்றும் ஆட்டம் நடைபெற இருக்கும் கடாபி மைதானத்தை பொலிஸார் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள்:. மொத்தம் 3000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் வீரர்களின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஹோட்டல் மற்றும் மைதானங்கள் மற்றும் வீரர்கள் செல்லும் இடங்களிலெல்லாம் பாதுகாப்பிற்கு அமர்த்தப்படுகிறார்கள்.

மைதானத்திற்கு ஆட்டத்தை காண வரும் ரசிகர்கள் பலத்த சோதனைக்குப் பிறகே உள்ள அனுமதிக் கப்படுவார்கள். ஆட்டம் நடைபெற்று கொண்டிருக்கும்போது பொலிஸ் உத்தியோகத்தர்கள் அருகில் உள்ள கட்டத்தின் மீது நின்றும் ஹெலிகொப்டரில் பறந்தும் பாதுகாப்பை பலப்படுத்துவார்கள். இந்த தொடர் எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல் நடைபெற்றால் பாகிஸ்தான் தனிமைப்படுத்தப்பட்டதற்கு முற்றுப்புள்ளிவை[illegible]டும். இரு அணிகளுக்கிடையிலான முதல் ரி-20 ஆட்டம் நாளையும் இரண்டாவது ஆட்டம் 24ஆம் திகதியும் நடைபெற இருக்கிறது. ஒருநாள் ஆட்டங்கள் 26, 29 மற்றும் 31 ஆம் திகதிகளில் நடைபெற இருக்கிறது. பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த ஆட்டங்களுக்கான நடுவர்களை நியமிக்க முடியாது என்று ஏற்கனவே ஐ.சி.சி. தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# இந்த மாத இறுதியில் நீலங்களின் போர்

யாழ்ப்பாணம் மே 20

வடக்கு நீலங்களின் போர் என்று வர்ணிக்கப்படும் கிளிநொச்சி இந்து கல்லூரி, கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய பாடசாலைகளின் 2 நாள்களைக் கொண்ட டெஸ்ட் ஆட்டம் எயாரெல் நிறுவனத்தின் அனுசரணையில் எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறப்போவதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திபிலேயே இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி இந்து கல்லூரி, கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்துக்கு இடையே நடைபெறும் இந்த நீலங்களின் போர் கடந்த 2005ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக 2008 ஆம் ஆண்டுவரை நடைபெற்று வந்தது. பின்னர் இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்ட போர் காரணமாக போட்டிகள் நடைபெறாது




மீண்டும் மீள்குடியேற்றத்தின் பின்னர் 2014ஆம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்டது. தற்போது இந்த ஆண்டுக்கான நீலங்களின் போர் இந்த மாதம் எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில், இருபாடசாலைகளை சேர்ந்த அதிபர்கள், உப அதிபர்கள், ஆசிரியர்கள், விளையாட்டு வீரர்கள், எயாரெல் நிறுவனத்தின் வடபிராந்திய முகாமையாளர், நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். ஆட்டத்துக்கான காசோலையும் எயாரெல் நிறுவனத்தினரால் பாடசாலைச் சமூகத் தினிடம் கையளிக்கப்பட்டது. (ரி-21)

## கே.ஸி.ஸி.ஸி.யின் தொடரில் கே.ஸி.ஸி.ஸி.யை வீழ்த்தியது பற்றீசியன்ஸ்

யாழ்ப்பாணம் மே 20

கே.ஸி.ஸி.ஸி. விளையா[illegible]க் கழகம் நடந்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்திற்கான இருபாலாருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 75:74 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

## இங்கிலாந்தின் சிறந்த வீரராக ஜோ ரூட்



இங்கிலாந்து கிரிக்கெட்டின் கடந்த ஆண்டுக்கான சிறந்த வீரராக இங்கிலாந்தின் துணைத்தலைவர் ஜோ ரூட் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இதுவரை 25 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ள அவர் ஒரு இரட்டைச்சதம், ஆறு சதம், ஒன்பது அரைச்சதங்களை விளாசியுள்ளார். கடந்த ஆண்டில் மட்டும் ரூட் டெஸ்ட் ஆட்டங்களில் ஆயிரத்து 135 ஓட்டங்களை 94.58 என்ற சராசரியில் குவித்துள்ளார். சமீபத்திய தொடர்களில் இங்கிலாந்து அணி தடுமாறி வரும் நிலையில், இளம் வீரரான ரூட் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# மீண்டும் முகமது சமி

## சிம்பாப்வேயிற்கு எதிரான பாகிஸ்தான் அணியில்

சிம்பாப்வேக்கு எதிரான பாகிஸ்தான் அணியில் நீண்ட இடைவேளைக்குப்பின்னர் வேகப்பந்து வீச்சாளர் முகமது சமி மற்றும் சகலதுறை வீரர் ஷோயப் மாலிக் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும் பங்களாதேஷுக்கு எதிரான தொடரில் நீக்கப்பட்ட உமர் அக்மல் மீண்டும் அணியில் இணைக்கப்பட்டுள்ளார். இதுவரை விளையாடாத இம்மத் வாசிம், நோமான் அன்வர் ஆகிய புதுமுகங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

'ரி-20' அணி வருமாறு: ஷகித் அப்ரிடி (தலைவர்), சர்பராஸ் அகமது, அகமது ஷெசாத், ஹபீஸ், முக்தர் அகமது, நோமன் அன்வர், [illegible] முகமது ரிஸ்வான், அன்வர் [illegible] வாசிம், பிலாவல் பட்டி, வஹாப் ரியாஸ், முகமது சமி. (ரி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்திய அணியின் பயிற்சியாளராக கங்குலி?

டன்கன் பிளெட்சருக்குப் பிறகு இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளரைத் தேர்ந்தெடுக்கும் பணியில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டச்சபை தீவிரம் காட்டி வரும் நிலையில் கங்குலி பயிற்சியாளராக சுனில் கவாஸ்கர் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

கங்குலி பயிற்சியாளராவது தொடர்பாக கவாஸ்கர் தெரிவித்திருப்பதாவது:

நடப்பு வருடத்தில் வரும் தொடர்களை இந்தியா சொந்த மண்ணில் விளையாடுவதால் கங்குலி இந்திய அணியின் பயிற்சியாளராக இதுவே சிறந்த தருணம். கங்குலிக்கு கால அவ…சம் இருந்தால் ஏதோ ஒரு விதத்தில் அவர் இந்திய அணியின் பயிற்சியாளராகவோ அல்லது அணியின் இயக்குநராகவோ பொறுப்பேற்கலாம். கங்குலி ஒரு அனுபவ வீரர். வெளிநாட்டு மண்ணில் இந்திய அணி சிறப்பாகச் செயற்பட வேண்டுமாயின் கங்குலிதான் பயிற்சியாளராக நியமிக்கப்பட வேண்டும்.' என்றார். அதாவது லாங்கர் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டால் இந்திய வீரர்களைப்பற்றி தெரிந்துகொண்டு செயற்பட ஆரம்பிக்க சற்று கால அவகாசம் தேவைப்படும் என்பது கவாஸ்கரின் கருத்து. ஆனால் இது குறித்து கங்குலி தரப்பிலிருந்து எந்த வித கருத்தும் இதுவரை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

## பீற்ற…சன் புறக்கணிக்கப்பட்டமைக்கு அலிஸ்டர் குக்கே காரணம்




கெவின் பீற்றர்சனுக்கு இங்கிலாந்து அணியில் இடம் மறுக்கப்பட்டதன் பின்னணியில் அலிஸ்டர் குக் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக இங்கிலாந்து ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இங்கிலாந்து அணியில் மீண்டும் இடம்பெற சர்ரே கழக அணிக்காக விளையாடி பீற்றர்சன் முச்சதம் அடித்து அசத்தினார். இருப்பினும், கெவின் பீற்றர்சனை மீண்டும் அணியில் தெரிவு செய்யும் வாய்ப்பில்லை என்று இங்கிலாந்து அணிக்கு இயக்குநராக நியமிக்கப்பட்ட ஆண்ட்ரூ ஸ்ஹிராஸ் பீற்றர்சன் கனவுக்கு முடிவு கட்டினார். இந்த நிலையில் இதன் பின்னணியில் இங்கிலாந்து அணித்தலைவர் அலிஸ்டர் குக் இருப்பதாக இங்கிலாந்தின் 'தி டெலி கிராப்' ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. குக்கின் சூழ்ச்சி தொடர்பாக குறித்த ஊடகம் தெரிவித்ததாவது பீற்றர் … மீண்டும் அணியில் தெரிவு செய்யப்பட்டால் அணித்தலைவர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவிக்குமாறு இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபைக்கு குக் தெரிவித்துள்ளார். பீற்றர்சன் தனது சுயசரிதையில் குக் தொடர்பாக முன்வைத்த கடும் விமர்சனங்களையடுத்து பீற்றர்சன் ஆதரவாளர்கள் குக் மீது அதிருப்தி தெரிவித்தனர். இதனை பழிதீர்க்க வேண்டும் என்பதற்காகவே குக் இவ்வாறு நடந்துகொண்டார் என்றுள்ளது. (ரி)

# சென்னையின் தோல்விக்கு நடுவரே காரணம்

### பகிரங்கமாகத் தெரிவிக்கிறார் டோனி



நடப்பு ஐ.பி.எல். தொடரின் முதலாவது தகுதியாட்டத்தில் நடுவரின் தீர்ப்புக்கு எதிராக கருத்து தெரிவித்ததாக சென்னை அணித்தலைவர் டோனிக்கு ஊதியத்தில் இருந்து 10 சதவீத அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த முதலாவது விலகலாட்டத்தில் சென்னை மும்பையிடம் 25 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இந்தத்தோல்விக்கு நடுவரின் தீர்ப்பும் ஒருகாரணமாக அமைந்துவிட்டது. சென்னை துடுப்பெடுத்தாடிய பொழுது முதல்பந்துப்பரிமாற்றத்தை மலிங்க வீசினார். மலிங்கவின் பந்தில் சிமித் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார்.

117.4 கி.மீ. வேகத்தில் மலிங்க வீசிய அந்தப்பந்து விக்கெட்டில் படாமல் மூன்றாவது இலக்குக்கு மிகவும் அப்பால் விலகிச்சென்றது. சென்னையின் ரசிகர்களுக்கு இந்தத்தீர்ப்பு நடுவர் வேண்டுமென்றே சதிசெய்தது போன்று தோன்றியது. பந்து எவ்வாறு செல்லும் என்று பெரிய திரையில் காட்டப்பட்டவேளையில் நடுவரின் இந்தத்தவறை பார்த்து தலையில் கைவைத்து நின்றார்கள் சென்னை ரசிகர்கள்.

இதனால் கடுப்பாகிப் போன டோனி ஆட்டம்முடிந்து நேர்காணல்கொடுத்த பொழுது 'சிமித்துக்கு வழங்கப்பட்ட எல்.பி.டபிள்யூ. முடிவு மோசமானது என்றும், இதனை எங்களால் மறக்க இயலாது. சென்னை இன்று தோற்றுள்ளது என்றால் இதில் நடுவரின் தவறான முடிவும் காரணம்' என்றும் நேரடியாகச் சுட்டிக்காட்டினார். இதனையடுத்து டோனிக்கு கண்டனம் தெரிவிக் கப்பட்டுள்ளதுடன் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. (ரி)

## சென்னையின் தோல்விக்கு காரணம் ஹர்பஜென் வீசிய இரண்டு பந்துகளே

### தெரிவிக்கிறார் பிளெமிங்



மும்பைக்கு எதிரான முதலாவது விலகல் ஆட்டத்தில் சென்னையணி 25 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. சென்னையின் இந்தத் தோல்விக்கு ஹர்பஜன்சிங் வீசிய இரண்டு பந்துகளே காரணம் என்று பிளெமிங்கே தெரிவித்துள்ளார்.

ஹர்பஜெனின் பந்துவீச்சு தொடர்பாக பிளெமிங் தெரிவித்ததாவது 'ஹர்பஜன் வீசிய இரண்டு பந்துகள் சென்னை அணியை தோல்வியடைய வைத்தன. ரெய்னா மற்றும் டோனி ஆகிய இரு முக்கிய வீரர்களை அடுத்தடுத்த பந்துகளில் ஹர்பஜன் வீழ்த்தியது சென்னை; தோற்க காரணம்' என்றார்.

நன்றாக விளையாடிக்கொண்டிருந்த ரெய்னாவை 25 ஓட்டங்களில் வைத்து தனது பந்தில் தானே பிடியெடுப்பு நிகழ்த்தி ஆட்டமிழக்கச்செய்த ஹர்பஜன், அடுத்த பந்திலேயே டோனியை எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழக்க வைத்து அசத்தினார். இதனால் மும்பை அணியின் வீரர்களும், ரசிகர்களும் உற்சாகத்தின் எல்லைக்கே சென்றனர். இதனால்தான் ஆட்டத்தில் திருப்புமுனை ஏற்பட்டு மும்பை வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. (ரி)

## டோனிக்கும் சென்னைக்கும் ராஞ்சியில் பலத்த வரவேற்பு



இரண்டாவது தகுதியாட்டத்தில் சென்னையணி ராஞ்சியில் மோதவுள்ளதால் ராஞ்சியில் சென்னைக்கும் டோனிக்கும் பலத்த வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நடப்பு ஐ.பி.எல். தொடரின் முதலாவது தகுதியாட்டத்தில் தோல்வியடைந்த சென்னை அணி இரண்டாவது தகுதியாட்டத்தில் விலகலாட்டத்தில் வெற்றிபெறும் அணியுடன் பலப்பரீட்சை செய்யும். இந்த இரண்டாவது தகுதியாட்டம் டோனியின் சொந்த ஊரான ராஞ்சியில் நடைபெறவுள்ளது. இதனால் இரண்டாவது தகுதியாட்டத்தில் சென்னை அணி டோனியின் சொந்த ஊரான ராஞ்சியில் விளையாடவுள்ளதால் டோனிக்கு அவரது சொந்த நகரில் பலத்த வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் சென்னை அணியின் இரண்டாவது சொந்த மைதானமாக ராஞ்சி மைதானம் மாறியுள்ளது. ராஞ்சியிலும் சென்னை அணிக்கு தற்பொழுது பெரிய ஆத ரவு எழுந்துள்ளதால் சென் னையின் வெற்றிவாய்ப்புக்கள் ராஞ்சியில் அதிகம் உள்ளதாகத் தெரிகிறது. (ரி)

## பங்களாதேஷுக்கு எதிரான இந்திய அணி அறிவிப்பு

### மீண்டும் வந்தார் ஹர்பஜன்சிங்



இந்தியா எதிர் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான தொடருக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. ஹோக்லி தலைமையிலான இந்தஅணியில்நீண்ட காலமாக அணியில் இணைவதில் சிக்கலில் இருந்த ஹர்பஜன்சிங் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளார். அதே போல் ஒரு நாள் ஆட்டத்துக் கான அணியில் காயமடைந்த முகமது ஷமிக்கு பதிலாக தவால் குல் கர்னி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

டெஸ்ட் அணி விவரம் வருமாறு: ஹோக்லி(தலைவர்), முரளி விஜய், தவான், கே.எல்.ராகுல், புஜாரா, ரஹானே, ரோகித், சாகா, அஷ்வின், ஹர்பஜன், கரன் சர்[illegible] னேஸ்வர் குமார், உமேஷ் [illegible] வருண் ஆரோன் மற்றும் இஷாந்த் சர்மா ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

ஒரு நாள் ஆட்டத்துக்கான அணி விவரம் வருமாறு: டோனி (தலைவர்), ரோகித், ரகானே, தவான், ஹோக்லி, ரெய்னா, ராயுடு, அஷ்வின், ஜடேஜா, அக்சர் படேல், புவனேஸ் [illegible] தவால் குல்கர்னி ஆகி யோருக்கு வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளது. (ரி)

## அனுஸ்காவைக் கட்டியணைத்த ஹோக்லி



நடப்பு ஐ.பி.எல். தொடரின் இறுதி லீக் நாளில் நடைபெற்ற இரண்டு ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் பெங்களூர் எதிர் டெல்லி அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் மழை குறுக்கிட ஆட்டம் நீண்ட நேரமாக நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த இடைவெளிக்குள் தனது காதலி இருந்த இடத்துக்குச் சென்று அவருடன் கட்டித்தழுவி உரையாடியுள்ளார் பெங்களூர் அணியின் தலைவர் ஹோக்லி.

ஹோக்லி அனுஸ்காவுடன் உரையாடிய காட்சி மைதானத்தில் உள்ள அகன்ற திரையிலும் ஒளிபரப்பு செய்யப்பட்டது. ஆட்டத்தில் கடைசிப்பந்து வீசி முடிக்கப்படும் வரை வீரர்கள் யாரும் பார்வையாளர்களை சந்தித்து பேசக்கூடாது என்பது விதி. இது குறித்து இந்திய கிரிக்கெட் வாரியத்தின் ஊழல் தடுப்பு பிரிவு வீரர்களுக்கு விரிவாக எடுத்துரைத்துள்ளது. இந்த நிலையில் விராட்ஹோக்லி விதியை மீறி காதலியுடன் பேசியது சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது.

இதனையடுத்து இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும் ஐ.பி.எல். ஊழல் தடுப்புப்பிரிவும் ஹோக்லியை கண்டித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசைக்க முடியாத ஜோகோவிக்

நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்த இத்தாலி ரென்னிஸ் தொடரில் கிண்ணம் வென்றதன் மூலம் தொடர்ந்தும் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தில் நீடிக்கக்கூடிய தகுதியைப் பெற்றுள்ளார் ரென்னிஸ் ஜாம்பவானான ஜோகோவிக்.

இத்தாலியின் தலைநகரான ரோம் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் ரென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளவரான ஜோகோவிக் தரவரிசைப் பட்டியலில் இரண்டாம் இடத்தில் உள்ளவரான பெடரருடன் மோதினார். தரவரிசையில் முதல்தர வீரரும் இரண்டாம் தர வீரரும் மோதிய காரணத்தினால் ஆட்டம் அனல்பறக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்த போதிலும் மிக இலகுவாக ஜோகோவிக் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றினார். இந்த வெற்றியை அடுத்து தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிக்கக்கூடிய தகுதியைப் பெற்றுள்ளார் ஜொகோவிக்.

முதலிடத்தில் உள்ள ஜோகோவிக்குக்கும் இரண்டாம் இடத்தில் உள்ள பெடரருக்கும் ஏற்கனவே சற்று அதிகமான புள்ளிகள் அடிப்படையில் வித்தியாசம் இருந்தது இதனையடுத்து தற்பொழுது இந்த வித்தியாசம் இன்னும் அதிகமாகியுள்ளது. அதேநேரம் நடால் தரவரிசையில் தனது மூன்றாவது இடத்தைப் பறிகொடுக்கும் பரிதாபமும் ஏற்பட்டுள்ளது. (ரி)



## ஐ.பி.எல். தொடரில் அசத்திய டோனி

நடப்பு ஐ.பி.எல். தொடரின் முதலாவது தகுதியாட்டத்தில் டோனி, பிராவோ, பொலார்ட் ஆகியோரால் சில சாதனைகள் பதியப்பட்டுள் ளன.

நடப்பு ஐ.பி.எல். தொடரின் முதலாவது தகுதியாட்டத்துக்கு தலைமை தாங்கியதன் மூலம் இருநூறு ஐ.பி.எல். ஆட்டங்களுக்கு தலைவராக செயல்பட்டு புதிய சாதனை படைத்துள்ளார். மேலும் நேற்றைய ஆட்டத்தில் மும்பை வீரர் பார்த்திவ் பட்டேலை வீழ்த்திய சென்னையின் பிராவோ, ஐ.பி.எல். அரங்கில் 1000 ஓட்டங் கள், 100 இலக்குகள் என்ற மைல் கல்லை எட்டிய முதல் சகலதுறை வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

(ரி)

# மஹெலவுக்கும் அழைப்பு

## ஓய்வுபெற்ற ஜாம்பவான்கள் தொடருக்காக



சச்சின், ஷேன் வோர்ன் இணைந்து நடத்தவுள்ள புதிய ஓய்வுபெற்ற வீரர்களுக்கான ரி–20 தொடரில் விளையாட இலங்கை அணியின் நட்சத்திர வீரர் ஜெயவர்த்தனவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

முன்னாள் நட்சத்திர வீரர்கள் பங்கேற்கும் 'லெஜண்ட்ஸ் பிரிமியர் லீக்– ரி–20' என்ற தொடரை முன்னாள் ஜாம்பவான்களான சச்சின் டெண்டுல்கர் மற்றும் ஷேன் வோர்ன் இணைந்து நடத்த திட்டமிட்டுள்ளனர். இந்த தொடருக்கு சச்சின், வோர்ன், கில்கிறிஸ்ட், ரிக்கி பொண்டிங், மெக்ராத், பிரெட் லீ, கலீஸ், நில் மெக்கன்சி, பிளிண்டாப் உள்ளிட்ட 28 வீரர்கள் தெரிவாகியுள்ளனர். வீரர்களுக்கு ஒரு தொடருக்கு 25 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் ஊதியமாக கிடைக்கும் வகையில் ஒப்பந்தம் செய்யப்படவுள்ளது. கிரிக்கெட்டை உலகெங்கும் கொண்டுசெல்லும் நோக்கத்தில் ஆரம்பமாகவுள்ள இந்தத்தொடர் அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளிலேயே நடைபெற உள்ளன.

இந்தத்தொடருக்கு இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரும், நட்சத்திர துடுப்பாட்ட வீரருமான மஹேல ஜெயவர்த்தனவுக்கும் அழைப்பு விடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (ரி)

## ஷரபோவா முன்னேற்றம்

ரஷ்யாவின் முன்னணி ரென்னிஸ் வீராங்கனையான மரியா ஷரபோவா ரோம் கிண்ணத்தை வென்றதன் மூலம் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். உலக ரென்னிஸ் சம்மேளனம் பெண்களுக்கான ரென்னிஸ் தரவரிசைப் பட்டியலை இன்று வெளியிட்டது. இதில் மரியா ஷரபோவா 2ஆவது இடத்திற்கு முன்னேறினார். இவரிடம் தோல்வியடைந்த கார்லா சுவாரஸ் முதன்முறையாக 8ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

சுவாரஸ்க்கு எதிரான அரையிறுதியில் தோல்வியடைந்த ரோமானியாவைச் சேர்ந்த சிமோனா ஹாலேப் 2ஆவது இடத்திலிருந்து 3ஆவது இடத்திற்கு பின்தங்கினார். செரீனா வில்லியம்ஸ் தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறார். (ரி)

## றொனால்டோ முதலிடம்

### மெஸ்ஸி, நெய்மரைப் பின்தள்ளி



லாலிகா தொடரில் அதிக கோல்களை அடித்தவர் பட்டியலில் 45 கோல்களை அடித்து ரியல் மாட்ரிட் அணியின் கிறிஸ்டியானோ றொனால்டோ முதலிடம் பிடித்துள்ளார்.

ரோனால்டோவுக்கு அடுத்தபடியாக பார்சிலோனா அணியின் லயோனல் மெஸ்ஸி 41 கோல்களை அடித்து 2ஆவது இடத்தைப் பிடித்தார். பார்சிலோனா அணியின் நெய்மர், அட்லெடிகோ மாட்ரிட் அணியின் ஆண்டனி கிரீஸ்மேன் ஆகியோர் தலா 22 கோல்களை அடித்து 3ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டனர்.

இதைத் தவிர அதிக 'ஹாட்ரிக்' கோல் அடித்த வீரர்கள் பட்டியலிலும் றொனால்டோ முதலிடத்தில் உள்ளார். அவர் இந்தத்தொடரில் 7 முறை ஹாட்ரிக் கோல் அடித்துள்ளார். அதற்கு அடுத்ததாக மெஸ்ஸி 5 முறை ஹாட்ரிக் கோல் அடித்துள்ளார். (ரி)

# முதலிடத்தில் நீடிக்க சானியாவுக்கு சிக்கல்



சர்வதேச ரென்னிஸ் தரவரிசையின் பெண்கள் இரட்டையர் பிரிவு ஆட்டங்களில் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள சானியா மிர்ஷா மற்றும் ஹிங்ஹிஸ் ஜோடி தமது முதலிடத்தை பறிகொடுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இத்தாலி ரென்னிஸ் தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் தோல்வியடைந்த மிர்ஷா ஜோடி அதற்கு முன்னர் நடைபெற்ற ஜேர்மன் தொடரிலும் கிண்ணத்தைக் கைப்பற்ற முடியவில்லை. சானியா – ஹிங்ஹிஸ் ஜோடிக்கும் புள்ளிப்பட்டியலில் இரண்டாம் இடத்தில் இருந்த ஜோடிக்கும் ஏற்கனவே சில புள்ளிகள் மட்டுமே வித்தியாசம் இருந்த நிலையில் தற்பொழுது சானியா ஜோடியின் தொடர்தோல்விகளால் அவர்களுக்கு முதலிடத்தைப் பறிகொடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சில வேளைகளில் அடுத்து வெளியாகும் புதிய தரவரிசைப் பட்டியலில் சானியா ஜோடி பின்தள்ளப்படலாம் என்றும் பொதுவான அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. இத்தாலி தொடரில் கிண்ணத்தை இழப்பதற்கு இரண்டாவது செற்றில் சானியா பல தவறுகளை செய்தமையே காரணம் என்றும் சொல்லப்படுகிறது. (ரி)

விசேட
சகுத்தரங்குகள்
ஞாயிறு 1.00 மணி
ஞாயிறு 11.00 மணி
ஞாயிறு 2.00 மணி
T.P. 0766883394

காணி விற்பனைக்கு
தென்மராட்சி சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட கொல்வில்லைப் பெருமாணம் மறு பிரிவு களும் நிலப்பரப்பு (10) உடைய காணி விற்பனைக்குண்டு மொத்தமாகவும் பகுதியாகவும் பிரித்துத்தரப்படும்.
தொ.பே: 077 9672690, 077 3057268

Architectural CAD Centre
"Personal and Group" Educational Training College
Civil
Surveying
Mechanical
Auto
2D-Drawing &
3D-Modeling
Technical College Students
Engineering Students
Draughtsmans
Architectures
Engineers
University of Peratheniya
University of Moratuwa
CAD
Contact No:071-8617972 -0775116320

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 23.05.2015 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00
SAAMSON
021 320 3313
077 621 4567

## சரவணை செல்வரத்தினம்



உரும்பிராயைப் பிற[illegible]மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை செல்வரத்தினம் கடந்த (18.05.2015) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை - கதிராசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் -வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கமலா தேவியின் அன்புக் கணவரும், பவளமலர், சாராதாம்பாள், நவரத்தினம் (ஜேர்மனி), சீவரத்தினம், சபாரத்தினம், குபேந்திரன் (குணம் - C.T.B- பிரான்ஸ்), ஈஸ்வரி, சந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தெய்வானை, இலச்சுமி, இராசதுரை மற்றும் சின்னம்மா, இரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2015) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

உரும்பிராய். (சி. பொன்னுத்துரை)

வெளிவந்து விற்பனையாகிறது !
யாழ் எக்ஸ்பிரஸ்
நாடளாவரீதியில் 12 முன்னணி ஆசிரியர்களின் ஆக்கத்தில்
தரம் 1, தரம் 2, தரம் 3, தரம் 4, தரம் 5 வரை மாணவர்களுக்கு
இரண்டாம் தவணை
12 மாதிரி வினாத்தாள்கள் விடையுடன்
தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் ஆகிய பாடங்களின் 12 வினாத்தாள்கள்
விற்பனையாளர்கள், பாடசாலைகள் தொடர்பு கொள்ளவும்– 011 4014438
வெளியீடு :
யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
இல. 10-11 ( Trust Complex Sea Street) முதலாம் மாடி, கொழும்பு 13. தொ.பே: 077 6258778
விலை :
தரம் 1, 2 - 140/-
தரம் 3, 4, 5 - 150/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.